விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 தை 08 வியாழக்கிழமை (22.01.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 034

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

## ஜெனரலானார் பொன்சேகா

### பூரண மன்னிப்பை வழங்கினார் ஜனாதிபதி



(கொழும்பு)


முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிரான சகல குற்றச்சாட்டுக்களில் இருந்து அவரை முற்றாக விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று உத்தரவிட்டுள்ளார்.

இதனடிப்படையில், சரத் பொன்சேகாவுக்கு உடனடியாக ஜெனரல் பதவி மற்றும் இராணுவத்தில் வழங்கப்பட்ட பட்டங்கள், பதக்கங்கள், ஓய்வூதியம் என்பன மீண்டும் வழங்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(24 ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருட்களின் விலை குறைக்கப்பட்டுள்ளது

### பெற்றோல் ரூ. 117, டீசல் ரூ. 95 மண்ணெண்ணெய் ரூ. 65



(கொழும்பு)

நேற்று நள்ளிரவு முதல் அமுலுககு வரும் வகையில் எரிபொருட்களின் விலை குறைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் கலந்து கொண்ட அமைச்சரவைக் கூட்டத்தில இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இதனடிப்படையில், 92 ரக பெற்றோல் 117 ரூபாயாகவும் (33 ரூபாய் விலை குறைப்பு), 95 ரக பெற்றோல் 128 ரூபாயாகவும் (30 ரூபாய் குறைப்பு), சாதாரண டீசல் ஒரு லீற்றர் 95 ரூபாயாகும் (16 ரூபாய் குறைப்பு), சுப்பர் டீசல் 110 ரூபாயாகவும் (23 ரூபாய் குறைப்பு), மண்ணெண்ணெய் விலை 65 ரூபாயாகவும் (16 ரூபாய் குறைப்பு) குறைக்கப்பட்டுள்ளது. (செ-11)

## கொடூர வாள்வெட்டு

### கணவன் பலி, மனைவி படுகாயம், இரட்டைக் குழந்தைகள் அருந்தப்பு

(யாழ்ப்பாணம்)

நள்ளிரவு வேளை வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த ஆயுததாரிகள் மேற்கொண்ட மூர்க்கத்தனமான வாள்வீச்சில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இப் பயங்கர சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10.15 மணியளவில் சுழிபுரம் - காட்டுப்புலம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த குடும்பஸ்தரின் மனைவி படுகாயங்களுக்குள்ளான நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார்.

இதில் சுழிபுரம் காட்டுப்புலத்தைச் சேர்ந்த மகேந்திரன் சுஜந்தன் (வயது 27) என்ற இளம் குடும்பஸ்தரே வெட் 23 ஆம் பக்கம் பார்க்க....

## காணி சுவீகரிப்பை தவிர்

### த.தே.ம. முன்னணி போராட்டம்



(யாழ்ப்பாணம்)

வடக்கில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் காணி சுவீகரிப்புக்களினை தடுத்து நிறுத்தக்கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டம் இடம் பெற்றுள்ளது.

ஆனைக்கோட்டை கூழாவடி இராணுவ முகாம் முன்பாகவே இவ் ஆர்ப்பாட்டம் நேற்று 23 ஆம் பக்கம் பார்க்க....

## எமது நன்னீரை நஞ்சாக்காதே !

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கழிவெண்ணெய் பிரச்சினைக்கு உடனடியாக நடவடிக்கையெடுக்கக் கோரி தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்கள் பெரும் ஆர்ப்பாட்டமொன்றினை முன்னெடுத்திருந்தனர்.

மாணவர், ஆசிரியர் வாய்களில் நச்சு நீரினை ஊற்றாதே என்ற ஒருமித்த கோசத் 23 ஆம் பக்கம் பார்க்க....

## பட்டதாரிகள் நேற்று கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)


வடக்கு மாகாணத்தினைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகள் அரச நியமனம் கோரி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இவர்களோடு சேர்ந்து எச்.என்.டி.ஏ.பட்டதாரிகளும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இவ் ஆர்ப்பாட்டம் நேற்றுக் காலை 10.00 மணியளவில் யாழ. மாவட்டச் செயலகத்திற்கு அருகாமையில் 23 ஆம் பக்கம் பார்க்க....

## பதவி விலகுகிறார் பிரதம நீதியரசர்

### ரணிலின் அறிவிப்பை ஏற்க மொஹான் சம்மதம்



(கொழும்பு)

பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸை பதவி விலகுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இந்த அறிவுறுத்தலை மொஹான் பீரிஸ் ஏற்றுக்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.


பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது. தாம் பதவியை ராஜினாமா செய்வதாக மொஹான் பீரிஸ் பிரதமர் ரணிலிடம் உறுதியளித்தார் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் வைத்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசராக கடமையாற்றி வந்த ஷிரானி பண்டாரநாயக்கவிற்கு எதிராக பிரேரணை முன்வைத்த மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அவரை பணி நீக்கி மொஹான் பீரிஸிற்கு அந்தப் பதவியை வழங்கியிருந்தது. இந்நிலையில் தற்போது பதவியை விட்டு விலகுவதாக மொஹான் பரிஸ் உறுதியளித்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. (செ-11)

## இனப்பிரச்சினைக்கு தீர்வு காணாது தேர்தலை நடத்தியது மகிந்த தவறு

### தோல்வியை எச்சரித்தும் அவர் கேட்கவில்லை – டியூ



(கொழும்பு)

உடனடியாக ஜனாதிபதித் தேர்தலை நடத்தி வெற்றிபெற முடியும் என வேறு பலர் மகிந்த ராஜபக்ஷவிடம் கூறிய போதும் வெற்றிபெற முடியாது என தாம் நான்கு தடவைகள் மகிந்த ராஜபக்ஷவுக்கு விரிவாக தெளிவுப்படுத்தியதாக முன்னாள் அமைச்சர் டியூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.


அரசியல் சாதக நிலைமை பற்றி அரசியல் பாடத்தை அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவும் அது வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதற்காகவும் நான் இதனை கூறுகிறேன். 24 ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகேஸ்வரன், ஜெயராஜ், ரவிராஜ் படுகொலைகள்

## உண்மைத் தகவல்கள் கிடைத்துள்ளன உடன் விசாரணைக்கு நடவடிக்கை–ராஜித



படுகொலை செய்யப்பட்ட அரசியல்வாதிகளான மகேஸ்வரன் ஜோசப் பரராஜசிங்கம், ஜெயராஜ் பெர்னாண்டோ, நடராஜா ரவிராஜ், மற்றும் ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க ஆகியோரின் படுகொலைகளுக்கு காரணமானவர்கள் யார் என்பது தொடர்பான தகவல்கள் எமக்கு கிடைத்துள்ளன. உடனடியாக நாம் விசாரணைகளை மேற்கொண்டு சட்ட நடவடிக்கை எடுப்போம் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ரவிராஜ் என்னுடைய சிறந்த நண்பராக இருந்தார். மேலும் அவர் திக்கி திக்கி பேசும் சிங்கள மொழியை கேட்க சிங்கள மக்களுக்கு மிகவும் விருப்பம். தமிழ் மக்களின் பிரச்சினைகளை அனைவருக்கும் தெரியப்படுத்தினார். அவர் கொலை செய்யப்பட்டதும் சிங்கள மக்கள் மிகவும் கவலையடைந்தனர்.

இதேபோன்று இவருடைய இறுதி கிரியைகளை நானே பொறுப்பேற்று செய்தேன். மேலும் இவரது பிரேதத்தை தகனம் செய்ய விடாது தடுத்தனர். ஆனால் நான் வீதியில் வைத்து பிரேதத்தை எரிப்பேன் என கூறி ஆர்ப்பாட்டம் செய்ததையடுத்து அப்போது சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சராக இருந்த தற்போதைய பொலிஸ்மா அதிபர், சரியான முறையில் பிரேதத்தை தகனம் செய்ய உதவி செய்தார்.

மேலும் ஜெயராஜ் பெர்னாண்டோவை புலிகள் கொலை செய்தார்கள் என கூறப்பட்ட போதும் எமக்கு சந்தேகம் ஏற்பட்டது. இந்நிலையில் இவருடைய படுகொலை தொடர்பான தகவல்கள் எமக்கு கிடைத்துள்ளன.

ஜெயராஜ் பெர்னாண்டோ, நடராஜா ரவிராஜ் போன்றோர் தற்போது இருந்திருந்தால் தமிழ் மக்களுடனான உறவு எவ்வாறு அமைந்திருக்கும் என முன்னாள் ஜனாதிபதியிடம் ஒருமுறை கூறினேன். ஆனால் அதற்கு அவர் இராணுவத்தினருக்கு அரசியல் பற்றி ஒன்றும் தெரியவில்லை என்றார்.

இதேபோன்று ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்ட பின்னர் நான் அரசாங்கத்திலிருந்து விலகப்போவதாக பரபரப்பாக செயற்பட்டேன். இதனை முன்னாள் அமைச்சர் தினேஸ் குனவர்த்தனவிடமும் கூறினேன். இதனை அவர் மகிந்த ராஜபக்ஷவிடம் கூறினார். அதற்கு அவர் என்னிடம், நீங்கள் ஒன்றும் குழப்பமடைய வேண்டாம் அமைதியாக இருங்கள் என்றார். இந்த செயலை செய்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கின்றேன் என்றார். ஆனால் இதுவரையில் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கத்தில் இந்த சம்பவங்கள் தொடர்பான விசாரணை குழு அமைக்கப்பட்டு குற்றவாளிகளை நீதி மன்று முன் நிறுத்துவோம் என்றார். (செ-11)


SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-8284) (சி-9882)



### பயிற்சி நெறி

சேதன விவசாய (Organic farming) பயிற்சி உலகின் தலைசிறந்த பேராசிரியர் Dr.Richard அவர்களால் இரு நாட்கள் நடத்தப்படுகின்றது. விண்ணப்பங்கள் 27.01.2015க்கு முன் பதிவு செய்யவும்.

**தொடர்பு:-0776549303**
(9215)



### 10வது பிறந்தநாள் வாழ்த்தும் புலமைப்பரிசில் பாராட்டும்



செல்வன்
**யேசுதாசன் கஸ்ரோன்**
(யா/மணற்காடு றோ.க.த.க.பாடசாலை)

மாணவன் யேசுதாசன் கஸ்ரோன் அவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 159 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்ததையிட்டு அவரை பிறந்தநாளில் பாராட்டுவதோடு வாழ்த்தும் கூறி அவர் மேன்மேலும் பல சாதனைகளை புரிய இறைவனை வேண்டி நிற்கின்றோம். மேலும் அவரை வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்தி நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, தங்கை மற்றும் உறவினர்கள்

மணற்காடு, குடத்தனை.
(C-9891)


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## VACANCIES

university of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned post up to 05.02.2015

FACULTY OF AGRICULTURE

Temporary Lecturer in
Agronomy / Agricultural Biology / Agricultural Chemistry / Agricultural Economics
Temporary Demonstrator in
Agronomy / Agricultural Biology / Agricultural Chemistry / Animal Science / Agricultural Economics / Agricultural Engineering

| POST | SALARY |
|---|---|
| Temporary Lecturer | Rs. 26020/- p.m (fixed) |
| Temporary Demonstrator | Rs.21370/- p.m (fixed) |

Other allowances approved by University Grants Commission will also be paid.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs 100/= per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a **self-addressed stamped envelope** 23x10 c.m in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk.** Those who wish to send the downloaded application forms through the University website should be attached a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Application for the above posts should be sent to the Deputy Registrar/Academic Establishments, University of Jaffna.

Those who wish to apply **for more than one post** should make **separate applications.**

Applicants from the University System/Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Heads of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR**
2015.01.21
(C-9888)

## கூறுவிலை கோரல்

வடக்கு மாகாண சபையின் 2015-ம் ஆண்டுக்கான சபை அமர்வுகள் மற்றும் கூட்டங்களின் போது வழங்கப்படும் உணவுகள், சிற்றுண்டிகள், குடிதண்ணீர்ப் போத்தல்கள் மற்றும் அலுவலக நடவடிக்கைகளுக்கான காகிதாதிகள், அலுவலக சுத்திகரிப்பு செய்வதற்கான பொருட்கள் அச்சிடல் போன்றவற்றுக்கான கூறுவிலை கோரப்படுகின்றது.

கூறுவிலை கோரல் படிவங்களை A9 வீதி, கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபையின் நிதிக் கிளையில் அலுவலக நேரத்தில் 23.01.2015 தொடக்கம் 06.02.2015 வரை பெற்றுக் கொள்ளலாம்.

**செயலாளர்**
**பேரவைச் செயலகம், வடக்கு மாகாண சபை.**
(சி-9889)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
### FACULTY OF MANAGEMENT STUDIES & COMMERCE
### WALK-IN-INTERVIEW

Walk in interview for appointment to the post of Programme Management Assistant (on contract) for Master of Business Administration will be held at 02.02.2015 on 9.30 am at the Board Room of this University

Candidates who have the following qualifications are invited for a Walk in Interview, with a self prepared application for the above post:
(i) Minimum requirement is 3 passes in G.C.E (A/L)
(ii) Should have excellence written and oral communication Skills
(iii) Should have Computer Applications Skills in MS Office, Internet & e-Mail and typing Skill in English and Tamil.

| POST | SALARY SCALE |
|---|---|
| Programme Management Assistant (on contract) | Rs.21,000/- p.m (fixed) |

Interested candidates with the required qualifications are expected to be present for the interview at time mentioned above with relevant certificates, NIC and self prepared application.

**Registrar**
University of Jaffna
20.01.2015
(c-9888)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலமைப்பை மாற்றுவதற்கு ஜே.வி.பி.ஒத்துழைப்பு வழங்கும்

## அநுரகுமார எம்.பி.உறுதியளிப்பு



(கொழும்பு)

**நாங்கள் முன்பே முன்வைத்த தகவல் அறியும் உரிமையை உறுதியாக ஆதரிப்போம் என்று தெரிவித்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க, ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்காக அரசியலமைப்பை மாற்றும் நடிவடிக் கைகளுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம் என்றும் தெரிவித் துள்ளார்.**

நாடாளுமன்றத்தின் 2015ஆம் ஆண்டுக்கான கன்னியமர்வு நேற்று முன்தினம் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் ஆரம்பமானது. அங்கு, பிரதமர் ரணில் விக்ரமசிங்க தனது கன்னியுரையை ஆற்றினார். அதனையடுத்து கட்சித்தலைவர்கள் உரையாற்றினர். இதன்போதே அநுர குமார திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கூட்டணியாக அமைக்கப்பட்ட அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சி எங்களுக்கு தேவையில்லை என்பதுடன் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்களையும் எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் கொண்டு அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மோசடி மற்றும் ஊழல்களில் ஈடுபட்ட அனைத்து நபர்களும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்பதுடன் ஊழல் பற்றி ஜனாதிபதி தேர்தல் விவாத மேடையில் பரவலாக பேசப்பட்டது. அவை தொடர்பில் கொஞ்சம் கொஞ்சம் வெளிச்சத்துக்கு தற்போது கொண்டுவரப்படுகின்றது.

பொதுமக்கள் மீதான வரிச் சுமையை குறைப்பதற்கு வரி விதிப்பு முறையில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்வதுடன் பொதுமக்களிடம் கப்பம் பெறும் மருந்து மாஃப்பியா குழுக்களுக்கு எதிராக நாங்கள் வேலை திட்டத்தை முன்னெடுக்கவேண்டும்.

நாங்கள் முன்பே முன்வைத்த தகவல் அறியும் உரிமையை உறுதியாக ஆதரிப்போம். ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்காக அரசியலமைப்பை மாற்றும் நடிவடிக் கைகளுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம்.வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கிலுள்ள மக்கள் தமது தேசிய தலைவரை தேர்தெடுப்பதற்காக தீவிரமாக வாக்களித்த்னர். கடந்த ஜனவரி 8 ஆம் திகதி கிடைத்த வெற்றிக்கு பங்களிப்பு வழங்கிய கட்சிகள் மற்றும் பொது மக்களுக்கு எமது நன்றிகள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## விழிப்புணர்வு செயலமர்வு

சங்கானை பிரதேச செயலகப் பிரிவிற்குட் பட்பட்ட முதியோர் சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் அ. சோதிநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழிப்புணர்வு செயலமர்வில் ஆர்வமுள்ள முதியோர்களும் பங்கு பற்ற முடியுமென சமூக சேவைகள் அலுவலர் வே.அருந்தவராசா அறிவித்துள்ளார். (இ-5)


**வெஸ்லி சினிமா**
ஆனைக்கோட்டை

யாழ்ப்பாணத்தில் தமிழ் இளைஞர்கள் நடித்த முதல் முழு நீளத்திரைப்படம்

S.R.பிரதீப் in

**தமிழ் பசங்க**

பிரதி ஞாயிறுதோறும் 3.00 p.m

(9208)


## மரண அறிவித்தல்

### அமரர் ஆரோக்கியநாதர் பேரின்பநாதன்



உயரப்புலம் ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆரோக்கியநாதர் பேரின்ப நாதன் (20.01.2015) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆரோக்கியநாதர் திரேசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பர்ணாந்து மற்றும் அன்பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும் லூர்த்துமேரியின் அன்புக் கணவரும், இன்வன்ராவின் அன்புத் தந்தையும் ஜெயராயசிங்கம், அருளானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் திரேசம்மா, யெனிற், காலஞ்சென்ற பிரான்சிஸ் மற்றும் அந்தோனி முத்து (பிரான்ஸ்), பிறேமா, நேசமலர்,நேசகிளி, அன்ரனிதாஸ் ஆகியோரின் மைத்துனரும், தீபன், தர்மினி,மோகன், யசோ, ஜெனிஸ் கொட், ராயன் ஆகியோரின் சிறிய தந்தையும், நிறோசன், நிசா, நிசாந்தினி, நிசாந்தன்,டினு,ஜெனிபர்,பவுஸ்ரீனா, ஜெசிக்கா, இலக்கியன், மரிஸ்ரெலா, சஞ்செயன், அனு, துளசிகா, அயய் ஆகியோரின் பெரிய தந்தையும், ஜெமித்தின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று வியாழக்கிழமை (22.01.2015) பிற்பகல் 3.00 மணி அளவில் ஆனையூர் அடைக்கல நாயகி ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் காக்கைதீவு ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஆலடி,**
**ஆனைக்கோட்டை.** (9203)

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**

## பகிரங்க ஏலவிற்பனை

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ். கிளையினரின் பாவித்த மர அலுமாரிகள், கதிரைகள், கட்டில்கள், இரும்பு அலுமாரிகள், இரும்புக் கதிரைகள், இரும்புக் கட்டில்கள், ஏனைய பாவித்த தளபாடங்கள் மற்றும் பாவித்த மின் விசிறிகள், கணனி உதிரிப்பாகங்கள், சுழல் நாற்காலிகள், மின்னியல் சாதனங்கள், குளிரூட்டிகள், கட்டட உதிரிப்பாகங்கள், கூரைத்தகடுகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் போன்ற பொருட்கள் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்பட இருக்கின்றது.

**இடம்:-** இலக்கம் 33, கலட்டி அம்மன் வீதி (கோவில் முன்பாக) யாழ்ப்பாணம்.

**காலம்:-** 24.01.2015 சனிக்கிழமை அன்று முற்பகல் 10.30 மணி

**பார்வையிடும் நேரம்:-** 24.01.2015 சனி காலை 9.00 மணிமுதல் 10.30 மணிவரை

**அனுமதி:-** அனுமதிக் கட்டணமாக ரூபா 100 அறவிடப்படும்.

**குறிப்பு:-** ஏலவிற்பனைக் குழுவின் முடிவே இறுதியானது.

(இ-9883)

## இராசி பலன்

22/01/2015

(தை 08, வியாழக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு,

துதியை பிற்பகல் 3.39 மணி வரை

அவிட்டம் முன்னிரவு 11.39 மணிவரை

இராகுகாலம் 2.05-3.35 மணிவரை

சுபநேரம் 8.05- 9.35 மணிவரை

வளவன்

**மீனம்**



ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், உறவினர்களின் மனஸ்தாபங்கள் ஏற்படாமல் பார்ப்பது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை.

**மேடம்**



ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும், குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள், ஆனந்தமான நாள், மதிப்பும் மரியாதையும் உயரும்.

**இடபம்**



சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், உறவினர்களும்,நண்பர்களும்வலியவந்து உதவுவார்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மிதுனம்**




அரைகுறையாக இருந்த பணிகளை விரைந்து செய்து முடிப்பீர்கள், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

**கும்பம்**



கற்பனை மிகுதியான நாள், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், தொழிலில் மேலதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது.

**கடகம்**



கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், பயணங்களால் பயமுண்டு, எடுத்தகாரியங்களை முடிக்க சற்று அலைச்சல்கள் ஏற்படலாம், தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு.

**மகரம்**



உங்களின் வார்ததைகளை பலரும் கேட்டு நடக்க முன்வரலாம், மாதர் நட்புண்டு, செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**சிம்மம்**



எடுத்தகாரியங்கள் எளிதில் கைகூடும், தன்னம்பிக்கையும், துணிவும் அதிகரிக்கும் நாள், வருமானம் திருப்திகரமாக அமையும், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

**தனுசு**



சகோதர வழியில் உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள், செய் தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**விருச்சிகம்**



சுபகாரிய செலவுகள் அதிகரிக்கும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, நலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**துலாம்**



வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், புண்ணிய காரியங்களில் நாட்டம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி**



சுவாரஸ்யமான நாள், செய் தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், தேக நலனில் புத்துணர்வுகள் ஏற்படலாம், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## ஆன்மீகம் 130

# மனக்கோட்டைகளைத் தகர்த்தல்!

மிதப்பது நின்று உண்மையான உறவு ஆரம்பிக்கும் பொழுதுதான், இடைவெளி குறைந்து நேரம் அதிகரிக்கும் பொழுதுதான் பிரச்சினை ஆரம்பிக்கிறது!

நீங்கள் சேகரிக்கும் கனவுகள் அதிகரிக்க அதிகரிக்கத் தரையைத் தொடுமுன் விழும் நேரமும் அதிகரிக்கும். அதனால் பாதிப்பும் அதிகமாக இருக்கும். உங்கள் கனவுகள் குறைவாக இருக்குமானால், நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடிய விடயங்களும் குறைவாக இருப்பதால் தொல்லைகளும் குறைவாகவே இருக்கும். உங்களிடம் எந்த விதமான கனவோ கற்பனையோ இல்லை என்றால் நீங்கள் உடனே உங்கள் ஆத்ம நாயகன் அல்லது நாயகியை சந்தித்து விடுவீர்கள். உங்களுக்குக் கனவுகளே இல்லாத பட்சத்தில் நீங்கள் கரம்பிடிக்கும் எவரும் உங்கள் ஆத்ம நாயகன் அல்லது ஆத்ம நாயகி ஆகிவிடுவர்.

உயிருடன் இருக்கும் எந்த மனிதனாலும் நம் மனதில் இருக்கும் உருவத்தின் அளவிற்கு வாழ முடியாதென்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் அந்த உருவம் நிஜத்திலிருந்து உருவானதல்ல! அந்த உருவம் நமது கற்பனை உலகின் பல பகுதிகளில் இருந்தும் வெட்டி ஒட்டப்பட்டது! எந்த உருவமும் நிஜத்துடன் பொருந்தாது- ஏனெனில், அது ஒரு வெறும் கனவு உருவம் மட்டுமே!

உங்கள் உருவங்களை நிஜ வாழ்வின் பாத்திரங்களில் இருந்தும் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும்- உங்களைச் சுற்றியுள்ள மனிதர்களிடம் இருந்தும் சேகரித்தால்கூடப் பரவாயில்லை. ஆனால், நீங்கள் ஊடகங்களிலிருந்து சேகரிக்கிறீர்கள். ஊடகங்களே இச்சையினால் தவித்துக் கொண்டிருக்கிறது. பிறகு அதனால் எவ்வாறு உங்களுக்கு ஏதேனும் ஒரு வழி காட்டுதலையோ அல்லது நிவாரணத்தையோ வழங்கமுடியும்?

அதனால்தான் பெயரளவிலான காதல் அனைத்தும், அநேகமாக வேதனையிலேயே முடிகின்றன. நாம் ஏமாற்றப் பட்டுவிட்டதாக மற்றவரால் சுயநலத்திற்காக உபயோகப் படுத்திக்கொள்ளப்பட்ட உணர்வுடன் முடித்துக்கொள்கிறோம்.

நமது அடிப்படை இயல்பே நடந்தவற்றிற்கு அடுத்தவரின்மீது பழிபோடுவதுதான்! ஆனால், அது அடுத்தவரின் தவறுதானா?

இல்லை! குற்றம் எப்பொழுதும் உங்களிடமே இருக்கிறது. ஏனெனில் நீங்கள் எதையோ எதிர்பார்த்து உங்கள் கற்பனையை அடுத்தவரின் மீது திணிக்க முயற்சி செய்தீர்கள்! பிறகு தோல்விக்குப் பொறுப்பானவர் யாராக இருக்க முடியும்?

பாருங்கள், சில சம்பவங்களில் ஒரு மனிதன் கிறுக்குத்தனமாகவோ அல்லது பகுத்தறிவிற்கு ஒவ்வாத வகையிலோ நடந்துகொள்ளக்கூடும். இவையெல்லாம் விதிவிலக்குகள். இது போன்ற சமயங்களில் இதுபோன்ற நடத்தையுள்ளர்களுடன் தொடர்ந்து சேர்ந்து வாழ விரும்புகிறீர்களா இல்லையா என்பதை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும். நான் சொல்வதை இது போன்ற சமயங்களில் பயன்படுத்தத் தேவையில்லை. எப்பொழுதும் விதிவிலக்குகள் என்பது இருக்கத்தான் செய்யும்.

ஆனால், நான் சொல்வது உண்மையில் பல வீடுகளில் நிஜத்தில் நிகழ்வதுதான்; இருவருமே சாதாரணமாக இருந்தும் ஒருவித அமைதியின்மை நிலவுகிறது. ஆனால், ஒருபோதும் அதனைப் பார்க்க முயற்சிப்பதில்லை.



நாம் ஒருபோதும் உண்மையுடன் சம்பந்தம் வைத்துக் கொள்ள விரும்புவதில்லை. நாம் எப்பொழுதுமே விடயங்களை ஒரு அழகான தரை விரிப்புக்கடியில் பெருக்கித் தள்ளிவிட்டு நம்மையே ஏமாற்றிக்கொண்டு அதன் மீது நடந்து செல்லவே விரும்புகிறோம்.

உங்களிடமிருக்கும் ஒரு திறந்த காயத்திற்கு உடனே சிகிச்சை அளித்து அதிலிருந்து நிவாரணம் பெறுவது தானே மிகவும் தர்க்க ரீதியான ஒரு செயலாக இருக்கும்? அதற்குப் பதில் அதை தங்கக் கவசத்தாலும் பட்டுத் துணியாலும் மூடி, காயமேயில்லை என்று நம்பிக்கொண்டிருப்பீர்களானால் என்ன நிகழும்?

(தொடரும்)


**பரமஹம்ஸ சுவாமி**

# அதிசய உலகம்

**பிறந்து 6 நாட்களேயான குழந்தை...இரு உயிர்களை காப்பாற்றியது**

பிரித்தானியா மருத்துவமனையில் பிறந்து 6 நாட்களே ஆன பெண் குழந்தை தன் உறுப்புக்களை தானம் செய்து இரண்டு உயிர்களை காப்பாற்றியுள்ளது.

பிறந்து 6 நாட்களிலேயே இறந்து போன அந்த பெண் குழந்தையின் உறுப்புக் களை எடுத்து, வேறு நோயாளிகளுக்கு பொருத்தியதன் மூலம் 'பிரித்தானியா நாட்டிலேயே மிக குறைந்த வயதில் உடல் உறுப்பு தானம் செய்தவர்' என்ற வரலாற்று பெயரை அந்த குழந்தை பெற்றுள்ளது.



குழந்தையின் சிறுநீரகம் மற்றும் கல்லீரல் செல்களை வேறு இரு நோயாளிகளுக்கு பொருத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து பச்சிளம் குழந்தைகள் மருத்துவரான கவுரவ் அட்ரேஜா கூறுகையில், இறந்துபோன ஒரு பச்சிளம் குழந்தையின் உறுப்புக்களை தானமாக தாருங்கள் என பெற்றோர்களிடம் கேட்பது மிகவும் கடினமான, வருத்தமளிக்ககூடிய செயல் என்று தெரிவித்துள்ளார். மேலும், குழந்தையின் பெற்றோர்களிடம் கோரிக்கை விடுத்த இரண்டு மணி நேரங்களிலேயே எங்களுக்கு அனுமதி கொடுத்து விட்டனர் என்றும், உண்மையிலேயே அவர்களின் இந்த செயல் மிகவும் தைரியமான, பாராட்டுதல்குரிய செயல் எனவும் கூறியுள்ளார்.

பெற்றோர்கள் கூறுகையில், எங்கள் குழந்தை பிறந்து ஆறு நாட்களில் இறந்தது எங்களுக்கு பேரிடியாகவும், தாங்க முடியாத சோகத்தையும் ஏற்படுத்தியது. ஆனால், எங்கள் குழந்தை இறந்தும் இரு உயிர்களை காப்பாற்றி உள்ளதை நினைக்கும்போது மகிழ்ச்சியை தருவதாக தெரிவித்துள்ளனர்.

# சமைப்போம் சுவைப்போம்

## தக்காளி மற்றும் வெங்காய சட்னி



**தே.பொருட்கள்:-**

வெங்காயம் - 2
தக்காளி - 4-5
பச்சை மிளகாய் - 2
உப்பு - தேவையான அளவு
மிளகாய் தூள் - 1 டீஸ்பூன்
கடுகு - 1/2 டீஸ்பூன்
உளுத்தம் பருப்பு - 1 டீஸ்பூன்
கறிவேப்பிலை - சிறிது
எண்ணெய் - 2 டீஸ்பூன்

**செய்முறை**

முதலில் வெங்காயத்தை உரித்து, அதனை துண்டுகளாக்கிக் கொள்ள வேண்டும். பின்னர் தக்காளியை கழுவி, அதனையும் நறுக்கிக் கொள்ள வேண்டும். பின்பு மிக்ஸியில் வெங்காயம், தக்காளி, பச்சை மிளகாய், உப்பு மற்றும் மிளகாய் தூள் சேர்த்து, தண்ணீர் சேர்க்காமல் நன்கு மென்மையாக அரைத்துக் கொள்ள வேண்டும். பின் அதனை ஒரு பாத்திரத்தில் போட்டு தனியாக வைத்துக் கொள்ள வேண்டும். இறுதியில் ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், கடுகு, உளுத்தம் பருப்பு, கறிவேப்பிலை சேர்த்து தாளித்து, சட்னியில் ஊற்றினால், சுவையான தக்காளி மற்றும் வெங்காய சட்னி ரெடி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைவாய்ப்புக்களில் உள்ளீர்க்க கோரிக்கை

## வடக்கு வேலையற்ற பட்டதாரிகள் முதலமைச்சருக்கு மகஜர்

**வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் தம்மை வேலைவாய்ப்புக்களில் உள்ளீர்க்கக் கோரி வடமாகாண முதலமைச்சர், ஆளுநர், யாழ். மாவட்ட அரச அதிபர் ஆகியோருக்கு மகஜர் கையளித்துள்ளனர். யாழ். மாவட்டச் செயலகத்திற்கு அருகாமையில் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் முடிவிலேயே மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.**

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வடமாகாணத்தைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகளாகிய நாம் நாட்டில் ஏற்பட்டு ள்ள உயிரூட்டமான மாற்றங்களை வரவேற்கின்றோம். இம் மாற்றங்கள் நாட்டில் அனைத்துத்துறை ரீதியாகவும் சாதகமான மாற்றங்களை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித சந்தேகங்களுமில்லை. இதனடிப்படையில் ஆக்கபூர்வமானபணிகளைமுன்னெடுத்துவருகின்றபுதிய தேசிய அரசாங்கத்திற்கு எமது மனப்பூர வ மான வாழ்த்துக்களைத் தெரிவிக்கின் றோம்.

இந்நிலைமையில் தங்களிடம் கோருவது யாதெனில், பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறிய பட்டதாரிகளாகிய நாம் 2012 ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை எந்தவொரு வேலை வாய்ப்புக்களையும் பெற்றுக் கொள்ள முடியாத இக்கட்டான நிலைமைகளிலேயே இருந்து வருகின்றோம். சரியான வினைத்திறனான தகைமைகளைக் கொண டிருந்தும் எந்தவொரு வேலைவாய்ப்புச் சந்தர்ப்பங்களுக்கு அரசியல் தலையீடுகளினால் புறக்கணிக்கப்பட்டுள்ளோம்.

கடந்த காலங்களில் சில அரசியல் தலைவர்களின் சிபாரிசுகளின் அடிப்படையில் தகுதியற்றவர்கள் வேலைவாய்ப்புக்களில் உள்ளீர்க்கப்பட்டு உள்ளார்கள். வேலை வாய்ப்புகளுக்கு உள்ளீர்ப்பதற்குரிய சட்டரீதியான நடைமுறைகள் நாட்டில் இருந்தபோதிலும் கடந்த காலங்களில் வடமாகாணத்தில் இவை பின்பற்றப்படாமல் பலருக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. இது மிகவும் வேதனையளிக்கின்ற விடயமாகும். இது மட்டுமல்லாமல் தேர்தல் காலங்களில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுத்தருவதாகக் கூறி பலதடவைகள் அலைக்கழிக்கப்பட்டு பலரும் ஏமாற்றப்பட்டுள்ளோம்.

தற்போதைய அரசியல் சூழ்நிலை மாற்றத்துடன் எமக்கான சகல வாய்ப்புக்களும் திறந்திருப்பதற்கான சூழ்நிலைகள் தோன்றியிருப்பதால் புதிய அரசின் பிரதமர், புதிதாக பத்து இலட்சம் வேலைவாய்ப்புக்களை வழங்குவதாக உறுதியளித்துள்ள சூழ்நிலையில், வடமாகாணத்தில் கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் பட்டம் பெற்று வெளியேறிய 05 அணிகளைச் சேர்ந்த பல பல்க லைக்கழகங்களையும் சேர்ந்த ஆயிரக் கணக்கான வேலையற்ற பட்டதாரிகளின் வேலைவாய்ப்புக்கான ஒரு கோரிக்கையாக இம் மகஜரை தங்கள் மேலான கவனத்துக் குச் சமர்ப்பிக்க விரும்புகின்றோம்.

புதிய அரசின் நல்லாட்சிக்கான பிரகடனத்தின்படி புதிய பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்புகள் வழங்கப்படும்போது வடமாகாணத்தைச் சேர்ந்த நாட்டின் பல பாகங்களிலுமுள்ள பல்கலைக்கழகங்களில் பல சிரமங்களைத் தாண்டி கல்வியினைக் கற்று தற்போதும் வேலைகள் எதுவுமின்றியுள்ள வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளையும் இணைத்து புதிய அரச மற்றும் தனியார் வேலைவாய்ப்புக்களை பாகுபாடின்றி வழங்கும் வண்ணம் கேட்டுக்கொள்வதுடன் எமது இக்கோரிக்கையை கனிவுடன் சாதகமான முறையில் பரிசீலிப்பதுடன் கூடிய விரைவில் இதற்கான சாதகமான பதிலை தங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

# 13-வது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தி தெரிவுக்குழு ஊடாக செழுமைப்படுத்த வேண்டும்

## ஈ.பி.டி.பி.புதிய அரசிடம் வலியுறுத்து

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு நடைமுறைச் சாத்தியமான வழியில் செல்வதற்கு 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் ஆரம்பித்து, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கூடாக அதை மேலும் செழுமைப்படுத்தல் வேண்டும் என்பது உள்ளிட்ட 15 அம்சக் கோரிக்கைகளை புதிய அரசிடம் ஈ.பி.டி.பி. முன்வைத்துள்ளது.

இது தொடர்பாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நீண்ட காலமாகவும் விசாரணைகள் இன்றியும், குற்றங்கள் நிரூபிக்கப்படாமலும், புனர்வாழ்வு வழங்கப்பட்டும் சிறைகளில் வாடும் அனைத்து தமிழ் அரசியல் கைதிகளும் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்தல்.

மக்களின் நிலம் மக்களுக்கே சொந்தம் என்பதே எமது நிலைப்பாடாகும். பாதுகாப்புக் காரணங்களுக்காகப் பாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்ட தனியாருக்குச் சொந்தமான அனைத்து நிலமும் உரியவர்களிடம் மீள ஒப்படைத்தல்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் இலங்கைத் தாய் நாட்டினதும் பிரஜைகளாக இருப்பதற்கு இரட்டைக் குடியுரிமையை இலகுபடுத்தல்.

வடக்கு நோக்கிப் பயணம் செய்யும் மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் ஓமந்தைச் சோதனைச் சாவடியை முற்றாக அகற்றல்.

வெளி நாட்டவர்களும், வெளிநாடுகளில் வாழும் இலங்கை மக்களும் வட மாகாணம் நோக்கிப் பயணிப்பதை தடுக்கும் அல்லது நெருக்கடியை ஏற்படுத்தும் கடவுச்சீட்டு பரிசோதனை முறைமையை இரத்துச் செய்தல்.

யுத்த சூழலால் பாதிக்கப்பட்டு பொருளாதாரத்தில் நலிந்துபோன மக்களை தூக்கி நிமிர்த்த உதவியிருக்கும் சமுர்த்திக் கொடுப்பனவை மேலும் அதிகரித்தல். சமுர்த்திப் பயனாளிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படுதல்.

யுத்தத்திற்குப் பின்னர் சொந்த வாழ்விடம் திரும்பிய மக்களினதும், மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மக்களினதும் வாழ்வாதாரத்தை மேலும் மேம்படுத்த உரிய திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

யுத்த சூழலால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கில் வேலையற்று இருக்கும் எமது இளைஞர், யுவதிகளுக்கு தகுதிக்கேற்ப வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுத்தல். சாத்தியமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு தொழில்வாய்ப்புக்களை மேலும் ஏற்படுத்துதல். சொந்தப் பொருளாதார வளர்ச்சியில் எமது மக்கள் வாழுதல்.

எமது கடல் வளத்தை அழித்தும், சுரண்டியும் எமது கடற்றொழிலாளர்களது வாழ்வாதாரத்தை சீரழிக்கின்ற எல்லைதாண்டிய மீன்பிடியில் ஈடுபடுகின்ற இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுப்பதோடு, எமது கடற்றொழிலை புனரமைப்புச் செய்து நவீனமயப்படுத்தி எமது கடற்றொழிலாளர்களது வாழ்வை மேம்படுத்தல்.

விவசாய, உள்ளூர் உற்பத்திகள் மற்றும் கைத்தொழில்கள் என்பவற்றை ஊக்குவித்து ஒவ்வொருவரும் சுய பொருளாதார வளர்ச்சியடைய நிதிவளம் மற்றும் உள்ளீடுகளை வழங்குதல். நிலத்தடி நீர் மோசமாகப் பாதிப்படைந்துவரும் யாழ். மாவட்டம் உட்பட குடிநீருக்குப் பாரிய நெருக்கடியைச் சந்தித்துவரும் வட மாகாணத்தின்மக்கள்அனைவரும் பொருத்தமான பொறிமுறை ஊடாக சுத்தமான குடிநீர் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தல்.

முன்னாள் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் உட்பட ஏனைய அமைப்புக்களின் முன்னாள் உறுப்பினர்களுக்கும் அவர்களது வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் வகையில் திட்டங்கள் தேவை.

[illegible] (விசேட ஏற்பாடு) சட்ட திருத்தத்தை மீளாய்வுக்கு உட்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் வட மாகாணத்தில் பல குடும்பங்கள் பாதிக்கப்படுகின்ற நிலைமை உள்ளது.

முன்னாள் பொருளாதார அமைச்சின் விசேட நிதிக்கூடாக வாழ்வாதார உதவித் திட்டங்கள் வழங்குவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களில் இன்னும் இருபத்தைந்து வீதமான பொருட்கள் வழங்கப்படாமல் இருக்கின்றது.

அப்பொருட்களை உரிய பயனாளிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)


## பெயர் மாற்றம்

தம்பகாமம் பளையில் வசிக்கும் வேலாயுதம் றஸ்ஸாஜினி ஆகிய நான் 14.01.2015 இல் இருந்து வேலாயுதம் ஞானலட்சுமி என பெயர் மாற்றம் செய்துள்ளேன் எனவும் இனிமேல் அனைத்து ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

உண்மையுள்ள

வேலாயுதம் ஞானலட்சுமி. (9204)

## நூல் வெளியீட்டு நிகழ்வு

**நூலின் பெயர்:-** தமிழ் மொழியும் இலக்கியமும்

இலக்கிய வினா விடை தரம் 10 மாணவர்களுக்கானது. புதிய பாடத்திட்டம்

**நூலின் ஆசிரியர்:-** சு.லோகேஸ்வரன்

**இடம்:-**கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்

**காலம்:-** 22.01.2015 இன்று வியாழக்கிழமை பி.ப. 3.00 மணி

**இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக**

**கௌரவ *த.குருகுலராஜா அவர்கள்***

**மற்றும் சிறப்பு விருந்தினர்**

**திரு. க. முருகவேல்**

**கௌரவ விருந்தினர்கள்**

**திரு. அ.அமிர்தலிங்கம்**

**திருமதி.சி.மதுரநாயகம்**

**திரு.ப.சிறிதரன்**

**இந்நூல் வெளியீட்டு விழாவிற்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**கிளி. திருவையாறு,**

**மகா வித்தியாலயம்.** (சி-9885)

## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 33 செவ் 1 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>தொ.இ: B/4014 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 51 செவ் 12 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L/ மேற்பார்வையாளர்<br>தொ.இ: G/4027 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 20 செவ் 2 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSC/ பொறியியலாளர்<br>தொ.இ: B/4016 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 30<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ ஆசிரியர்<br>தொ.இ: G/4032 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 22 1/2 செவ் 7 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/4017 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 79 செவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSC/ முகாமையாளர் (லண்டன்)<br>தொ.இ: G/4034 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 32 1/2 சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: B/4019 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 47 செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/4035 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

[illegible] காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( [illegible] )


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விவசாயம் மூலம் அதிக பயனைப்பெறமுடியும்

## யாழ்.உதவி விவசாயப் பணிப்பாளர்

வடமாகாணத்தில் விவசாயத்துக்குரிய மண்வளமும் அதற்கேற்ற காலநிலையும் காணப்படுவதால் விவசாய நடவடிக்கைகள் மூலம் சிறந்த பயனைப் பெறமுடியும் என வடமாகாண உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி எஸ்.ஜெகநாதன் தெரிவித்தார்.

வடமாகாண உற்பத்தி பொருட்களுக்கான சர்வதேச சந்தை வாய்ப்பு என்னும் தொனிப் பொருளில் உற்பத் தியாளர்களையும் ஏற்றுமதி யாளர்களையும் வர்த்தக ரீதயில் ஒன்றிணைப்பது தொட ர்பான கலந்துரையாடல் ரில்கோ விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், விவசாய உற்பத்திகளின் தரத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை விவசாயத் திணைக்களம் தற்போது மேற்கொண்டு வருகிறது. எமது விவசாயிகள் விவசாய உள்ளீடுகளின் தரத்தை பற்றிய அறிவில்லாமல் பல நட்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அவர்களுக்கு சரியான முறையில் உற்பத்திகளின் தரம் பற்றிய அறிவை வழங்க வேண்டும்.

தற்போது உழுந்து, நெல், சின்னவெங்காயம், மிளகாய் போன்ற பயிர்ச்செய்கையில் நுகர்வுக்கு மேலதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு வெளி மாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யக்கூடியதாகவுள்ளது. வாழை, மா மற்றும் பப்பாசி போன்ற பழவகைகளின் உற்பத்திகளை சிறந்த முறையில் மேற்கொள்வதுடன் அன்னாசியும் தற்போது அதிகளவில் உற்பத்தி செய்யப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-23)





## தனித்து இயங்குவதால் பயன் ஏதுமில்லை

# சர்வதேச வழிநடத்தல்களை கருத்தீற் கொள்வது அவசியம்

## முதலமைச்சர் வலியுறுத்து

**(யாழ்ப்பாணம்)**

**நாம் தனித்து இயங்குவதனால் பலனில்லை. சர்வதேச கட்டமைப்புக்களின் வழிநடத்தலையும் கருத்திற் கொண்டு நடக்க வேண்டியவர்களாக உள்ளோம் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**



தொழிற்பயிற்சி அதிகாரசபை, ஜேர்மனிய உதவிமையம், ஜெற்விங் ஹோட்டல்கள் ஆகியன இணைந்து நடத்தும் சுற்றுலாத்துறைக்கான விருந்தோம்பல் பயிற்சி நெறியினை ஆரம்பித்து வைக்கும் வைபவம் காரைநகர் தொழிற்பயிற்சி அதிகாரசபை மையத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும் உரையாற்றுகையில்,

அரசியலுக்கு வரமுன்னமே வடகிழக்கு மாகாணங்களில் விருந்தோம்பல் வியாபாரத்தில், சுற்றுலாத்துறையில் பாரிய குறைகள் இருப்பதை நான் அவதானித்திருந்தேன்.

அதாவது பல கருத்தரங்கங்களுக்கு நான் அந்தக் காலகட்டங்களில் அழைக்கப்பட்டிருந்தேன்.

வடகிழக்கு மாகாணங்களில் ஏசியா பவுண்டேஷன், யுஎஸ்எயிட் போன்ற பல நிறுவனங் ளால் ஒழுங்கு செய்யப்பட்ட அந்தக் கருத்தரங்கங்கள் பொதுவாகச் சுற்றுலாத்துறைசார் உணவகங்களிலேயே நடைபெற்றன.

அந்த உணவகங்களில் வேலை செய்த அனைவரும் பெரும்பான்மை இன சமூகத்துச் சகோதர,சகோதரிகளாகவே இருந்தார்கள்.

அதாவது தமிழ் பேசும் மக்கள் வாழ்நிலங்களில் நிலைகொண்டிருந்த உணவகங்களைப் பார்த்துப் பராமரித்தோர், மேலாண்மை செய்தோர், நிர்வகித்தோர் யாவரும் உள்ளூர் மக்கள் அல்ல என்பதைத் தெரிந்து கொண்டேன்.

நாட்டுக்கென ஒரு திட்டம் இருக்கலாம். அதே நேரத்தில் வடமாகாணத்திற்கென ஒரு மேலெழுந்தவாரியான உள்ளூர் சார்பான முழுமையான திட்டமொன்று வகுக்கப்படவேண்டும். நிலைபெறக் கூடிய அபிவிருத்தியை, சுற்றுச் சூழலை மனதில் வைத்து இது வகுக்கப்பட வேண்டும். உள்ளூர் மக்களுக்கு எவ்வாறு சுற்றுலாவின் நன்மைகளைப் பெற்றுக் கொடுக்கலாம் என்பதே எமது அடிப்படைக் கரிசனையாக இருக்க வேண்டும்.

உள்ளூர் வளங்களைப் பாவித்து உருட்டிப் பிரட்டி வெளியார்களுக்கு நன்மைகளைப் பெற்றுச் செல்லும் யுக்திகள் எமது வளமான எதிர்காலத்தை வழங்காதென்பதை நாங்கள் கருத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

எமது சுற்றுலாத்துறை பல வருடகாலமாக மத்திய அரசாங்கத்தால் கவனிப்பாரற்றுக் கிடந்துள்ளது. இனியாவது புதிய அரசாங்கத்தின் கீழ் நாம் இது சம்பந்தமாக உரிய நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கம் வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கின்றேன். நாம் எம்மட்டில் அபிவிருத்திக்கு வேண்டியனவற்றை ஏற்படுத்திக் கொடுக்க சகலதையும் செய்ய முன்வருவோம் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-4)

# சர்வதேச வர்த்தகக் கண்காட்சி

## யாழ்ப்பாணத்தில் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நாளை முதல் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை துரையப்பா விளையாட்டரங்கிற்கு அருகாமையிலுள்ள யாழ்.மாநகர சபையின் திறந்த வெளி மைதானத்தில் பிரமாண்டமான முறையில் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சி தொடர்பில் யாழ்.வர்த்தக தொழிற்றுறை மன்றம், இலங்கை கண்காட்சிகள் மற்றும் மாநாடுகள் சேவைகள் நிறு வனம் என்பன இணைந்து விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.சர்வதேச வர்த்தகக் கண்காட்சி -2015 நிகழ்வில் நிர்மாணம், உபசரிப்பு, உணவு பானவகை மற்றும் பொதியிடல், வாகனங்கள், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், நிதியியல் சேவைகள், ஆடைத்துறை, விவசாயம், நுகர்வோர் உற்பத்திகள் மற்றும் மேலும் பல துறைகளை உள்ளடக்கிய 250 இற்கும் மேற்பட்ட கண்காட்சிக்கூடங்கள் இடம்பெறவுள்ளதுடன் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல்வேறு பிரபலமான கல்வி நிறுவனங்களை உள்ளடக்கிய கல்வி என்ற கல்விசார் கண்காட்சிக்கூடமும் இடம்பெறவுள்ளது.

மேலும் வடமாகாண காட்சிக் கூடம் என்ற தொனிப்பொருளில் வடக்கிலுள்ள உற்பத்தியாளர்கள் மற்றும் கைத்தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்திகளையும் சேவைகளையும் கண்காட்சிப்படுத்தி ஊக்குவிப்பு முயற்சிகளை முன்னெடுப்பதற்கான களமாக 30 கண்காட்சிக்கூடங்களைக் கொண்ட தொகுதி அவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாடு இயற்கை வளங்கள் மற்றும் செழிப்புமிக்க ஒரு பிரதேசமாகக் காணப்படுவதுடன் முன்னேற்றத்துக்கும் மனித வளங்களைக் கொண்டுள்ள அச் சமூகத்தின் விடாமுயற்சி இத்தகைய சந்திப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமாக மேம்படுத்துவதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ-4)




# காக்கைதீவு இறங்குதுறைக்கு குடிநீர் வசதி செய்ய ஏற்பாடு

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் கீழுள்ள காக்கைதீவு இறங்குதுறை பகுதி மற்றும் மீன் சந்தைக்கு நீர்த்தாங்கி வைத்து குடிநீர் வழங்க நடவடிக்கை எடுப்பதாக வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபைத் தவிசாளர் எஸ்.மகேந்திரன் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

ஆனைக்கோட்டை, நவாலி, காக்கைதீவு, சாவற்கட்டு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மீனவர்கள் காக்கைதீவு இறங்குதுறையினூடாக மீன்பிடிக்க கடலுக்குச் செல்கின்றனர்.

காக்கைதீவு இறங்குதுறைக்கு ஆரம்பத்தில் யாழ்.மாநகரசபையால் குடிநீர் விநியோகம் செய்யப்பட்ட போதும், அது காலப்போக்கில் நிறுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் மீனவர்களுக்கான குடிநீர் விநியோகத்தை மேற்கொண்டிருந்தனர்.

இராணுவ முகாம் அங்கிருந்து அகற்றப்பட்டமையடுத்து, மீனவர்களுக்கான குடிநீர விநியோகம் முற்றாக இல்லாமல் போய்விட்டது. கடலுக்குச் செல்லும் மீனவர்கள் வீடுகளிலிருந்து குடிநீர் எடுத்துக் கொண்டு கடலுக்குச் செல்வதுடன், மீன்சந்தைக்கு வரும் பொதுமக்களும் குடிநீரைப் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில், மீனவர்களுக்கான குடிநீர் விநியோகத்தினை மேற்கொள்ள பிரதேசசபையால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என உபதவிசாளரை கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறுகையில், காக்கைதீவு குடியேற்றத்திட்டத்துக்கு யு.என்.டி.பி நிறுவனத்தால் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. அந்த குடிநீர் விநியோகத்தை இறங்குதுறை வரை விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (இ-23)

# பல்கலை.நிர்வாக சீர்கேடுகளால் பாதிக்கப்பட்டோர் முறையிடலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடந்த சில ஆண்டுகளாக இடம்பெற்ற அரசியல் தலையீடுகள் காரணமாக ஏற்பட்ட நிர்வாகச் சீர்கேடுகளால் பாதிக்கப்பட்டவர்கள் தமது முறைப்பாடுகளை பல்கலைக்கழக ஊழியர் சங்க அலுவலகத்தில் பதிவு செய்ய முடியும் என பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

இதற்கென ஊழியர் சங்க அலுவலகம் மாலை4.30மணி முதல் 5.30 மணிவரை எதிர்வரும் அலுவலக நாட்களில் இயங்கும் எனவும், ஆட்சேர்ப்பு நியமனங்கள், இடமாற்றங்கள், நிதி மற்றும் நிதி மோசடிகள், நிர்வாகப் பழிவாங்கல்கள், பதவி உயர்வுகள், பரீட்சைகள், கேள்வி ஒப்பந்தங்கள் போன்றவற்றால் பாதிக்கப்பட்டோர் உரிய ஆவணங்களுடன் வருகை தந்து உடனடியாக முறைப்பாடுகளை பதிவு செய்யுமாறு பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கேட்டுள்ளது. (இ)

# கண்காட்சியும் கலை நிகழ்வும்

வடமாகாண முன்பள்ளிகளின் கண்காட்சியும் கலைநிகழ்வும் எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வடமாகாண ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு, கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பணிப்பாளர் ஜெயா தம்பையா தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினா அனந்தி சசிதரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஊடகங்கள் கருத்தறியும் உரிமையினை பாதுகாக்க மாற்றுக்கருத்துக்கு மதிப்பளிக்க வேண்டும்-டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)

ஆட்சி மாற்றம் ஒன்றின் ஊடாகவே பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும் என்று வாக்களித்துள்ள மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து புதிய அரசின் நூறு நாட்கள் வேலைத் திட்டத்திற்கு நாம் ஆதரவளிப்போம்.

இதேவேளை நீடித்த ஆட்சியில்தான் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும் என்று நாம் கேட்டுக் கொண்டதை ஏற்று வாக்களித்த மக்களுக்கு எமது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசின் முதலாவது நாடாளுமன்ற அமர்வினபோது கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது மக்களின் முன்னுரிமைக்குரிய கோரிக்கைகளை முன்வைத்தே கடந்த அரசாங்கங்களுடன் நாம் பணியாற்றி வந்துள்ளோம்.

முன்னர் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு வந்துள்ளன. முழுமையடையாத கோரிக்கைகளையும், செய்து முடிக்கவேண்டிய கோரிக்கைகளையும் நீங்கள் நிறைவேற்றித் தருவீர்கள் என்று நாம் நம்புகின்றோம்.

எமது கோரிக்கைகளை ஜனாதிபதி மைத்திரிபாலவிடமும், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடமும் முன்வைக்கின்றேன்.

இதேவேளை குறிப்பாக சில தமிழ் ஊடகங்கள் எதிர்காலத்திலாவது மாற்றுக் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும் என்றும் அதனூடாகவே தமிழ் மக்களிடையே கருத்தறியும் உரிமையை பாதுகாக்க முடியும் என்றும் தெரிவித்தார். (இ-5)

# பேசும் படம் - 04

ஆஸ்பத்திரி வீதியையும் கண்டி வீதியையும் இணைக்கும் ஆஸ்பத்திரிச்சந்தி




எங்கே செல்லும் இந்தப்பாதை யாரோ யாரோ அறிவாரோ...

**குறிப்பு :** அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

**மின்னஞ்சல் : valampuriijaffna@gmail.com**

**தபால் முகவரி :** ஆசிரியர், பேசும் படம்,
வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

அல்லது நேரில்.

# வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்கள் பொய்ப் பிரசாரங்களை நிராகரித்தனர்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

**ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளை தேர்தல் செயற்பாட்டில் ஈடுபடுத்திக்கொண்டபோது பொய்யான பிரசாரங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் அவ்வாறான அனைத்து பொய்யான பிரசாரங்களையும் மக்கள் நிராகரித்துள்ளனர் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

நாட்டுக்கு தேவையான மாற்றத்தை நிச்சயம் செய்வோம். இதற்காக அரசியல் துறையில் அனைவரும் சில அர்ப்பணிப்புக்களையும் தியாகங்களையும் செய்ய வேண்டியேற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இராஜகிரியவில் அமைந்துள்ள சந்தஹம் செவன பௌத்த நிலையத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அங்கு மேலும் உரையாற்றுகை யில,

நாட்டை முன்னேற்றுவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்பதனை



அன்று மடிகே பஞ்சாசீக தேரர் கூறியிருந்தார். அதனை இங்கு ஞாபகப்படுத்தவேண்டும். கட்சிகளுக்காக பிரிந்து போராடும் காலம் முடிந்து மக்களின் மனதில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு எம்மை அர்ப்பணிக்கவேண்டும்.

நாட்டுக்கு தேவையான மாற்றத்தை நிச்சயம் செய்வோம். இதற்காக அரசியல் துறையில் அனைவரும் சில அர்ப்பணிப்புக்களையும் தியாகங்களையும் செய்ய வேண்டியேற்படும்.

சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அரசியல் கட்சிகள் மேற்கொண்ட பயணத்தில் சிறந்த மற்றும் ஆரோக்கியமற்ற அனுபவங்கள் ஏற்பட்டுள்ளன. அந்த ஆரோக்கியமற்ற அனுபவங்களின்போது நாடு பின்னடைவு கண்டது. எனவே நாங்கள் இன்று வரலாற்று ரீதியான செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

தேர்தலுக்கு முன்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளை தேர்தல் செயற்பாட்டில் ஈடுபடுத்திக் கொண்டபோது பொய்யான பிரசாரங்களை முன்வைத்தனர். ஆனால் அவ்வாறான அனைத்து பொய்யான பிரசாரங்களையும் மக்கள் நிராகரித்துள்ளனர். அத்துடன் நீண்டகாலமாக நாட்டில் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும்என்ற கருத்து மக்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-5)

# மகிந்தவின் சேவையை மறக்கவே முடியாதாம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டுக்கு ஆற்றியுள்ள சேவையை மறக்க முடியாது என ஐக்கிய மக்கள் முன்னணியின் தலைவர் தினேஸ் குணவர்தன நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஒன்றின் மூலம் ரணில் விக்ரமசிங்க பிரதமர் பதவிக்காக தெரிவு செய்யப்படவில்லை.

இதனால் அவருக்கு விசித்திரமான திருமணம் ஒன்றை முடித்துக்கொள்ள நேரும்.

நல்லவற்றை செய்யும் போது அரசாங்கத்திற்கு நாம் ஆதரவளிப்போம் .எனினும் மக்களுக்கு விரோதமான செயற்பாடுகளின் போது நாம் அவற்றை எதிர்ப்போம்.

மகிந்த ராஜபக்ஷ நாட்டுக்கு ஆற்றிய சேவையை நாம் மறந்து விட முடியாது.

நாட்டை பயங்கரவாதத்திலிருந்து மீட்டு நாட்டை மகிந்த ராஜபக்ஷவே ஐக்கியப்படுத்தினார்.

மகிந்த ராஜபக்ஷ ஜனநாயக விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டதாக சிலர் குற்றம் சுமத்துகின்றனர்.

எனினும் நாம் அதனை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை. தேர்தல் முறைமை மாற்றம் குறித்து பிரதமர் பேசவில்லை.

இவ்வாறு 100 நாட்களுக்குள் உறுதிமொழிகளில் எத்தனை கைவிடப்படுமோ தெரியவில்லை. உண்மையான தகவல்கள் நம்பகமான அடிப்படையில் வெளியிடப்பட வேண்டும்.

சேறு பூசும் வகையிலான தகவல்களை வெளியிட வேண்டாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# ஊடக நிகழ்ச்சிகளுக்கு அரசாங்கம் எந்தவித அழுத்தமும் கொடுக்காது

(கொழும்பு)

ஊடக நிகழ்ச்சிகளை தீர்மானிப்பதில் நிறுவனங்களுக்கு எவ்வித அழுத்தமும் செய்வதில்லை என்ற அரசின் கொள்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என ஊடக மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சின் செயலாளர் கருணாரத்ன பரணவித்தாரண தெரிவித்தார்.

சுவர்ணவாஹினி மற்றும் ரூபவாஹினி ஆகியவற்றில் ஒளிபரப்பப்படும் முல்பிட்டுவ நிகழ்ச்சியை நடத்தும் பந்துல பத்மகுமாரவை நீக்க அரசு தீர்மானித்துள்ளது என சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அதனை ஊடக அமைச்சு நிராகரித்துள்ளது.

இது தொடர்பில் ஊடக அமைச்சின் செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. சுவர்ணவாஹினி நிறுவனம் காலையில் ஒளிபரப்பும் பத்திரிகைகள் கண்ணோட்டமாக இதுவரை நடத்தி வந்த முல்பிட்டுவ நிகழ்ச்சியை நடத்திய பந்துல பத்மகுமாரவை நீக்குவது தொடர்பில் பல்வேறு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளமை தொடர்பில் ஊடக அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

உயர்மட்ட உத்தரவினால் மேற்கொள்ளப்படுவதாகவும் அது அரசாங்கத்தினால் செய்யப்படுவதாகவும் திரிபுபடுத்தி செய்திகள் வெளியாகியுள்ளன. சுவர்ணவாஹினி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட இம்மாற்றத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையில் எவ்விதமான தொடர்பும் இல்லை. அது அந்நிறுவனத்தினாலேயே மேற்கொண்ட தீர்மானம் என்று நாம் நம்புகிறோம்.

நிகழ்ச்சிகள் தீர்மானிப்பதில் ஊடக நிறுவனங்களுக்கு எவ்விதமான அழுத்தமும் கொடுப்பதில்லை. ஊடக சுதந்திரத்தை முழுமையாக பேணுவதே அரசின் கொள்கை.

இக்கொள்கை தனியார் ஊடகங்களுக்கல்ல.அரச ஊடகங்களுக்கும் பொருந்தும் என ஊடக மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் கயந்த கருணாதிலக்க அறிவித்துள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியமர்ந்து பல வருடங்களாகியும் மின்சாரம் இதுவரை கிடைக்கவில்லை

## பாதிக்கப்பட்ட மக்கள் ஆதங்கம்

**(திருவையாறு)**

**கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கட்டைக்காடு, இராமநாதபுரம், கல்மடு நகர், சம்புக் குளம், புதுக்காடு ஆகிய கிராமங்களில் உள்ள மக்கள் மீள் குடியேறிய நிலையில் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லையென கவலை தெரிவிக்கின்றனர்.**

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில், வீதிகளில் மின்கம்பங்கள் நடப்பட்டு ஆரம்பவேலைகள் இடம்பெற்ற போதிலும் மிகுதி வேலைகள் இழுபறி நிலையில் காணப்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற இம் மக்கள் மின்சாரம் இன்மையால் சுயதொழில்களை மேற்கொள்ள முடியாது இருப்பதுடன் மாணவர்கள் இரவுவேளை தமது கல்வியை விளக்கின் துணையுடன் கற்று வருவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இக்கிராமங்களில் மூன்று பாடசாலைகள் உள்ளன. இதில் 2 ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

இப்பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் கணனி கற்கை நெறிகளுக்கு கணனி இருந்தும் மின்சாரம் இன்மையால் கணனிக்கல்வி அறிவைப் பெறமுடியாதுள்ளதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ் விடயத்தில் கவனமெடுத்து தங்களுக்கொரு தீர்வைப் பெற்றுத் தரவேண்டுமென பாதிக்கப்பட்டுள்ள மேற்படி கிராமமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-2-273)

# பால்நிலை சமத்துவம் தெருவெளி ஆற்றுகை



கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகப்பிரிவில், கரைச்சி பிரதேச கிராம மாதர் அபிவிருத்தி சங்கங்களின் சமாசத்தினால், எஸ்.டி.சி. நிதியுதவியுடன் பால்நிலை சமத்துவம் தொடர்பான **மனிதம் ஒன்றே** எனும் தெருவெளி நாடகம் நேற்றைய தினம் ஆரம்பமாகியுள்ளது.

இந்நாடகம் நாளை வெள்ளிக்கிழமை வரை கிராமங்கள் தோறும் நடைபெறும்.

இதில் இன்று வியாழக்கிழமை கிளி/சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் முற்பகல் 10 மணிக்கும், கிளி/மத்திய கல்லூரியில் நண்பகல் 12 மணிக்கும் நடைபெறும்.

நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி க்கு கிளி/ சிவபாத கலையக வித்தியாலயத்தில் பி.ப 4மணிக்கு பெரிய பரந்தன் தாரணி குடியிருப்பிலும் நடைபெறுமென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-2-277)

# வாகன விபத்தில் அதிர்ஷ்ட வசமாக தப்பினர் சாரதிகள்



(குருமன்காடு)

காரும் வாகனமும் மோதிய விபத்தில் சிக்கிய சாரதிகள் இருவரும் அதிர்ஷ்ட வசமாக உயிர்தப்பினர் என்று விபத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்விபத்து நேற்றுமுன்தினம் வவுனியா மூன்றுமுறிப்பு கண்டி வீதியில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் தெரியவருவதா வது,

வவுனியாவிலிருந்து கண்டி வீதியால் பயணித்துக் கொண்டிருந்த கார் ஒன்றை வான் முந்திச்செல்ல முற்பட்ட வேளையிலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பெண் ஒருவர் செலுத்திச் சென்ற காரை பின் தொடர்ந்து மிகவும் வேகமாக வந்தவான் கட்டுப்பாட்டை இழந்து குறித்த காரை சுமார் 25 மீற்றர் தூரம் வரை அடித்து இழுத்துச் சென்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2-250)




# கூட்டமைப்பின் மாதிரி யாப்பு தமிழரசுக் கட்சியினரிடம்

## ஆனந்தன் எம்.பி தெரிவிப்பு

தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கான மாதிரி யாப்பு தயாரித்து தமிழரசுக் கட்சியிடம் வழங்கியுள்ளோம். பதிவுக்காக அவர்களின் முடிவை எதிர்பார்த்திருக்கின்றோம் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசியக்கூட்டமைப்பை பதிவு செய்வதற்காக அதற்கான மாதிரி யாப்பு ஒன்றினை தயாரித்த தமிழரசுக் கட்சியிடம் வழங்கியுள்ளோம். தற்போது அவர்களின் முடிவுக்காக காத்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஆட்சி மாற்றமும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும் என்ற தொனிப்பொருளில் வவுனியா வெளிவட்ட வீதியில் அமைந்துள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற பொது மக்களுடனான சந்திப்பின் போது எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலுக்கு முன்னர் கூட்டமைப்பு பதிவு செய்யப்படவேண்டும். அது தான் எமது எதிர்பார்ப்பு. அவ்வாறு நடைபெறுமா என பொதுமகன் ஒருவர் கேள்வி எழுப்பிய போது அதற்கு பதில் அளிக்கும் வகையிலேயே தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தனது பதிலில், தமிழ் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்பட வேண்டும் என்பது தான் எமது நிலைப்பாடும். ஆனால் அதற்கு தமிழரசுக் கட்சியும் கூட்டமைப்பின் தலைவருமே பதில் சொல்ல வேண்டும். இருப்பினும் கடந்த 12 வருடங்களாக அக்கட்சியில் இருப்பதால் இது தொடர்பில் பதில் அளிக்க வேண்டியுள்ளது. எமது கட்சியாகிய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழர் விடுதலை இயக்கம், தமிழ் மக்கள் விடுதலைக் கழகம் ஆகிய மூன்று அங்கத்துவ கட்சிகளும் இணைந்து தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கான யாப்பு ஒன்றின் மாதிரியை வடிவமைத்து தமிழரசுக்கட்சியிடம் வழங்கியுள்ளோம். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னரே இதனை வழங்கிவிட்டோம்.

இனி தமிழரசுக்கட்சியே முடிவெடுக்க வேண்டும். அவர்களின் பதிலுக்காக நாம் காத்திருக்கின்றோம் எனப்பதில் அளித்தார். (அ-2-250)


# குழு மோதலில் மூவருக்கு காயம்

முல்லைத்தீவு, நீராவிப்பிட்டி பிரதேசத்தில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்ற குழு மோதலில் சிறு காயங்களுக்குள்ளான மூவர் மாஞ்சோலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக முள்ளியவளை பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி பிரதேசத்தில் இரண்டு குழுக்களுக்கிடையில் மோதல் இடம்பெற்றது. இதன் போதே இவர்கள் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

## பூநகரி பிரதேச செயலக கட்டடத்தின்

# முப்பத்தாறு மில்லியன் ரூபா திறைசேரிக்கு திரும்பியது



கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலகத்துக்கு நிரந்தர கட்டடம் நிர்மாணிப்பதற்காகக் கிடைத்த 50 மில்லியன் ரூபா நிதியில் 36 மில்லியன் ரூபா திறைசேரிக்கு திரும்பிச் சென்றுள்ளதாக பூநகரி பிரதேச செயலாளர் சிவபாதசுந்தரம் சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து கூறுகையில், கிளிநொச்சி மாவட்டத்தில் 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மீள்குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்பட்ட பின்னர், பூநகரி பிரதேச செயலக பிரிவிலே மக்கள் முதலில் மீளக்குடியமர்ந்தனர்.

மீள்குடியேற்றம் நடைபெற்றதையடுத்து, பூநகரி பிரதேச செயலகத்துக்கான நிரந்தர கட்டடம் அமைக்கும் பணிகள் பூநகரி வாடியடிப் பகுதியில் என்.ரி.எப். திட்டத்தின் கீழ் 50 மில்லியன் ரூபா செலவில் கடந்த 2010ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது என அவர் தெரிவித்தார்.

கட்டட வேலைகளில் ஈடுபட்ட ஒப்பந்தக்காரர்கள் உரிய காலத்தில் முடிக்காமையினால் 14 மில்லியன் ரூபா பெறுமதியான வேலை மட்டுமே முடிவடைந்தது. மிகுதி நிதி திரும்பிச் சென்றுவிட்டது. இதனால் கட்டட வேலைகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. நிதி கிடைக்கும் பட்சத்திலேயே மிகுதி வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முடியும் என்று அவர் மேலும் கூறினார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு இறப்பு

1944.10.03 2014.02.02

திதி:-22.01.2015



(இளைப்பாறிய புகையிரத உத்தியோகத்தரின் மனைவி)

## அமரர் யோகம்மா இராஜகுமாரன்

பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
அன்புக்கு இலக்கணமாய்
வாழ்வின் வழிகாட்டியாய்
வாழ்ந்த எம் குலவிளக்கே!
எம் வாழ்வின்
ஒளி விளக்கேற்றிய
எம் அன்பு தெய்வமே
எம் வாழ்வின்
எத்தனை கோடி இன்பங்கள்
இருந்தாலும் அது
அத்தனையும் நீங்களாகுமா?
ஓர் ஆண்டென்ன
ஓராயிரம் ஆண்டுகள்
சென்றாலும் உங்கள்
நினைவுகள்
எப்போதும் எம் நெஞ்சில்...
எம் வாழ்வில் என்றும்
உங்கள் துணை தொடர
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

இல. 35, மானிப்பாய் வீதி,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

(9201)

T.P-077 656 7447 (9201)


தகவல்:-
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1047



## கசக்காத மருந்து

வெள்ளை உடையைப் பார்த்தவுடன் சரணுக்கு உடல் நடுங்க ஆரம்பித்தது.

வெள்ளை ஃப்ரொக், முழங்கால் வரை வெள்ளை சாக்ஸ்.

ஒரு கையில் சிறிய பெட்டி.

மறுகையில் பிளட் பிறஷர் பார்க்கும் கருவி.

நர்ஸ் உள்ளே நுழைந்ததும் அடுத்த அறைக்கு ஓடிய சரண், கதவை மூடிக்கொண்டு சிறிய இடைவெளி வழியே எட்டிப் பார்த்தான்.

தாத்தாவை அப்பாவும் அம்மாவும் சேர்ந்து திருப்பிப்போட்டனர்.

பின்புறத்தில் பஞ்சினால் துடைத்துவிட்டு, நர்ஸ் ஊசியைச் செலுத்தினாள்.

தாத்தா கண்களை மூடி, பொக்கை வாயைக் கடித்துக்கொண்டார்.

சரணுக்கு கண்களில் நீர் வழிந்தது.

பிறகு, தாத்தாவை உட்கார வைத்தனர்.

நர்ஸ் மஞ்சள் கேப்சூல், சாக்பீஸ் போன்ற நீளமான வெள்ளை மாத்திரை இரண்டையும் எடுக்க அப்பா தண்ணீரை நீட்டினார்.

தாத்தாவோ, டம்ளரை வாங்க மறுத்தார். என்னால முழுங்க முடியாதுடா.

என்னை அப்படியே விட்டுடுங்க என்றார்.

பேசாம முழுங்குப்பா... உனக்கு என்ன, சின்னக் கொழந்தைன்னு நெனப்பா?

சரணின் அப்பா கத்த ஆரம்பித்ததும், தாத்தா வாயைத் திறந்தார்.

நர்ஸ், மாத்திரையை வாயின் உள்ளே போட்டு தண்ணீர் ஊற்ற, தாத்தா விழுங்க முயன்றபோது இருமல் வந்தது.

வாந்தி எடுத்து, படுக்கையை நாசம் செய்தார்.

சரணின் அப்பா, கன்னா பின்னாவெனக் கத்தினார்.

மீண்டும் வேறு மாத்திரையைக் கொடுக்க, தாத்தா கஷ்டப்பட்டு விழுங்கினார்.

பிறகு அவர் உடம்பையும் படுக்கையையும் டெட்றோல் போட்டு சுத்தம் செய்தனர்.

பெட்ஷீட்டை மாற்றினர்.

கடைசியாக, நர்ஸ் ஒரு டானிக்கை பிளாஸ்டிக் கப்பில் ஊற்றி நீட்டினாள்.

இது ரொம்ப கசக்குமே என்றபடி மிகவும் கஷ்டப்பட்டு அதையும் விழுங்கினார்.

அடுத்து ஐந்தாவது நிமிடத்தில் 100 ரூபாய் வாங்கிக்கொண்டு நர்ஸ் கிளம்பியதும், தாத்தாவின் அருகில் வந்து உட்கார்ந்தான் சரண்.

முன்பு எல்லாம் தாத்தா நன்றாகத்தான் இருந்தார்.

சரணுக்கு சைக்கிள் ஓட்டக் கற்றுத் தந்தது அவர்தான்.

அவனை கோயில், பூங்கா என பல இடங்களுக்கு அழைத்துச் செல்வார்.

ஒருநாள் திடீரென மயக்கம் போட்டு விழுந்துவிட்டார்.

ஒருவாரம் ஆஸ்பத்திரியில் இருந்தார்.

வீட்டுக்கு வந்த பிறகும் படுக்கையே கதியாகிவிட்டார்.

என்ன தாத்தா, ரொம்பக் கஷ்டமா இருக்கா? என்று கேட்டான் சரண்.

தாத்தா, அவனைப் பார்த்து புன்னகை செய்தார்.

அந்தப் புன்னகைகூட கஷ்டப்பட்டுத்தான் வந்தது.

நடுங்கும் அவரது கைகளை எடுத்து, தன் மடியில் வைத்துக்கொண்டான் சரண்.

மறுநாள் நர்ஸ் வந்த போது, சரண் ஓடி ஒளியவில்லை.

ஹாலிலேயே உட்கார்ந்திருந்தான்.

அப்பா, மருந்தையும் ஊசியையும் தேடினார். கிடைக்கவில்லை.

அம்மாவைப் பார்த்து எங்கே வைத்தாய்? என்று கூச்சலிட்டார்.

சரணைக் கூப்பிட்டு, தாத்தாவின் மருந்து, மாத்திரையை விளையாட எடுத் தாயா? என்று கேட்டார்.

முதலில் மறுத்த சரண், அப்பாவின் கோபத்தைப் பார்த்ததும் எடுத்ததை ஒப்புக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதான்.

எங்கே வெச்சிருக்கே? என்று கேட்டார்.

வாசலுக்கு கூட்டிப்போய் குப்பைத் தொட்டியைக் காட்டினான்.

ஊசி, மருந்து, மாத்திரைகள் எல்லாம் அங்கே கிடந்தன.

அப்பா, கோபத்துடன் சரணின் முதுகில் *பளார்* என்று அடிக்க அம்மா தடுத்தாள்.

தாத்தாவை எல்லோரும் பாடாய்ப்படுத்துறீங்க.

கசப்பு மருந்தை வாயிலே ஊத்துறீங்க.

அதுதான், தூக்கி எறிஞ்சுட்டேன் என்று அழுதபடியே சொன்னான் சரண்.

நர்ஸ், மறுநாள் வருவதாகக் கூறிவிட்டு சென்றார்.

கோபம் தணிந்த அப்பா, சரணை அழைத்துக்கொண்டு மருந்துக் கடைக்குக் கிளம்பினார்.

வழியில், நீ பண்ணினது தப்பு சரண்.

தாத்தாவுக்கு உடம்பு சரியாகணும்.

அதுக்குத் தான் மருந்து மாத்திரைகளைக் கொடுக்கிறோம் என்றார்.

ஆனா... கசக்காத மருந்து, வலிக்காத ஊசியாத் தரலாமே என்றான் சரண்.

அந்த மாதிரி எல்லாம் கிடையாது சரண்.

தாத்தாவுக்கு சீக்கிரம் சரியாகிவிடும்.



அப்புறம் அவரோடு விளையாடலாம் என்றார் அப்பா.

சரண் யோசனையுடன் நடந்தான்.

கடையில் மருந்து வாங்கி முடித்ததும், உனக்கு பிஸ்கட் வேணுமா..... சாக்லேட் வேணுமா? என்று கேட்டார்.

எனக்கு ரெண்டும் வேண்டாம். வேற ஒண்ணு வேணும் என்றான். இருவரும் வீடு திரும்பினார்கள்.

தாத்தாவிடம் ஓடிய சரண், தாத்தா இங்கே பாருங்க என்றான். அவன் கையில் தேன் பாட்டில்.

இது எதுக்கு சரண்? என்று கேட்டார் தாத்தா. நீங்க மருந்து சாப்பிட்டதும் இதை ஒரு வாய் குடிங்க.

கசப்புத் தெரியாது என்றான் சரண். அப்பா, உங்க கஷ்டம் எனக்குப் புரியுது.

இனிமே நானும் உங்ககிட்டே கோபமாய் பேச மாட்டேன் என்றார் சரணின் அப்பா.

மறுநாள் முதல், நர்ஸ் மருந்தைக் கொடுத்ததும் சரண் அவன் கையாலேயே தாத்தாவுக்குத் தேனை ஊட்டிவிட ஆரம்பித்தான்.

அப்பாவும் பக்கத்திலிருந்து தொண்டையைத் தடவிவிடுவார்.

தாத்தாவுக்கு இப்போதெல்லாம் மருந்து கசப்பதே இல்லை.

அதற்குக் காரணம், சரண் கொடுக்கும் தேன் மட்டும் அல்ல; அவர்களின் அன்பும்தான்.

## 01.2015 22 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1506 - 150 சுவிஸ் பாதுகாப்புப் படைகளைக்கொண்ட முதற் தொகுதி வத்திக்கானை அடைந்தது.
- 1798 - நெதர்லாந்தில் இராணுவப் புரட்சி இடம் பெற்றது.
- 1840 - பிரித்தானிய குடியேற்றவாதிகள் நியூசிலாந்தை அடைந்தனர்.
- 1863 - ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக போலந்து, லித்துவேனியா, பெலரஸ் ஆகிய நாடுகளில் கிளர்ச்சி வெடித்தது.
- 1879 - தென்னாபிரிக்காவின் சூலுப் படைகள் ஐசண்டல்வானாவில் வைத்து பிரித்தானியப் படை களைத் தோற்கடித்தனர்.
- 1889 - கொலம்பியா கிராமபோன் வோஷிங்டனில் அமைக்கப்பட்டது.
- 1901 - 64 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த விக்டோ ரியா மகாராணி தனது 81ஆவது அகவையில் கால மானதை அடுத்து அவரது மூத்த மகன் ஏழாம் எட்வேர்ட் பிரித்தானியாவின் மன்னரானார்.
- 1905 - சென் பீட்டர்ஸ்பேர்க்கில் சார் மன்னருக்கெதி ராக தொழிலாளர்களின் எழுச்சி முறியடிக்கப்பட்டது.
- 1952 - உலகின் முதலாவது பயணிகள் ஜெட் விமானம் சேவைக்கு விடப்பட்டது.
- 1957 - சினாய் தீபகற்பத்திலிருந்து இஸ்ரேல் வெளியேறியது.
- 1984 - ஆப்பிள் மக்கிண்டொஷ் கணினி அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1992 - சாயீரின் தேசிய வானொலி நிலையத்தை தீவிரவாதிகள் கைப்பற்றி அரசை பதவி விலகும்படி அறிவித்தனர்.
- 2003 - பயனியர் 10 விண்கலத்துடன் கடைசித் தொடர்பு மேற்கொள்ளப்பட்டது.
- 2004 - ஆர்க்குட் தொடங்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1561 - பிரான்சிஸ் பேக்கன், ஆங்கிலேய மெய்யியலாளர் (இ. 1626)
- 1788 - ஜார்ஜ் கோர்டன் பைரன், ஆங்கில-ஸ்கொட்டியக் கவிஞர் (இ. 1824)
- 1908 - லேவ் லாண்டாவு, நோபல் பரிசு பெற்ற ரஷ்ய இயற்பியலாளர் (இ. 1968)
- 1909 - ஊதாண்ட், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் (இ. 1974)
- 1922 - தி. வே. கோபாலையர், தமிழறிஞர் (இ.2007)
- 1936 - அலன் ஹீகர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர.

### இறப்புகள்

- 1666 - ஷாஜகான், முகலாயப் பேரரசர் (பி. 1592)
- 1922 - பிரெட்ரிக் பாஜெர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1837)
- 1947 - சுவாமி ஞானப்பிரகாசர், ஈழத்தின் பன மொழிப் புலவர் (பி. 1875)
- 2005 - [illegible] தமிழறிஞர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு...

...படம் சுமாராகவே அமைந்தது.

**கால்ஷீட் பிரச்சினை**

பட அதிபர்கள் ஏக காலத்தில் ரஜினியிடம் கால்ஷீட் கேட்டு மொய்த்தனர். அவர்களின் கோரிக்கையை ஏற்க முடியாமல் ரஜினி தவித்தார். இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு அவர் ஏற்கனவே திகதி கொடுத்துவிட்டார். புதுப் படங்களில் நடிக்க வந்த பல அழைப்புகளை ஏற்க முடியவில்லை.

தன்னைத் தேடி வரும் பட அதிபர்களின் எண்ணிக்கையை குறைக்க, தன் ஊதியத்தை உயர்த்தினார். அதையும் சிலர் குறை கூறினர். நேற்று வந்தவர் இவ்வளவு பணம் கேட்கிறாரே! என்று சொன்னார்கள்.

இதுபற்றி அப்போது ஒரு பேட்டியில் ரஜினி கூறியதாவது:-


"அதிகப் படங்களில் நடிப்பதை தவிர்க்க எனக்கு ஒரு ஐடியா தோன்றியது. நான் வாங்குகிற ரேட்டை உயர்த்துவதுதான் அந்த ஐடியா.

அதனால், வேறு வழியின்றி ரேட்டை உயர்த்தினேன். அதையும் சிலர் குறை கூறினார்கள். அவர்களுக்குத் தெரியுமா, என் அவஸ்தை!

இப்போதுள்ள நிலைமையைப் பார்த்தால், ஏன் நடிக்க வந்தோம்" என்று தோன்றுகிறது! அந்த அளவுக்கு "கால்ஷீட்" பிரளயம்.

ஒரே சமயத்தில் தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மூன்று மொழிகளிலும் பல படங்களில் நடிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. தென்னாட்டில் பிரபலமான நட்சத்திரமாக நான் மதிக்கப்படுகிறேன். எந்த நடிகருக்கும் கிடைக்காத பெரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. ஒரு பக்கம் மகிழ்ச்சியாக இருந்தாலும், மறு பக்கம் பயமாக இருக்கிறது. "கிடைத்த பேரை காப்பாற்றிக் கொள்ள வேண்டுமே" என்ற பயம்தான் அது.

இவ்வாறு ரஜினிகாந்த் குறிப்பிட்டுள்ளார்.




கர்ஜனையில் ரஜினி

### சிவாஜியுடன் ரஜினி நடித்த "ஜஸ்டிஸ் கோபிநாத்"

**பாலசந்தர் தமாஷ்**

இந்த சந்தர்ப்பத்தில் டைரக்டர் பாலசந்தரை சந்தித்த ரஜினிகாந்த், தனக்குள்ள "கால்ஷீட்" பிரச்சினை பற்றி தெரிவித்தார்.

பாலசந்தர் சிரித்துக்கொண்டே, "உன்னை அறிமுகப் படுத்திய நானே, உன்னுடைய கால்ஷீட்டுக்கு ஐந்து வருடம் காத்திருக்க வேண்டும் போல் இருக்கிறதே!" என்றார்.

அந்த அளவுக்கு "பிசி"யாக இருந்தார், ரஜினிகாந்த்.

**மார்லன் பிராண்டோ**

ஹாலிவுட் நடிகர் மார்லன் பிராண்டோவின் படங்கள் ரஜினிக்கு மிகவும் பிடிக்கும். இந்தக் காலக் கட்டத்தில் அவருடைய புகழ் பெற்ற படமான "காட்பாதர்" மும்பையில் திரையிடப்பட்டது. இடைவிடாமல் படப்பிடிப்பு இருந்தாலும், விமானத்தில் மும்பைக்குப் பறந்து சென்று, அந்தப் படத்தைப் பார்த்துவிட்டுத் திரும்பினார். சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கும் போய் வந்தார்.

1979 ஆம் ஆண்டு, ரஜினிக்கு சோதனையான ஆண்டு. இரவு - பகல் பாராமல் தொடர்ந்து படங்களில் நடித்ததால், அவர் உடல் நலமும், மன நலமும் பாதிக்கப்பட்டன.

உடல் சோர்வை போக்கிக் கொள்ள மது அருந்தினார். ஜரிதா பீடா, ஜாதிக்காய் ஆகியவற்றை சாப்பிட்டார்.

நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டதால் எதைக் கண்டாலும் எரிச்சல். யாரைக்கண்டாலும் கோபம்.

**மயக்கம்**

1979 மார்ச் முதல் தேதி. பஞ்சு அருணாலத்தின் **"ஆறிலிருந்து அறுபதுவரை"** படப்பிடிப்பில் கலந்து கொண்டு நடித்தபோது, மயக்கம் போட்டு விழுந்தார்.

உடனடியாக டாக்டர் வந்து பரிசோதித்தார். "ஓய்வு - ஒழிச்சல் இன்றி, தூக்கம் இன்றி நடித்ததால் ஏற்பட்ட மயக்கம் இது. நன்றாக ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும்" என்று டாக்டர் கூறினார்.

டாக்டர் சொன்னதற்காக ஒரே ஒரு நாள் மட்டும் ஓய்வு எடுத்துக் கொண்டார். மறுநாள் **"அன்னை ஓர் ஆலயம்"** படப்பிடிப்பில் கலந்து கொண்டார்.

**பத்திரிகையாளர் புகார்**

ரஜினிகாந்தைப் பற்றி ஒரு பத்திரிகையாளர் தொடர்ந்து தாக்கி எழுதி வந்தார்.

ஒரு நாள் ரஜினி காரில் சென்ற போது, அந்த பத்திரிகையாளர் முன்னால் போய்க்கொண்டிருந்ததைப் பார்த்தார். "ஏன் என்னை சதா தாக்கி எழுதுகிறீர்கள்?" என்று கேட்பதற்காக, காரை அவர் அருகே ஓட்டிச்சென்றார்.

தன் மீது காரை மோதுவதற்கு ரஜினி வருவதாக, பத்திரிகையாளர் நினைத்து, போலீசில் புகார் செய்தார். ரஜினி கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டதாக, மார்ச் 8 ஆந்திகதி பத்திரிகைகளில் செய்தி வெளிவந்தது.

**சிவாஜியின் 200 ஆவது பட விழா**

சிவாஜிகணேசனின் 200 ஆவது பட விழா, மார்ச் 10 ஆந்திகதி மதுரையில் நடந்தது. இந்த விழாவில் ரஜினிகாந்த் கலந்து கொண்டார்.

சிவாஜியின் காலைத்தொட்டு வணங்கி, வாழ்த்து பெற்றார். இதன்பின் நடந்த நிகழ்ச்சிகள் பற்றி, 13-03-1979 அன்று பத்திரிகைகளில் கீழ்க் கண்டவாறு செய்திகள் வெளியாயின:-

(தொடரும்)





# கருவாச்சி காவியம்

## வைரமுத்து- 55

...அவ பேன் பாக்குற சொகத்துல சொக்கிப் போன சொக்கத் தேவன் பட்டிப் பொம்பளைக பேன் பாத்து விடுறது புண்ணியம்ன்னு அவ காதுல பூவும் வச்சு விட்டாளுக.

ஆட்டுப் பண்ணை கோழிப் பண்ணை வச்சிக்கிற மாதிரி தலையில பேன் பண்ணை வச்சு அலையிறாக அந்த ஊர்ல பல பொம்பளைக.

காடுகரைகளே கதின்னு கெடக்குற பொம்பளைக நித்தம் சீவக்கா போட்டுச் சுத்தம் பண்ண முடியாதா? இல்ல வெள்ளி செவ்வாய்க்கு எண்ணெ தேச்சு முழுகத்தான் லாயக்கு இருக்கா?

தலையில குப்பை குளம் சொமக்கிறது-

கெடச்ச இடத்துல தலவச்சு செடி செத்தையில படுக்கிறது.-

வறுமைக் கொடுமையில தல சீவாமப் போறது -

முடியில தூசு தும்பு சேர்றது-

இதெல்லாம் பேனை வா வான்னு கூப்பிட்டுச் சோறுபோட்டுச் சொந்தம் பாராட்டி வச்சிக்கிரும் தலையில.

ஒரு பேச்சும் பேசாமத் தலையப் பவளம்கிட்ட ஒப்படைச்சிட்டு கால நீட்டு; தலையைக் கவுந்து ஒக்காந்துட்டா கருவாச்சி.

மாசம் அஞ்சு வரைக்கும் வயிறு எந்திரிக்காது பொம்பளைக்கு.

நாலு முடிஞ்சு அஞ்சு ஆரம்பம்.

எறும்பு கடிச்ச உதடு மாதிரி லேசா மேடு கட்டின வயிறு அவ இடுப்புல சரிஞ்சு கெடக்கு சந்தோஷமா.

சின்னதா ஒரு செல்லக் கோபம் கோவிச்ச பவளம் சிக்கும் சிண்டுமாயிருந்த கருவாச்சி முடியப் பச்சப் பின்னலெடுத்துப் பளார் பளார்ன்னு ஒதறி கையில வெலக்கிக் காத்தாட விட்டா.

சல்லுச் சல்லுன்னு அவ முடிய அடிச்சுத் தொவைச்சு அவ தோள்லயே காயம் போட்டா.

அவ தலையில தலப் பெரட்டுப்



ஏந் தலையில யாரோ கூதக்காயுற மாதிரி அரிப்பா அரிக்குதுடீங்கிறா கருவாச்சி. தலையா வச்சிருக்கிற தல? கா௯ள வாச வச்சாலும் எரியாத ஒந் தலையில கூதக்காயுறாங்களாம் கூத?

பண்ணத் பண்ணத் துன்பத்துல ஒரு இன்பமாயிருக்கு; இன்பத்துல ஒரு துன்பமாயிருக்கு.

கெறங்கிக் கிறுகிறுத்துப் போறா கருவாச்சி. சிணுக்கறுக்கி ஈருவல்லி சீப்பு இந்த முணு ஆயுதமும் இல்லாம பொண்ணாப் பெறந்தவ போகக் கூடாது பேன் வேட்டைக்கு.

பவளம் சிணுக்கறுக்கி எடுத்தா; சடைப்புடிச்சுக் கிடந்த கருவாச்சி குடுமியச் சன்னஞ் சன்னமாச் சிக்கெடுத்தா. அட்சரேகை பூமத்திய ரேகை போட்டுத் தலய பாகம் பரிச்சா.

ஒவ்வொரு முடியா வெலக்கி உள்ள போயிப் பாத்தா ஒனக்கும் எங்களுக்கும் பந்தயம் புடிச்சிரு பாப்பமன்னு சவால் விடுதுக ஆண்பேனும் பெண்பேனும். பேன்கள்ல ஆண் பேன் எப்பவும் சிறுசு; பெண்பேனுதான் பெருசு. சென கொண்டு அலையிறதுனால பெண்பேன் வெரசா ஓடாது.


சிக்கிரும் சீக்கிரம். ஆண்பேன் அப்படியில்ல. இந்தா புடிச்சாச்சுன்னு நெனைக்கிறப்ப ஒத்த முடிக்குள்ள ஓடிப் போயி பாசாங்கு பண்ணிப் பதுங்கிரும். பேன் பாக்கிறவளக் கண்ணக் கட்டிக் காட்டுலவிட்டிரும்.

கருவாச்சி தலையைப் பாத்துப் பயந்து போனா பவளம். அவ ஆயுசுல பாத்ததில்ல இப்பிடி ஒரு பேன் காடு.

பத்து வெரலையும் குடுமி வேர் வரைக்கும் செலுத்திப் பிறாண்டு பிறாண்டுன்னு பிறாண்டி விட்டா.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வலிகாமம் கல்வி வலயத்தின் தரம் ஒன்றுக்கான கால்கோள்விழா இம்முறை யாழ்.கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயத்தில் அதிபர் த.தயானந்தன் தலைமையில் கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்ற போது யாழ்.எயிட்ஸ் அமைப்பினால் புதிய மாணவர்கள் அனைவருக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமியும் சிறப்பு விருந்தினராக ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி. றூ.உதயரட்ணம் கலந்து சிறப்பித்தனர்.





துன்னாலை வடக்கு வல்லியானந்தம் விளையாட்டுக் கழகத்தினால் அண்மையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மருந்துகள் வழங்குவதற்கான 50 ஆயிரம் பொதிகள் மற்றும் கழக இளைஞர்களால் இரத்ததானம் என்பன வழங்கப்பட்ட போது...



மல்லாகம் நீதவான் இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாமில் வாழும் மக்களுடன் இணைந்து யாழ். மகளிர் அபிவிருத்தி நிலையத்தினர் தைப் பொங்கல் விழாவைக் கொண்டாடிய போது..



தமிழர் முன்னேற்றக்கழகம் முன்னெடுத்து வரும் இலவச பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்கும் திட்டத்திற்கு சாவகச்சேரி இளைஞர் சி.புவிசுதேஸ் கொப்பிகள் மற்றும் புத்தகப்பை என்பவற்றை அன்பளிப்புச் செய்த போது... (படம்:- சாவகச்சேரி செய்தியாளர்)




கோவிலாக்கண்டி மேற்கு தச்சன் தோப்பு கந்தையா கனகம்மா நிதியம் மந்த போசாக்கும் நலிந்த பொருளாதாரத்தையும் கொண்ட 60 குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு போசாக்கு உணவுப் பொதிகளையும் மற்றும் அவசர கவனிப்புத் தேவைப்பட்ட 25 குடும்பங்களுக்கு பால்மா வகைகளும் அண்மையில் வழங்கப்பட்டன. நாவற்குழி மகாவித்தியாலய அதிபர் திருமதி வசந்தாதேவி மேகலிங்கம் மந்த போசாக்கு உள்ள குழந்தைகளுக்கு ஊட்டச் சத்து உணவுப் பொதிகள் வழங்கும் போது...

நிழல்கள்



வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி பரமேஸ்வராக் கல்லூரியின் கால்கோள் விழா அண்மையில் கல்லூரியில் நடைபெற்ற போது... (படம்;-பொற்பதி செய்தியாளர்)





யாழ்.கொக்குவில் ஸ்ரீ கிருஷ்ணா அறநெறிப்பாடசாலை நடத்திய வருடாந்த பட்டிப்பொங்கல் விழா கடந்த வெள்ளிக்கிழமை கொக்குவில் கோணாவளை வீதியில் அமைந்துள்ள யாழ்.விஷனில் எழுத்தாளர் பிரம்மஸ்ரீ இரா.சந்திரசேகரசர்மா தலைமையில் இடம்பெற்ற போது...(படம்:-மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பின் மனதை வெல்லாது அரசியல் தீர்வைக்காண முடியாது

## வாசுதேவ நாடாளுமன்றில் தெரிவிப்பு

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மனதை வெல்லாது, தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக்காணமுடியாது என்பதுடன் தேசிய சமத்துவத்தையும் கட்டியெழுப்ப முடியாது என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான வாசுவே நாயணக்கார நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.**

ஆட்சி மாற்றத்தின் பின்னர், புதிய அரசின் தலைமையில் முதலாவது நாடாளுமன்ற அமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த அமர்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனநாயக இடதுசாரி முன்னணி எதிரணியில் இருந்து கொண்டு அரசின் மக்கள் சார் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும். குறிப்பாக வடக்கில் படையினரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள காணிகளின் விபரங்களை புதிய அரசு திரட்டிவருகின்றது. இது வரவேற்கப்படவேண்டிய விடயம். இதை கட்டாயம் செய்தாக வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனநாயக விழுமியங்களை பின்பற்றிய தலைவராவார். அவர் தேர்தல்களை நடத்தினார். ஏன், எதிர்ப்புக்கு மத்தியில் வட மாகாணசபைத் தேர்தலையும் நடத்தினார்.

எனவே, அவர் மீதான வீண் குற்றச்சாட்டுகளை ஏற்கமுடியாது. அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மனதை வெற்றி கொள்ளாமல், தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண முடியாது. அதனை முதலில் செய்யவேண்டும். அவ்வாறான நடவடிக்கைகளுக்கு எமது கட்சி பூரண ஒத்துழைப்பு வழங்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# முன்னாள் பிரதி அமைச்சர் உள்ளிட்ட மூவரின் விளக்கமறியல் மீண்டும் நீடிப்பு

துப்பாக்கிச்சூடு நடத்தி ஒருவரை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட மூவர் எதிர்வரும் 26ஆம் திகதி வரை மீண்டும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் மின்சக்தி பிரதி அமைச்சர் பிரேமலால் ஜயசேகர, மாகாண சபை உறுப்பினர் நிலந்த ஜயகொடி, காவத்தை பிரதேச சபை தலைவர் வஜிர தர்ஷன டி சில்வா ஆகியோரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 5ஆம் திகதி அதிகாலை காவத்தை பகுதியில் துப்பாக்கிச்சூடு நடத்தி ஒருவரை கொலை செய்ததாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் பெல்மடுல்ல நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நீதவான் தினேஸ் லக்மால் பெரேரா சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160-200 | 160 | 220 | 160 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 500 | 500 | 600 | 500 |
| தக்காளி | 180 | 200 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 | 60 |
| கோவா | 160 | 120 | 140 | 160 |
| கரட் | 200 | 180 | 130 | 200 |
| பூசணி | 40 | 40 | 40 | 60 |
| புடோல் | 100 | 150 | 100 | 100 |
| வாழைக்காய் | 90 | 100 | 70 | 100 |
| சின்ன வெங்காயம் | 40-90 | 100 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 110 | 80 |
| பாகற்காய் | 120 | 180 | 150 | 250 |
| வெண்டிக்காய் | 100-140 | 140 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 70 |
| பயற்றங்காய் | 120-200 | 180 | 120 | 120 |
| லீக்ஸ் | 240-290 | 250 | 280 | 250 |
| பீற்றூட் | — | 200 | — | 200 |
| கறிமிளகாய் | 200 | 300 | 240 | 240 |
| முருங்கைக்காய் | — | 600 | — | — |
| போஞ்சி | 220 | 200 | — | 200 |
| கத்தரிதம்புள்ள | — | 140 | 200 | 140 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 | 40 |
| தேசிக்காய் | 40 | 80 | 50 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 40 | 40-50 |
| இராசவள்ளி | 90 | 120 | 100 | 100 |

# நாடாளுமன்றில் இருதரப்பு இல்லை

## கல்வி அமைச்சர் கூறுகிறார்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் ஆளும்தரப்பு மற்றும் எதிர்த்தரப்பு என்று இரு பக்கங்கள் இருக்கின்றனவா என்று யோசிக்க முடியாத அளவில், நாடாளுமன்றத்துக்குள் ஒற்றுமை நிலவுகின்றது என்று ஊடகத்துறை மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சின் கடமைகளை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பொறுபபேற்றுக் கொண்ட அவர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அமைச்சர்,

மக்கள் எதிர்பார்க்கும் நாடாளுமன்ற மகத்துவத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார். (இ-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 260

கோபால் கோபாலகிருஷ்ணன்




கீர்த்து கரன்




மோகன் மோகனரூபன்




டொறின் மன்மதநாயகம்




கோகுலன் கோகுல்




சுவஸ்தி சுவஸ்திகா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் பொருளாதார வளர்ச்சிக் கொள்கைகள்

***நடந்து முடிந்த எகனாமிக்டைம்ஸ உலக பொருளாதார கூட்டத்தில் (Economic Times Global Business Summit ) இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஒரு முக்கியமான உரை நிகழ்த்தி உள்ளார். உரையிலே வளர்ச்சியை எப்படி கொண்டு வருவது, அரசு என்றால் என்ன? வளர்ச்சி யாருக்கு பயன்படவேண்டும் என்பதெல்லாம் பேசியிருக்கிறார். பொருளாதார சீர்திருத்தம் என்றால் என்ன என்பதை பற்றி அருமையாக விளக்கியுள்ளார். அவர் என்ன செய்யப்போகிறார் என கேட்டுக்கொண்டிருந்தவர்களுக்கு நல்ல பதில் தந்துள்ளார்.***

## பிரதமர் நரேந்திர மோடியின் உரை



இந்திய மற்றும் வெளிநாடு வாழ் நண்பர்களே, இந்த உலக பொருளாதார கூட்டத்தில் பேசுவது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. பொருளாதார நிபுணர்களையும் தொழில் முனைவோரையும் ஒன்றுசேர்க்க இது ஒரு நலல இடம். இதைக் கூட்டிய எகணாமிக்டைமஸ் பத்திரிக்கைக்கு என்னுடைய பாராட்டுக்கள்.

அடுத்த இரு நாட்களில் நீங்கள் அனைவரும் வளர்ச்சி, பணவீக்கம், தொழில் உற்பத்தி, உள்கட்டமைப்பு, தவற விடப்பட்ட வாயப்புகள் மற்றும் இருக்கும் அளவில்லா வாய்ப்புக்களை பற்றி விவாதிப்பீர்கள். இதுபோல வேறெங்கும் வளர்ச்சி வாய்ப்பு இல்லை என்று சொல்லத்தக்க நாடாக இந்தியாவை நீங்கள் பார்ப்பீர்கள். உங்களுடைய கருத்துக்கள் அனைத்தும் அரசின் கவனத்தை பெறும் என்பதில் உறுதியளிக்கிறேன்.

நண்பர்களே, ஜனவரி 14 அன்று மகர சங்கராந்தி கொண்டாடப்படுகிறது. இது ஒரு முக்கியமான பண்டிகை ஆகும். இது புண்ணிய நேரமாக கருதப்படும் உத்தராயணத்தின் ஆரம்பம் ஆகும். லோகிரி பண்டிகையும் இதோடு சேர்ந்து வருகிறது. இந்த நாளிலே சூரியன் தன்னுடைய பயணத்தை வடக்கு நோககி தொடங்குகிறான். இது குளிர்காலத்திலிருந்து வசந்த காலத்தை ஆரம்பிப்பதாகும்.

இந்த நாளிலே புதிய இந்தியாவானது தன்னுடைய மாற்றத்தையும் தொடங்குகிறது. ஏதுமில்லாத குளிர்காலம் போன்ற கடந்த 3-4 வருடங்களிலிருந்து வளர்ச்சி எனும் வசந்த காலத்திற்கு பயணத்தை தொடங்குகிறது.

அரசு இயந்திரம் என்பதே வேலை செய்யாது போனதாலும் கடந்த இரண்டு வருடங்களாக 4 சத வளர்ச்சியாலும் நாடு மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளது. டெலிகாமிலிருந்து நிலக்கரி வரை நடந்த ஊழல்களால் பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தியா என்பது வாய்ப்புக்களுக்கான இடம் என்பதிலிருந்து நாம் நிலை தவறிவிட்டோம். இதற்கு மேலும் பணமோ அல்லது தொழிலாளர்களோ இங்கே வாய்ப்பு இல்லை என நாட்டை விட்டு வெளியேறுவதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

நாம் இந்த சேதாரத்தை சரி செய்தாக வேண்டும். வளர்ச்சி விகிதத்தை திரும்பவும் கொண்டு வருவது இமாலய வேலையாக இருக்கும். கடின உழைப்பு, தொடர்ந்த நோக்கு, உறுதியான அரசு செயல்களால் மட்டுமே அதை சரி செய்ய முடியும். ஆனால் நாம் இந்த மோசமான மனநிலையிலிருந்து மீணடாகவேண்டும். கண்டிப்பாக நாம் மீளவேணடும். இந்த முறையிலேயே நாம் முன்வைக்கும் அடிகளை பார்க்க வேண்டும்.

நண்பர்களே, தெய்வ வசத்தாலேயே இந்த நாட்டிற்கு சேவை செய்யும் வாய்ப்பு எனககு கிடைத்துள்ளது. "ஒவ்வொரு கண்ணிலிருந்தும் எல்லா கண்ணீர்த்துளிகளையும் துடைக்கும்" வரை ஓயக்கூடாது என காந்தி சொல்லியிருக்கிறார். இதுவே வறுமை ஒழிப்பு என்பதற்கான என்னுடைய அடிப்படையாகும். இதுதான் ஒருங்கிணந்த வளர்ச்சி என்பதன் என்னுடைய புரிதல் ஆகும். இந்த கனவை புதிய இந்தியா எனும் நனவாக்க நம்முடைய பொருளாதார நோக்கங்கள், முடிபுகள பற்றி தெளிவாக இருக்கவேண்டும்.

அரசு என்பது கூட்டு அமைப்பு. அதிலே பொருளாதாரம் என்பது வளர்ச்சியை நோக்கி தூண்டப்பட்டதாக இருக்கும். வளர்ச்சி என்பது எல்லா இடங்களிலும் முன்னேற்றத்தை கொண்டுவரும். அதிலே முன்னேற்றம் என்பது வேலை வாய்ப்பை கொண்டு வரும். வேலைவாய்ப்பு திறமையால் அடையப்படும். அதிலே திறமைகள் உற்பத்தியோடு இயைந்து இருக்கும். உற்பத்தி என்பது தரத்தால் அறியப்படும். அதிலே தரம் என்பது சர்வதேச தரத்தில் இருக்கும். சர்வதேச தரத்தில் இருந்தால் வளம் பொங்கும். இதுவே என்னுடைய கருத்தில் பொருளாதார நல்ல ஆட்சி மற்றும் முழுமையான வளர்ச்சி என்பதாகும். இதற்கு மேல் இதற்கான நல்ல வாய்ப்புக்களை இந்திய மக்களுக்கு உருவாக்கி கொடுப்பதால் மட்டுமே இந்திய மக்கள் வளர்ந்து இந்த புதிய இந்தியாவை உருவாக்குவார்கள்.

நண்பர்களே, இந்த புதிய வசந்த காலத்தை அடைய நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என சொல்ல கடமைப்பட்டுள்ளேன். என்னுடைய அரசு வெகுவேகமாக கொள்கைகள், சட்டங்களை கொண்டுவந்து வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. இதிலேதான் நான் எல்லோருடைய ஒத்துழைப்பையும் கோருகிறேன். முதலில், நாங்கள் வரவுசெலவு இடையேயான பற்றாக்குறையை குறைக்க பட்ஜெடில் அறிவித்ததை அடைய தீர்மானித்துள்ளோம். இதற்காக முறையான வழியில் உழைத்துக்கொண்டிருக்கிறோம். உங்களில் பலர் (ஜப்பானிய தரமுறையான) கெய்சன் என்பதை உங்களில் நிறுவனங்களில் பின்பற்றுவீர்கள். இது தேவையில்லாத செலவுகளையும் வீணாகும் செலவுகளையும் குறைக்கிறது. இதற்கு சுய கட்டுப்பாடு தேவை. இதுபோலவே நாங்கள் செலவு நிர்வாக குழுவை வைத்து அதன் மூலம் தேவையில்லாத செலவுகளை குறைக்கிறோம். இதன் மூலம், செலவிடப்படும் பணத்திற்கு அதிக வேலை செய்யவும், செய்யப்படும் செலவுக்கு அதிக பலன் தரவும் செய்கிறோம்.

இரண்டாவதாக பெட்ரோலியம் துறை பெரிய சீர்திருத்தங்களை கண்டுள்ளது. டீசல் விலைகள் அரசு கட்டுப்பாட்டிலிருந்து நீக்கப்பட்டுவிட்டன. இது பெட்ரோலிய சில்லறை விற்பனையில் தனியார் நுழைய வழிவகுக்கும். எரிவாயு விலைகள் சர்வதேச விலைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. இது இன்னோரு தடவையும் முதலீட்டிற்கு வழிவகுக்கும. இது எரிவாயு கிடைப்பதை அதிகரிக்கும். இது மின் உற்பத்தியில் இருக்கும் பிரச்சினைகளை தீர்க்கும்.

இன்றைக்கு இந்திய சமையல் எரிவாயு மானியமே உலகின் மிகப்பெரும் நேரடி பணப்பட்டுவாடா திட்டம் ஆகும். 8 கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இன்றைக்கு நேரடியாக மானியனத்தை அவர்களின் வங்கி கணக்கிலேயே பெறுகிறார்கள். இது இந்தியாவில் இருக்கும் குடும்பங்களில் மூன்றில் ஒரு பங்கு ஆகும். இது பணம் வீணாவதை தடுக்கும். இதைப்போலவே மற்ற மானிய திட்டங்களுக்கும் நேரடி பணப்பட்டுவாடாவை செய்ய திட்டமிட்டுள்ளோம். மூன்றாவதாக, கடும் நடவடிக்கைகள் மூலம் பணவீக்கம் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

கச்சா எண்ணெய் விலைகள் உதவினாலும் எண்ணெய் அல்லாத பணவிக்கமும் மிக குறைவான அளவிலேயே உள்ளது. உணவு பணவீக்கம் ஒருவருடத்திற்கு முன்பு இருந்த 15% சதவீதத்தில் இருந்து கடந்த மாதம் 3.1 சதவீதம் ஆக குறைந்துள்ளது. மே 2014 இல் இருந்து மிகவும் கடும் வீழ்ச்சியை அடைந் துள்ளது.

இது ரிசர்வ் பேங்க் வட்டி விகிதத்தை குறைத்து நிலையான வளர்ச்சியை முன்னெடுக்க இடம அமைத்துள்ளது. நான்காவதாக, பொருட்கள் மற்றும் சேவைகள் வரிக்காக அரசியல் சட்டத்தை மாற்றுவது குறித்தான பொதுப் பார்வை எட்டப்பட் டுள்ளது. இந்த பொருட்கள் மற்றும் சேவை வரி என்பது மிகப்பெரும் மாற்றமாகும். இது கடந்த பத்து வருடங்களாக நிலுவையிலுள்ளது. இது மட்டுமே இந்தியாவை போட்டியிடவும் முதலீடு செய்யவும் வழி வகுக்கும். ஐந்தாவதாக, ஏழைகள் பண அமைக்குள் கொண்டுவரப்பட்டுள்ளனர். குறைந்த கால அளவிலான நான்கே மாதங்களில் 10 கோடிக்கும் மேலான புதிய வங்கி கணக்குகள் பிரதமரின் ஜன்தான் யோஜ்னா திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டுள்ளன. நம் முடைய பெரிய நாட்டிற்கு இது மிகப்பெரும் சவாலாகும். ஆனால் அனைத்து வங்கிகளின் உறுதியுடனும் முழு ஆதரவுடனும் நாம் இப்போது கிட்டத்தட்ட முழு வங்கிமயமாக்கப்பட்ட நாடாக இருக்கிறோம். விரைவில் இந்த கணக்குகள் அனைத்தும் ஆதார் கணக்குடன் இணைக்கப்படும். வங்கி சேவைகள் நாடு முழுவதும் பொதுவான விடயமாக ஆகும்.

இது மிகப்பெரும் வாய்ப்புகளை எதிர் காலத்திற்காக திறக்கும். மக்களின் சேமிப்பு உயரும். அவர்கள் புதிய நிதி திட்டங்களில் முதலீடு செய்வார்கள். 102 கோடி மக்கள் தங்களின் காப்பீட்டையும் ஓய்வு ஊதியத்தையும் எதிர்பார்க்கலாம். நாடு வளர வளர இந்த வங்கிக்கணக்குகள் புதிய தேவைகளையும் வளர்ச்சியையும் உருவாக்கும். நாம் எப்போதும் சமூக ஒற்றுமை, தேசிய ஒற்றுமை போன்றவற்றை விவாதித்து வந்துள்ளோம். ஆனால் நாம் எப்போதும் நிதி ஒற்றுமையை பற்றி பேசியதே இல்லை. அனைவரையும் நிதி முறைமைக்குள் கொண்டுவருவதைப் பற்றி. இது ஒரு குறிக்கோளில் சோஷலிஸ்டுகளும் கேப்பிடலிஸ்டுகளும் ஒத்த கருத்து கொண்டிருக்கிறார்கள். நண்பர்களே இதை விடப் பெரிய சீர்திருத்தம் என்ன இருக்க முடியும்?

ஆறாவதாக, எரிசக்தி உற்பத்தித்துறை சீர்திருத்தப்படுகிறது. நிலக்கரி சுரங்கங்கள் இப்போது வெளிப்படையான ஏலம் மூலம் ஒதுக்கப்படுகின்றன. சுரங்க விதிகள் மாற்றப் பட்டும் அதிகளவிலான நிலக்கரி உற்பத்தி செய்யப்படுகிறது. இதே போன்ற சீர்திருத் தங்கள் மின் உற்பத்தி துறையிலும் செய்யப் படுகின்றன. நேபாளத்திலும் பூடானிலும் நெடுங்காலமாக கிடப்பில் போடப்பட்டிருந்த திட்டங்களை அந்தந்த அரசுகளின் உதவியுடன் முன்னெடுக்கிறோம். அனைவருக்கும் 24 மணி நேர மின்சாரம் கொடுக்க எல்லா வழிகளிலும், மீளுற்பத்தி உடனும், முயற்சி எடுக்கப்படுகிறது. ஏழாவதாக, இந்தியாவானது முதலீட்டிற்கு ஏற்ற இடமாக மாற்றப்படுகிறது. அந்நிய முதலீட்டு வரையறைகள் காப்பீட்டு துறையிலும் ரியல் எஸ்டேட் துறையில் அதிகரிக்கப்பட்டுள்ளது. அந்நிய முதலீடும், தனியார் முதலீடும் ராணுவத்திலும் ரயில்வேயிலும் முன்னெடுக்கப்படுகிறது

(நில உடைமையாளர்களிடமிருந்து) நிலத்தைப் பெறும் சட்டம், அரசு விதிகளை எளிதாக்கும் படியும் வேகமாக செயல்படும் படியும் மாற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் (தங்கள் நிலங்களை அளிக்கும்) விவசாயிகளுக்கு அதற்கான நல்ல விலை கிடைக்கும். இது உள்கட்டமைப்பு வசதிகளையும் உற்பத்தியையும் அதிகரிக்கும். எட்டாவதாக. உள் கட்டமைப்பு வசதிகள் ஊக்குவிக்கப்பட்டுள்ளன. ரயில்வேகளிலும் சாலைகளிலும் மிக அதிகமாக முதலீடுகள் திட்டமிடப்பட்டுள்ளன. புதிய வழிமுறைகளும் அமைப்புகளும் கொண்டுவரப்பட்டு அவற்றின் பலனை முழுவதுமாக அடைய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஒன்பதாவதாக, வெளிப்படையாக செயல்படுதல், திறமைக்கு முன்னுரிமை அளித்தல் ஆகிய விடயங்கள் அரசுத் துறைகளில் இருக்க வேண்டியது மிக அவசியம். நிறுவனமயமாக்கப்பட்ட சீர்திருத்தங்களும் விரைவான வளர்ச்சிக்கு அவசியம். இவைகளுடன் நேர்மறையான கட்டுப்பாடு விதிகள், நிலையான வரிகள் மற்றும் வணிகம் செய்ய எளிதாக்குதல் போன்றவை வேகமாக முன்னெடுக்கப்படுகின்றன. இது எப்படியென்றால், நான் சமீபத்தில் பொதுத்துறை வங்கிகளுக்கு அவற்றின் கடன்வழங்குதல் அல்லது வணிக செயல்பாடுகளில் அரசாங்க தலையீடு இல்லாமல் முழு சுதந்திரமாக செயற்படலாம் என உறுதியளித்துள்ளேன்.

நாம் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி நல்லாட்சியை அளிக்கவேண்டும். உதாரணமாக, சாதாரணமான சிறிய விடயமான பையோமெட்ரிக் முறையிலான வருகைப் பதிவேடு என்பது (அரசுப் பணியாளர்கள்) அலுவலகத்திற்கு நேரத்தில் வருவதை அதிகமாக்கியிருக்கிறது. வேலை செய்வதை ஊக்குவிக்கவும் செய்திருக்கிறது. பெரிய விடயங்களான விண்வெளி தொழில்நுட்பத்தை பயன்படுத்தி திட்டமிடுல் வரைபடங்கள் தயாரித்தல், இன்னும் பெரிய மாற்றங்களைக் கொண்டு வரும்.

பொது விநியோக முறையை முழுமையாக கணினிமயமாக்குவதற்காக ஒரு பெரிய திட்டத்தை அறிவிக்க இருக்கிறேன். முழு பொது விநியோக முறையும், உணவுக் கட்டுப்பாட்டுக் கழக திட்டங்கிகளில் ஆரம்பித்து ரேஷன் கடைகள், நுகர்வோர் வரைக்கும் முழுமையாக கணினி மயமாக்கப்படும. தொழில்நுட்பமானது சரியான உணவு விநியோகத்தையும் மக்களின் வளத்தையும் முன்னெடுக்கும்.

அடுத்த பெரிய சீர்திருத்தம் என்பது வெறுமனே திட்டமிடுதலில் இருந்து இந்தியாவை மாற்ற முயல்வதாகும். இதற்காகவே இந்தியாவின் மாற்றத்திற்கான தேசிய நிறுவனம் 'நீதி ஆயோக்' அமைக்கப்பட்டது அந்த வழியில் ஒரு முதல் அடிவைப்பாகும். இது நாட்டின் ஒருங்கிணைந்த கூட்டாட்சியை போட்டியின் மூலம் எடுத்துச்செல்லும். நீதி ஆயோக் என்பதே நம்பிக்கையை அளிக்கவும் மத்திய மாநில அரசுகளுக்குள் ஒருங்கிணைப்பு செய்வதற்கு நம்மிடம் இருக்கும் தாரக மந்திரம் ஆகும்.

இந்த பட்டியல் மிகவும் பெரியது. நான் இதைப்பற்றி நாட்கணக்கில் பேசிக்கொணடே இருக்கலாம். ஆனால் நம்மிடம் அவ்வளவு நேரம் இல்லை. ஆனால் நான் நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதற்கான நிலையை சொல்ல விரும்புகிறேன். நாம் இவ்வளவு செய்திருக்கிறோம். இன்னும் எதிர்காலத்தில் செய்யவேண்டியது பலதும் இருக்கிறது.

நண்பர்களே, சீர்திருத்தங்கள் என்பவை தன்னளவில் முழுமையான இலக்குகள் அல்ல. சீர்திருத்தங்களுக்கு முறையான, உறுதியான பலன்கள் இருக்கவேண்டும். அந்த பலன்கள் மக்களின் நலத்தை மேம்படுதுவதாக இருக்கவேண்டும். அதை அடைய பல வழிமுறைகள் இருக்கலாம் ஆனால் குறிக்கோள் ஒன்றே. சீர்திருத்தங்கள் என்பது உடனடியாக கண்ணுக்கு தெரியாதவையாகவும் இருக்கலாம். ஆனால் சிறு சிறு செயல்களும் சீர்திருத்தங்களை விரைவாக்கலாம். ஒரு சிறிய செயலாக தெரிவது அடிப்படையாகவும் தேவையாகவும் இருக்கலாம.

இணையம்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசடிகள் தொடர்பில் 30000 முறைப்பாடுகள்

## பாராளுமன்றில் ரத்ன தேரர் தகவல்

(கொழும்பு)

**ஊழல் மோசடிகள் தொடர்பில் இதுவரை சுமார் 30 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. எந்த ஒரு கட்சியினாலுமோ பிரதம ராலோ அல்லது அவரது அமைச்சரவையாலோ மேற்படி மோசடிகள் தொடர்பான விசாரணைகளை தடுத்து நிறுத்த முடியாது என்று தெரிவித்த ஜாதிக ஹெல உறுமய வின் பாராளுமன்ற குழுத்தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது நிலைப் பாடு தொடர்பில் மிக தெளிவாக எடுத்துக் கூறியு ள்ளது எனவும் தெரிவித்தார்.**



அதேபோன்று ஜனாதிபதி மைத் திரிபாலவினதும் ஐக்கிய தேசியக் கட்சியினதும் நிலைப்பாடுகள் தெளிவானவையாகும். ஆகவே இங்கு எந்த விதமான இரகசிய உடன்படிக்கைகளும் மேற்கொள் ளப்படவில்லை என்று தெரிவித் தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற புதிய அரசாங்கத்தின் முதலாவது அமர் வில் கலந்து கொண்டு உரையாற் றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

அபிவிருத்தி என்ற பெயரில் பாரிய மோசடிகள் இடம்பெற்றுள் ளன. அந்த வகையில் ஊழல் மோசடிகள் தொடர்பில் இதுவரை 30 ஆயிரம் முறைப்பாடுகள் குவிந் துள்ளன. இவை முறையாக விசார ணைக்கு உட்படுத்தப்படும். பிரதம ராலோ அவரது அமைச்சரவை யாலோ இல்லாவிட்டால் எந்த வொரு கட்சியினாலுமோ இந்த விசாரணைகளை தடுத்து நிறுத்தி விட முடியாது.

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர் தலானது மிகவும் நீதியானது என்று கூறப்படுகின்றது. அப்படி கூறுவதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. நீதியான தேர்தல் ஒன்று இங்கு நடத்தப்படவில்லை. மாறாக அனை த்து அரச வளங்களும் அரச உத்தி யோகத்தர்களும் அரச ஊடகங்க ளும் இணைத்துக் கொள்ளப்பட்ட வகையிலேயே மேற்படி தேர்தல் நடத்தப்பட்டது.

ஐக்கிய தேசியக்கட்சி, தமிழ் தேசிய கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ், ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளுக்கு முன்பதாகவே மக்கள் தீர்மானம் ஒன்றை எட்டியிருந்த னர். அந்த வகையிலேயே தேர்தல் முடிவுகளும் வெளியாகின. யுத்தம் தொடர்பில் அதிகமாக இங்கு பேசப் படுகிறது. யுத்த வெற்றி தனிநபரால் மேற்கொள்ளப்பட்டதாக இங்கு கூறப்படுகிறது. யுத்த வெற்றியானது எவரினதும் தனிப்பட்ட வெற்றியாகி விடமுடியாது. இந்த வெற்றியில் பல்வேறு தரப்பினர் பங்கு பற்றி யுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# ஜனாதிபதித் தேர்தல் பிரசாரப் பணிகளுக்காக பேருந்துகளை பயன்படுத்தியதில் பாரிய நட்டம்

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரப் பணிகளுக்கு பேருந்துகளை உப யோகப்படுத்தியதில் இலங்கை போக்குவரத்து சபைக்கு 1400 இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டு ள்ளது. இதற்கமைய குறித்த பணத் தொகை உரிய கட்சியிடம் இருந்து மீளப்பெற வேண்டும் என டிரா ன்ஸபரன்ஸிஇன்டர்நஷனல்அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அவ் அமைப்பின சிரேஷ்ட முகாமையாளர் ஷான் விஜேயதுங்க தெளிவுபடுத்தி போக்கு வரத்து அமைச்சர் ரஞ்ஜித் மத்தும பண்டாரவிற்கு அனுப்பியுள்ள கடி தத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இலங்கை போக்குவரத்து சபை க்கு சொந்தமான 2 ஆயிரத்து 400 பேருந்துகள் நடந்து முடிந்த ஜனாதி பதித தேர்தலின் போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட் பாளர் மகிந்த ராஜபக்ஷவின் பிரசா ரப்பணிகளுக்கு ஈடுபடுத்தப்பட்டு ள்ளன. இதற்கான ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன. தேர்தல் காலப் பகுதியின் போது தினமும் 600 பேருந்துகள் இவ்வாறு பாவனை க்கு ஈடுபடுத் தப்பட்டு வந்துள்ளன.

சில நாட்களில் இதன் தொகை ஆயிரத்து 200 ஆக அதிகரித்தும் உள்ளன. இவ்வாறு அரச உடை மையான இலங்கை போக்குவர த்து சபைக்கு சொந்தமான பேருந்து வண்டிகளை உபயோகித்ததன் ஊடாக போக்குவரத்து சபைக்கு ஒரு நாளைக்கு 60 இலட்சத்திற்கும் அதி கமானஅளவு நட்டம் ஏற்பட்டுள்ளது.

தேர்தல் பிரசாரப் பணிகளுக்கு இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகள் உபயோ கித்தமையினால் ஆயிரத்து400 இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. இதன்படி 250 இலட்சம் ரூபாவே சபைக்கு செலுத்தப்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பில் பரிசீ லனை செய்து உரிய தொகை யினை குறித்த தரப்பினரிடமிருந்து போக்குவரத்து சபைக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும் என அமைச் சிடம் அவ் அமைப்பு மேலும் கோரிக்கை விடுத்துள்ளது.(இ-5)

# புதிய அரசாங்கத்தில் கல்வித் துஷ்பிரயோகத்திற்கு இடமளிக்கக்கூடாது

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கிழக்கு மாகாண கல்விப் புலத் தின் சட்ட ஆட்சிக்கான சட்டமுறி வுகள் பொறுப்புக்கூறலுடன் நல்ல ரசாட்சி உறுதிப்படுத்தப்பட வேண் டும் என இலங்கை ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள் ளது.

கிழக்கு மாகாண கல்வி நிர்வா கத்தில் நடைபெற்ற அதிகார துஷ்பி ரயோகங்களுக்கு புதிய அரசா ங்கத்தில் இடமளிக்கக்கூடாது என் பதை வலியுறுத்தி இலங்கை ஆசிரி யர் சங்கத்தின் மட்டக்களப்பு கிளை செயலாளர் பொ.உதயரூபன் வெளி யிட்டுள்ள அறிக்கையிலே இவ் வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது, பொறுப்புடமை ஒளிவுமறைவற்ற வெளிப்படை யான நிலை, சட்ட விதிகளை மதி த்தல், ஜனநாயக சமூகம் ஒன்றிலு ள்ள மனித உரிமைகளைப் பாது காத்தல் போன்ற உயர்ந்த பண் புகள் மதிக்கப்பட்டு கிழக்கு மாகாண கல்விப் புலத்தில் திறமையானதும் பயன் தருவதுமான நிர்வாகக் கட்டமைப்பும் நல்லாட்சியும் உறு திப்படுத்தப்படல் வேண்டும்.

கடந்த கால கிழக்கு மாகாண கல்வி நிர்வாகத்தில் சட்ட விதிக ளுக்கு முரணாக நியமிப்புகள், பதவியுயர்வுகள், இடமாற்றங்கள் வழங்கப்பட்டிருந்ததை இலங்கை ஆசிரியர் சங்கம் பலமுறை சுட்டிக் காட்டியுள்ளது. ஆனால் மாகாண ஆளுநர் வகை சொல்ல[illegible] கூடிய நல்லாட்சியை உறுதிப்படுத்த வில்லை.

முறையற்ற விசாரணை மூலம் கல்விப்புலத்தில் உள்ளவர்களும் தொழில் சங்க உறுப்பினர்களும் பழிவாங்கப்பட்டதோடு கருத்துச் சுதந்திரம், அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாகவும் கிழக்கு மாகாண அதிபர்கள், ஆசிரியர்கள் காணப்பட்டனர்.

பல கல்வி அதிகாரிகள் மற்றும் முறையற்ற நியமிப்புக்கள் வழங்க ப்பட்ட அரசியல்வாதிகளின் கைக் கூலிகள், சட்ட விதிகளுக்கு முர ணாக அரசியல் நிரல்களையும் பணி ப்புரைகளையும் செயற்படுத்தும் முக வர்களாகச் செயற்பட்டதை வன்மை யாகக் கண்டிப்பதோடு இவர்கள் சட்ட த்தின் முன் நிறுத்தப் படல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ-5)

# இன்று ஒரு தகவல்

## வெற்றியின் இரகசியம்

சில பேருக்குத் தொட்டதெல்லாம் வெற்றியாக முடியும்.

சில பேருக்கு தொட்டதெல்லாம் தோல்வியாக முடியும்.

இதிலுள்ள இரகசியம் என்ன?

அதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் இந்தக் கதையை நீங்கள் படியுங்கள்.

ஜப்பானில் பெரிய வீரர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் நொபுநாகா.

அவரிடம் படைவீரர்கள் அதிகளவில் இல்லை. சிறிய படைப் பலத்தை வைத்துக்கொண்டு பெரிய பெரிய படைகளையெல்லாம் அவர் முறியடித்திருக் கிறார். அவ்வளவு சாமர்த்தியம் உள்ளவர் நொபு நாகா.

ஒரு சமயம் அவர் எதிரியின் மீது படையெடுத்து சென்றிருந்தார். அப்போது அவருடைய படை வீரர்க ளுக்கும் தளபதிக்கும் ஒரு சந்தேகம் வந்துவிட்டது. இந்தப் போரில் நாம் வெற்றிபெற முடியுமா? என்பது தான் அவர்களுக்கு ஏற்பட்ட சந்தேகம். இருந்தாலும் இதை எப்படி தலைவரிடம் தெரிவிப்பது.

மிகவும் யோசனை செய்தார்கள். கடைசியாக துணிச்சலை வரவழைத்துக் கொண்டு மெதுவாக கேட்டுவிட்டார்கள்.

தலைவர் நொபுநாகா பார்த்தார். அவர் சரி அதை நாம் முடிவு செய்ய வேண்டாம். புத்த விகாரைக்கு போய் விட்டு வருவோம். பூ வா தலையா போட்டுப் பார்ப்போம். என்ன வருகிறதோ அதன்படி செயற்படுவோம். ஏனெ ன்றால் போருக்குச் செல்லும் போது முழு மனதோடு போக வேண்டும். மனதில் ஊசலாட்டம் இருக்கக் கூடாது என்று கூறினான்.

அவர் கூறியதற்கு தளபதியும் படைவீரர்களும் சரி என்று ஒப்புக் கொண்டார்கள். உடனே அவர்கள் எல்லோரும் அங்கேயிருந்த கோவிலுக்குச் சென்றார் கள்.

தலைவர் உள்ளே சென்றார். நீண்ட நேரத்தின் பின்னர் தலைவர் நொபுநாகா வெளியே வந்தார். அவர் தளபதி,துணைத்தளபளதிகள் எல்லோரையும் அருகில் அழைத்தார். அவர்கள் முன்னிலையில் ஒரு தங்கக் காசை எடுத்தார்.

இதோ பாருங்கள்... இப்போது பூ வா தலையா போட்டுப் பார்க்கலாம். பூ வந்தால் தோற்று விடுவோம் தலை வந்தால் வெற்றி பெறுவோம்.

பூ விழுந்தால் போர் வேண்டாம்... அதை தவிர்த்து விடுவோம். தலை விழுந்தால் போருக்கு போவோம் விதி இப்போது நம் கையில் தான் இருக்கிறது. இங்கு என்ன தீர்ப்பு கிடைக்கிறதோ அதன் படியே நாம் நடந்து கொள்வோம் என்று கூறி விட்டு தங்கக் காசை சுண்டி னார். அது சுழன்று மேலே போய் கணீரென்று தரை யில் விழுந்தது. எல்லோரும் ஆவலோடு அதை குனி ந்து பார்த்தார்கள். தலை தான் விழுந்து கிடந்தது.

அனைவருக்கும் ஒரே மகிழ்ச்சி ஆரவாரம்... அதன் பின் அவர் களுக்கு போருக்கு போவதா வேண்டாமா என்ற சந்தேகம் வரவில்லை. எல்லோரும் உறுதியான முடிவோடு போருக்கு சென்றார்கள்.

வெற்றியோடு திரும்பி வந்தார்கள்.

அப்போது தளபதி உரை நிகழ்த்தினார். அதில் அவர் இந்த வெற்றியை தங்க நாணயம் தான் முடிவு செய்தது. அதனால் விதியை யாராலும் வெல்ல முடியும் என்று கூறினார்.


இதிலிருந்து என்ன தெரிகிறது. வெற்றியின் இரகசி யம் என்ன? மன உறுதி தான்.

எதைச் செய்தாலும் மனக்குழப்பம் இருக்கக் கூடாது. எண்ணித் துணி கருமம் இது வள்ளுவர் வாக்கு.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதா வீட்டில் சசிகலா இருப்பது ஏன்?



ஜெயலலிதா சொத்துக் குவிப்பு மேல்முறையீட்டு வழக்கு கர்நாடக உயர் நீதிமன்றத்தில் 10 நாட்களைக் கடந்து விறுவிறுப்பாகப் போய்க்கொண்டிருக்கிறது. தினமும் காலையில் 10.30 மணிக்குத் தொடங்கி மாலை 5 மணிக்கு முடிகிறது. இதில் ஜெயலலிதா தரப்பில் குமார், மணிசங்கர், செந்தில், அசோகன, பன்னீர்செல்வம், அன்புக்கரசு, செல்வகுமார், பரணிகுமார், கருப்பையா ஆகிய வழக்கறிஞர்கள் மொத்தமாகக் குவிந்துள்ளனர். இவர்களோடு கர்நாடக அ.தி.மு.க மாநில செயலாளர் புகழேந்தியும் தினமும் வந்துவிடுகிறார். அரசு தரப்பில் பவானிசிங், முருகேஷ் மராடியும், தமிழக ஊழல் தடுப்பு கண்காணிப்பு துறை ஐ.ஜியான குணசீலனும் டி.எஸ்.பியான சம்பநதமும் தி.மு.கவைச் சேர்ந்த அன்பழகன் தரப்பில் வழக்கறிஞர்கள் குமரேசன், சரவணன், பாலாஜி, நடேசன், ராமசாமி ஆகியோரும் ஆஜராகி விடுகிறார்கள். கர்நாடக உயர் நீதிமன்றத்தில் தமிழக வழக்கறிஞர்கள் கூட்டம் தினமும் கூடிக்கொண்டே இருக்கிறது.



ஆவணங்களை நீதிபதி கேட்ட உடனே எடுத்து தருவதற்காக முன்பு சிறப்பு நீதிமன்றத்தில் பணிபுரிந்த பிச்சமுத்து, யோகானந்தா, சசிகுமார் ஆகியோர் இங்கு வரவழைக்கப்பட்டுள்ளார்கள். இந்த சிறப்பு அமர்வுக்கு இவர்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களும் நீதிபதி கேட்கும் ஆவணங்களை உடனுக்குடன் எடுத்து தருகிறார்கள்.

ஆரம்பத்தில் இருந்தே கேள்விகளை தொடுத்துவரும் நீதிபதி குமாரசாமி அதனையே தொடர்ந்து வருகிறார்.

**"அன்பழகன் வழக்கறிஞரா?"**

"ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு மேல்முறையீட்டு மனு விசாரணையில் கீழமை நீதிமன்றத்தைப்போலவே இந்த மேல்முறையீட்டிலும் அரசு வழக்கறிஞருக்கு உதவியாக இருக்க எங்களை மூன்றாம் வாதியாக ஏற்றுக்கொண்டு எங்களுடைய எழுத்துப் பூர்வமான வாதத்தைப் பதிவுசெய்ய அனுமதிக்க வேண்டும்" என்று கடந்த 5 ஆம திகதி நீதிபதி குமாரசாமியிடம் அன்பழகன் தரப்பு வழக்கறிஞர்கள் மனுகொடுத்தார்கள. அதையடுத்து நீதிபதி குமாரசாமி அரசு தரப்பையும், ஜெயலலிதா தரப்பையும் எதிர்மனு தாக்கல் செய்ய சொன்னார். அவர்கள் 13 ஆம திகதி தாக்கல் செய்வதாக சொன்னார்கள்.

அதையடுத்து கடந்த 13 ஆம் திகதி அன்பழகன் மனு விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதி, "நீங்கள் அரசு வழக்கறிஞருக்கு உதவுகிறீர்களா? இல்லை எழுத்துப்பூர்வமாக வாதிடுகிறீர்களா? இதில் ஏதாவது ஒன்றை மட்டும்தான் குறிப்பிட வேணடும். நீங்கள் இரண்டையும் குறிப்பிட்டிருப்பது ஏற்புடையதல்ல" என்று சொல்லிவிட்டு, "உங்கள் மனுதாரர் அன்பழகன் எங்கே?" என்று கேட்டார். அதற்கு வழக்கறிஞர் குமரேசன், "அன்பழகன் வரவில்லை. அவருக்கு 92 வயதாகிறது. நீதிமன்றமும் அவருக்கு விதிவிலக்களித்திருக்கிறது" என்றார். அப்போது நீதிபதி, "அன்பழகன் வழக்கறிஞரா?" என்று கேட்டார். இல்லை என்றார் குமரேசன்.

"சிவில் சட்டத்தில் மனுதாரர் ஆஜராக வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், நீங்கள் கொடுத்திருக்கும் மனு 301/2 என்பது கிரிமினல்வழக்கு. இதில் கட்டாயம் மனுதாரர் நேரில் ஆஜராகித்தான் இந்த மனுவை கொடுக்க வேண்டும். என்ற அடிப்படைகூட உங்களுக்கு தெரியாதா? நீங்கள் எத்தனை வருடம் வழக்கறிஞராக அனுபவம் பெற்றிருக்கிறீர்கள்?" என்று சொன்ன நீதிபதி, இறுதியாக, "இந்த மனுக்கள் அனைத்தையும் பதிவாளரிடம் கொடுத்து முறையாக வரட்டும் விசாரிக்கலாம்" என்றார்.



ஜூனியர் வழக்கறிஞர்களுடன் நாகேஸ்வர ராவ்

**ஜெயலலிதா வீட்டில் சசிகலா ஏன் இருக்கிறார்?**

ஜெயலலிதா சார்பில் வாதாடுவதற்காக டெல்லியை சேர்ந்த மூத்த வழக்கறிஞர் நாகேஸ்வர ராவ் வந்துள்ளார். அவர் தனது வாதத்தில், "ஜெயலலிதா இந்த வழக்கு காலகட்டத்தில் எந்த விதமான சொத்துகளையும் வாங்கவில்லை. வழக்கு காலகட்டத்துக்கு முன்பே பல சொத்துகள் வாங்கப்பட்டன. அதற்கு ஒவ்வொரு ஆண்டும் வருமான வரித் துறையில் கணக்குகள் காண்பித்து வரி செலுத்தியும் இருக்கிறார். வருமான வரித் துறையும் அந்த சொத்துகளை மதிப்பீடு செய்து ஏற்றுக் கொண்டுள்ளது.

அதேபோல சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோருக்கு சொந்தமான நிறுவனங்களின் சொத்துகளுக்கு வருமான வரித் துறையில் வரிகளை செலுத்தி இருக்கிறார்கள். இந்த சொத்துகள் அனைத்தும் தங்களுடையது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை வருமான வரித்துறையினரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இப்படியிருக்கும்போது இந்தச் சொத்துகள் அனைத்தும் ஜெயலலிதாவுக்கு சொந்தமானது என்று தமிழக ஊழல் தடுப்பு போலீஸார் குற்றம்சாட்டுவது தவறு. என் மனுதாரரைக் குற்றவாளியாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அன்றைய ஆளும் கட்சியினரைத் திருப்திபடுத்தும் விதமாகத் தமிழக ஊழல் தடுப்பு போலீஸார் செயல்பட்டிருக்கிறார்கள்.

ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் வீட்டில் சசிகலா வசித்து வருகிறார் என்ற ஒரே காரணத்துக்காக சசிகலா பெயரிலுள்ள சொத்துகள் அனைத்தும் ஜெயலலிதாவுக்கு சொந்தம் என்று சொல்வது அநியாயம்.

"ஜெயலலிதா வீட்டில் சசிகலா இருப்பதற்கு என்ன காரணம் என்று ஜெயலலிதா நீதிமன்றத்தில் விளக்க வேண்டும்' என்று தமிழக ஊழல் தடுப்பு போலீஸார் கூறி இருக்கிறார்கள். என் மனுதாரருக்கு சொந்தமான வட்டில் யார் இருக்கலாம் என்று முடிவு செய்யும் உரிமை அவருக்குத்தான் உண்டு. இதில் யாரும் தலையிட முடியாது" என்று குரல் உயர்த்திச் சொன்னார் நாகேஸ்வர ராவ்.

**வருமானவரி தீர்ப்பாயமும், குன்ஹாவின் தோராயமும்!**

நாகேஸ்வர ராவ் தனது வாதத்தில்... "வருமான வரி தீர்ப்பாயம் எங்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்துள்ளது. அந்த வருமானவரி தீர்ப்பாயம் இந்தக் குற்றவியல் நீதிமன்றத்தைக் கட்டுப்படுத்தும். உதாரணமாக பீகார் முன்னாள் முதல்வர் லலலு பிரசாத் யாதவ்வுக்கு வருமான வரித்துறை தீர்ப்பாயம் சாதமாகத் தீர்ப்பளித்தும் பாட்னா உயர் நீதிமன்றம் அதை ஏற்றுக்கொள்ளாமல் லல்லுவுக்கு தண்டனை வழங்கியது. அதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்துக்கு மேல்முறையீடு சென்றபோது பாட்னா உயர் நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பை நிராகரித்துள்ளது என்பதை கனம் பொருந்திய நீதிபதி அவர்கள் முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஜெயலலிதாவுக்குச் சொந்தமான கட்டடங்கள் புதுப்பிக்கப்பட்டன. அந்தக் கட்டடங்களை ஆய்வுசெய்த பொதுப்பணித் துறை இன்ஜினீயர்கள், அவற்றின் மதிப்பை பல மடங்கு அதிகப்படுத்திக் கணக்கீடு செய்துள்ளனர். இதற்கு அப்போதைய அரசின் துாணடுதலே காரணம். கட்டடங்களைத தகுதி வாய்ந்த வல்லுநர்களைக் கொண்டு அளவீடு செய்யவில்லை.

உரிமையாளர் இல்லாதபோது கட்டடத்தை அளவீடு செய்தது தவறு. கட்டடத்துக்கான பொருட்களை பல கடைகளில் விசாரித்து மதிப்பீடு செய்தோம் என்கிறார்கள். அதற்கான ரசீதும் இல்லை என்கிறார்கள். இது ஏற்புடையதல்ல. இந்த வாதங்களையெல்லாம் கீழமை நீதிமன்றம் கேட்டு, "தவறாக கணக்கீடு செய்துள்ளதை ஒதுக்கொள்கிறேன்" என்று சொல்லி அந்த சாடசியங்களை நிராகரிக்காமல கட்டட மதிப்பீடு செய்த தொகையிலிருந்து தோராயமாக 20/ தள்ளுபடி செய்து எடுத்துக்கொள்கிறேன் என்று குன்ஹா கூறியிருப்பது தவறு" என்று வாதங்களை வைத்தார்.

**ஹைதராபாத் திராட்சை தோட்டம்**

அடுத்து ஹைதராபாத் திராட்சை தோட்டம் பற்றிய தகவல்களைச் சொன்னார்... "ஹைதராபாத் அடுத்துள்ள ஜிடி மெட்லாவிலுள்ள திராட்சை தோட்டம், மற்றும் அங்குள்ள பங்களா புதுப்பிக்கப்பட்ட செலவையும், 1994 ஆம் ஆண்டு அதே இடத்தில் மற்றொரு கூடுதல் கட்டடம் கட்டப்பட்ட மதிப்பையும், ஆந்திரப் பிரதேசம் ரங்காரெட்டி மாவட்டத்திலுள்ள பஷிராபாத்தில் உள்ள புதுப்பிக்கப்பட்ட கட்டடத்தின் மதிப்பையும் வேல்யூ செய்த பொதுப் பணித் துறை பொறியாளர்கள் ரூ.5 கோடியே 50 லட்சம் செலவான தாக மிகைப்படுத்தி வேல்யூ செய்திருக்கிறார்கள்.

ஜிடி மெட்லா, பஷிராபாத்தில் உள்ள கட்டடத்தின்மதிப்பை மெட்ரோ சிட்டிக்கு ஏற்றவாறு மதிப்பீடு செய்திருப்பது கொஞ்சமும் பொருந்தாது. ராஜஸ்தான் மார்பில்ஸ் ஒரு ஸ்கொயர் மீட்டர் 18,400 என்று கணக்கிட்டிருக்கிறார்கள். எப்படி கணக்கிட்டீர்கள் என்றால், கடையில் கேட்டு விசாரித்து எழுதி இருக்கிறோம் என்கிறார்கள். அந்த நோட்டு எங்கே என்றால், கிழிந்துவிட்டது என்கிறார்கள். ஆனால் கிரானைட், மார்பில்ஸ், டைல்ஸ் ஆகியவை கணக்கிட்டு இருப்பதைவிட குறைவாகத்தான் வாங்கப்பட்டன. அதனால் ஹைதராபாத் ஜிடி மெட்லா விலுள்ள கூடுதல் கட்டடம் ரூ.82 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளதாகத் தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால் ரூ.41 லட்சம்தான் செலவாகியிருக்கும். ஆனால் என் கட்சிக்காரருக்கு சமூகத்தில் அவப்பெயரை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் மிகைப்படுத்திக் காட்டியிருக்கிறார்கள். இது சம்பந்தமாக 1997-98 இல் அரசு தரப்பு சாட்சி அளித்த பலர் 2002 இல் மறு சாட்சியம் சொன்னபோது மறுத்திருக்கிறார்கள்.

சென்னை போயஸ் கார்டன் பங்களா 1968 இல் கட்டப்பட்டது. பழுது ஏற்பட்டதன் காரணமாகப் புதுப்பிக்கப்பட்டது. பொதுப்பணித் துறை பொறியாளர்கள் கொடுத்த அறிக்கையில் ரூ.7 கோடியே 50 லட்சம் செலவு செய்ததாகக் காட்டியிருக்கிறார்கள்.

உதாரணத்துக்கு மும்பையில் கொள்முதல் செய்யப்பட்ட ஒரு சதுர அடி டைல்ஸ் அப்போதைய மதிப்பு 23 ரூபாய். ஆனால், மதிப்பீடு அறிக்கையில் ரூ.150, ரூ.175 வரை குறிப்பிட்டு இருக்கிறார்கள். இது போல பல பொருட்களின் விலையை மிகைப்படுத்தி காட்டியுள்ளனர். எனவே கட்டடங்கள் புதுப்பிக்கப் பட்டதற்கான செலவு ரூ.13 கோடி என்ற குற்றச்சாட்டை வழக்கில் இருந்து நீக்க வேண்டும்" என்றார் வழக்கறிஞர் நாகேஸ்வர ராவ்.

-ஜூனியர் விகடன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிந்தவுக்கு மேலும் நெருக்கடி

# சிறைச்சாலை கலகம் தொடர்பில் சாட்சியமளிக்கத் தயார்- உந்துல்

(கொழும்பு)

**வெலிக்கடைச் சிறைச்சாலை கலகம் தொடர்பில் சாட்சியமளிக்கத் தயார் என சட்டத்தரணியும் முன்னாள் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அழைப்பாளருமான உந்துல் பிரேமரட்ன தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் தெரிவித்துள்ளார்.**

கலகம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் சிறைச்சாலைக்குள் பிரவேசித்த பாதுகாப்புத் தரப்பினர் பெரும் எண்ணிக்கையிலான கைதிகளை சுட்டுக்கொன்றனர்.

இந்த விடயம் குறித்து தற்போதைய அரசாங்கம் நீதியான விசாரணைகளை நடத்த வேண்டும்.

சம்பவம் தொடர்பில் ஆணைக் குழு அமைத்து விசாரணை நடத்தப்பட்டதாக அப்போதைய அரசாங்கம் அறிவித்த போதிலும், இதுவரையில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

சிறையில் தடுத்து வைக்கப் பட்டிருந்த கைதிகள் சிலர் பெயர்களின் அடிப்படையில் அடையாளப்படுத்தப்பட்டு சுட்டுக் கொலை செய்யப்பட்டனர்.

சிறையில் இருந்த சில கைதிகள் பற்றி இதுவரையில் எவ்வித தகவல்களும் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

2012 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சுமார் 30 கைதிகள் வரையில் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஆயுதக் கப்பல் சட்ட ரீதியானது

## பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு

காலியில் அண்மையில் மீட்கப்பட்ட ஆயுதக் களஞ்சியக் கப்பல் சட்ட ரீதியானதே என பாதுகாப்புச் செயலாளர் யூடி பஸ்நாயக்க தெரிவித்துள்ளார்.

காலியில் நங்கூரமிட்டிருந்த மஹநுவர என்ற கப்பலில் பெருந்தொகையான துப்பாக்கிகளும் தோட்டாக்களும் மீட்கப்பட்டிருந்தன.

சட்டவிரோதமான முறையில் ஆயுதங்கள் களஞ்சியப்படுத்தப்பட்டு வைத்திருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

எனினும் தற்போது இந்த ஆயுதக் களஞ்சியம் அடங்கிய கப்பல் சட்ட ரீதியானது என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கப்பலிலிருந்து மீட்கப்பட்ட 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட துப்பாக்கிகள் மற்றும் இலட்சக் கணக்கான தோட்டாக்கள் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு சொந்தமானது என விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

காலி துறைமுகத்திலிருந்து ஏழு கடல் மைல் தொலைவில் இந்த கப்பல் நங்கூரமிடப்பட்டிருந்தது. சோமாலிய கடற் கொள்ளையர்களிடமிருந்து கப்பல்களை பாதுகாக்கும் பணிகளுக்காக இந்தக் கப்பல் ஈடுபடுத்தப் பட்டுள்ளமை விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்தக் கப்பலிலிருந்து மீட்கப்பட்ட துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்கள் பற்றிய விபரங்கள் பாதுகாப்பு அமைச்சின் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே இந்த ஆயுதக் களஞ்சியம் அடங்கிய கப்பல் சட்டவிரோதமான முறையில் நங்கூரமிடப்பட்டிருக்கவில்லை என பஸ்நாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# வெலை சுதாவிடம் கப்பம் பெற்ற இளம் நாடாளுமன்ற உறுப்பினர்

(கொழும்பு)

தன்னிடம் தொடர்ச்சியாக பணம் பெற்று வந்த முக்கிய அரசியல்வாதிகள் பலரின் பெயர்களை போதைப்பொருள் கடத்தல் மன்னன் வெலை சுதா வெளியிட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார்.

போதைப் பொருள் கடத்தல் தொடர்பில் பாகிஸ்தானில் கடந்த வாரம் கைது செய்யப்பட்ட வெலை சுதா, தற்போது கொழும்புக்கு கொண்டு வரப்பட்டு குற்றப்புலனாய்வுத் துறையினரால் விசாரணை செய்யப்பட்டு வருகிறார்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் அங்கம் வகித்த பலம் வாய்ந்த இளம் நாடாளுமன்ற உறுப்பினருக்கு மிகவும் நெருககமானவராக வெலை சுதா இருந்துள்ளமை தெரிய வந்துள்ளது.

அத்துடன் குறித்த நாடாளுமன்ற உறுப்பினருக்கு வெலே சுதா மாதாந்தம் 10 மில்லியன் ரூபாவை கொடுத்து வந்துள்ளமையும் இந்த விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. இந்தப் பணம் வெலை சுதாவின் மனைவி மூலம் குறித்த அரசியல்வாதிக்கும், பொலிஸ் அதிகாரிகளுக்கும் வங்கிக் கணக்கு மூலமும் செலுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, தன்னிடம் பணம் பெற்ற அரசியல் வாதிகள் பற்றிய விபரங்களை வெலை சுதா வெளியிட்டுள்ளதாக தெரிவித்த அஜித் ரோகண, அவர்களின் பெயர் விபரங்களை வெளியிட மறுத்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் சுரேந்திரன் மீனலக்ஷன்

(தரம் 9 மாணவன், யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி)

மண் மகிழ:-26.09.2000 கண் நெகிழ:-23.12.2014

எமது அன்புச் செல்வனின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள், ஒத்தாசைகள் புரிந்த, அஞ்சலி ஆறுதல் தெரிவித்த, தொலைபேசி மூலமாகவும் அஞ்சலி ஆறுதல் தெரிவித்த மற்றும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு இன்று (22.01.2015) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து யாழ்ப்பாணம் இல. 63, கல்லூரி வீதி, நீராவியடி இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

383/1, நாவலர் ஒழுங்கை,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(9887)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சி மாற்றத்தின் பின்னணியில் அரசியல் பழிவாங்கலும் பிரிவினைக்கான ஒப்பந்தமும் மட்டுமே காணப்படுகின்றன

**ஆட்சி மாற்றத்தின் பின்னணியில் அரசியல் பழிவாங்கல்களும் பிரிவினைக்கான ஒப்பந்தமும் மட்டுமே காணப்படுகின்றன. ஜனநாயக சாயம் பூசி வடக்கு கிழக்கிற்கான தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றதென குற்றம் சுமத்தும் பொதுபலசேனா பௌத்த அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசாரதேரர் சர்வதேசதன முன்னிலையில் சிங்கள பௌத்த இனத்தை நிர்வாணப்படுத்தும் செயலை தேசிய அரசாங்கம் செய்வதாகவும் தெரிவித்தார்.**



பொதுபலசேனா பௌத்த அமைப்பினால் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றமானது நாட்டிற்கும் சிங்கள பௌத்த அமைப்பிற்கும் நன்மையைத் தருமென நினைப்பது வெறும் கனவு மட்டுமே. சிங்கள மக்களை அழிக்கவே தற்போதைய தேசிய அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. அனைவரையும் ஒன்றிணைத்து கூட்டு ஆட்சியினை உருவாக்கியிருப்பது சாதகமானதென வெளியில் விளம்பரப்படுத்துகின்றனர். ஆனால் மறைமுகமாக சர்வதேச சதித்திட்டம் அரங்கேறுகின்றது.

**அரசியல் பழிவாங்கல்கள**

மாற்றத்தினை ஏற்படுத்துவது தொடர்பில் எமக்கு தனிப்பட்ட கருத்து எதுவுமில்லை. ஆனால் தற்போது ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தின் பின்னணியில் தனிப்பட்ட அரசியல் பழிவாங்கல் மட்டுமே உள்ளது. முன்னாள் ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் மற்றும் அவர்களது குடும்பத்தின் மீது தவறான கருத்துக்களை பரப்பி ஒரு சிலரின் தனிப்பட்ட கோபங்களுக்காக பழிவாங்கப் பார்க்கின்றனர்.

யார் குற்றம் செய்தாலும் அதற்கான தண்டனை வழங்கப்பட வேண்டும். ஆனால் செய்யாத குற்றங்கள் எதையும் ஒருவர் மீது சுமத்தி அவரை தண்டிக்க நினைப்பது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். அதையே தற்போது புதிய அரசாங்கம் செய்து வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். ஆட்சி மாற்றம் அதன் பின்னர் நூறு நாட்கள் வேலைத்திட்டம் என மக்களை ஏமாற்றும் வேடிக்கைகள் காணப்பட்டாலும் ஆட்சி மாற்றத்தின் பின்னணியில் புலமபெயர் அமைப்புகளுக்கு ஏற்ற வகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு தேவையான பிரிவினை வளர்க்கப்படுகின்றது. தமிழ் அமைப்புகளின் தனி நாட்டுக் கோரிக்கைகளுக்கு அமைய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. ஊடகங்களுக்கும் மக்களுக்கும் தெரியாது வடக்கு கிழக்கு மாகாணங்கள் கோரும் தனி நாட்டுக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. முப்பது வருடங்கள் போராடி விடுதலைப் புலிகளினால் வென்றெடுக்க முடியாத தனி நாட்டினை தற்போது அரசியல் உடன்படிக்கைகளின் மூலம் வென்றெடுக்க முயற்சிக்கின்றனர். லிபியாவில் நடந்த எவையும் இலங்கையில் இடம்பெறவில்லை. மக்களுக்கு தேவையானவற்றையே மகிந்த ராஜபக்ஷ செய்து கொடுத்தார். ஆனால் தற்போது பிரிவினைவாதிகள் அனைவரும் ஒன்றிணைந்து முன்னாள் ஜனாதிபதியையும் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவையும் கடாபி போன்றோருக்கு சமமாக ஒப்பிடுகின்றனர். சிங்கள, பௌத்தம் காப்பாற்றப்பட்டது இவர்களினால் மட்டுமே. ஆனால் காப்பாற்றி பாதுகாத்து வந்த சிங்கள பௌத்த கொள்கையினை புதிய அரசாங்கம் முற்றாக அழித்து வருகின்றது. சர்வதேசத்தின் மத்தியில் சிங்கள, பௌத்த மதத்தினையும் இனத்தவரையும் நிர்வாணப்படுத்தி அசிங்கப்படுத்தும் வகையில் இவர்கள் செயற்பட்டு வருகின்றனர். ஆனால் நாம் தொடர்ந்தும் பௌத்த, சிங்கள இனத்தினை காப்பாற்ற போராடுவோம். பௌத்த, இந்து கலாசாரம் இன்று முஸ்லிம், கிறிஸ்தவ தீவிரவாதிகளால் அழிக்கப்பட்டு வருகின்றது. இதனை நாம் தடுக்க சகல விதத்திலும் போராடுவோம். எம்மை யாராலும் கட்டுப்படுத்த முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## மின்சார சபைக்கு தலைவர்கள் நியமிப்பு

இலங்கை மின்சார சபையின் தலைவராக அநுர விஜேபாலவும் உப தலைவராக நிஹால் விக்ரமசிங்கவும் நியமிக்கப்பட்டுள்ளதாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு அறிவித்துள்ளது. இவ்விருவரும் குறித்த துறையில் அதிக அனுபவம் பெற்றவர்கள் என மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் இருவரும் இதற்கு முன்னரும் இலங்கை மின்சார சபையில் பல பதவிகளை வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வு

ஊர்காவற்துறை பிரதேச சபையில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30மணியளவில் தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வு சபையின் தவிசாளர் ம.ஜெயகாந் தன் தலைமையில் நடைபெறவுள் ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊர்காவற்துறை கோட்டக்கல்வி அதிகாரி தி.சோம சேகரமும் சிறப்பு விருந்தினராக ஊர்காவற்துறை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செல்வி. வி.தர்சினியும் கௌரவ விரு ந்தினராக ஊர்காவற்துறை பிரதேச செயலக கலாச்சார உத்தியோகத்தர் இம்மானுவேல் ஜோன்சனும் கலந்துகொள்ள வுள்ளனர். (இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு



**திருமதி மகேஸ்வரன் சாந்தி**

யாழ். புங்குடுதீவு தெங்கந்திடல் 11 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரன் சாந்தி கடந்த 19 ஆம் திகதி திங்கட்கிழமைஅன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10.30 மணிக்கு Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Avenue, Markham, ON L3R 5G1, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**திருமதி சொர்ணலிங்கம் திலகவதி**

யாழ். புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட சொர்ணலிங்கம் திலகவதி கடந்த 19 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு 7 Boulevard de Menil m ontant, 75 011 Paris, France என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**பொன்னுத்துரை ரூபமோகன்**

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Limoges ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை ரூபமோகன் கடந்த 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியை கள் நாளை காலை 8 மணிக்கு Graniterie Mar brerie Jouandou, 209 Avenue du General Leclerc, 87100 Limoges, France என்னும் முகவரியில் நடைபெறும்.



**திருமதி ராஜபூபதி இம்மானுவேல் அன்னம்மா**

யாழ். சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ராஜபூபதி இம்மானுவேல் அன்னம்மா கடந்த 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் திருப்பலி இன்று பிற்பகல் 2 மணிக்கு A.F. Raymond Funeral Parlour 115, D S Senanayake Mawatha, Colombo 8 என்னும் முகவரியில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



**திருமதி ராஜரட்ணம் கனகம்மா**

காரைநகர் களவிழிம்பிட்டியைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி, திருநகரை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட ராஜரட்ணம் கனகம்மா (மருத்துவதாதி) நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 8 மணிக்கு அவ ரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநகர் இந்து பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.



**இராசதுரை சின்னத்துரை**

யாழ். அராலியைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை சின்னத்துரை கடந்த 19 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று நடைபெற்று பின்னர் பூதவுடல் இருபாலை இந்து மயானத்தில்தகனம் செய்யப்படும்.



**ஐயாத்துரை சுகதரன்**


யாழ். புங்குடுதீவு முதலாம்வட்டாரத்தைப்பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சுகதரன் கடந்த 8 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11 மணிக்கு Krematorium Nordheim(BUCHEGGPLATZ) Kaferholz str, 8057 Zurich Switzerland என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**நமசிவாயம்பிள்ளை வேல்முருகு**

யாழ். வியாபாரி மூலையைப் பிறப்பிடமாகவும் பேராதனையை வசிப்பிடமாகவும்கொண்ட நமசிவாயம்பிள்ளை வேல்முருகு (முன்னாள் சிரேஷ்ட விரிவுரை யாளர் - பேராதனைப் பல்கலைக்கழகம்) கடந்த 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 8 மணிக்கு நடைபெற்று பின்னர் பூதவுடல் கண்டி மகியாவை இந்து மயானத்தில் தகனம் செய்ய ப்படும்.

# இனவாதம் பேச வேண்டாம் விமலிடம் பிரதமர் கோரிக்கை





(கொழும்பு)

இனவாதத்தை கைவிட்டு அனைவரும் இலங்கையர்கள் என்ற அடிப்படையில் ஐக்கியமான நாட்டை கட்டியெழுப்பும் நோக்கில் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

புதிய அரசாங்கத்தின் பாராளுமன்ற அமர்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வேளை விசேட உரையொன்றை ஆற்றிய போதே அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

எதிர்வரும் 26ஆம் திகதி புதிய அரசாங்கத்தின் இடைக்கால வரவு செலவுத் திட்டம் சமர்பிக்கப்படும் எனவும் அதில் மக்களுக்கு நிவாரணம் வழங்க எதிர்பார்த்து உள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

தேசியப் பிரச்சினை விடயத்தில் விமல் வீரவன்ச போன்று இனவாதம் பேசாமல் அவற்றை மறந்து அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனக் கூறிய பிரதமர், மகிந்த ராஜபக்ஷவை இல்லாது செய்தது போன்று எஞ்சியிருப்பதையும் இல்லாது செய்ய வேண்டாம் என விமல் வீரவன்சவிடம் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனிக்கன்குள கிராம மக்களின் தேவைகள் தீர்க்கப்படுமா?

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பனிக்கன்குளம் கிராம சேவையாளர் பிரிவில் வசிக்கும் மக்களின் அடிப்படை பிரச்சினைகள் இதுவரை காலமும் தீர்க்கப்படாமையால் அம் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்தித்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அம் மக்கள் தெரிவிக்கையில்,

இக்கிராமத்திற்கான வீதிகள் கடந்த 30 வருடகாலமாக திருத்தப்படாமையால் சேதமடைந்து காணப்படுகின்றது. குறிப்பாக பாடசாலை செல்லும் சிறார்கள் இவ் வீதி வழியாக பயணிப்பதில் இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர்.

இப்பாதையில் மணல்யாப்பிற்கான உழவு இயந்திரங்கள் மற்றும் கனரக வாகனங்கள் தினமும் பயணித்து வருவதால் சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது.

இந்த வீதிகளைத் புனரமைத்துத் தருமாறு கிராமமட்ட அமைப்புக்களாலும் பொதுமக்களாலும் பல தடவைகள் உரியவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்ற போதிலும் தீர்வு எதுவும் கிடைக்கவில்லை என அம்மக்கள் அதிருப்தி தெரிவித்தனர்.

புகையிரத பாதைக்காக கடவை அமைக்கப்படாமையால் ஆபத்து நேரிடலாம் எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

குறிப்பாக இந்திய அரசினால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்திற்கான பொருட்களை மோட்டார் சைக்கிள் கூட செல்ல முடியாத வீதியை பயன்படுத்தி மிகவும் சிரமப்பட்டு எடுத்துச் செல்கின்றனர்.

இதை உரிய தரப்பினருக்கு தெரியப்படுத்தியும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த புகையிரதக் கடவை அமைக்கப்படாமையினால் இவர்களுக்கான மின்னிணைப்புகளும் வழங்கப்படவில்லையென மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது பனிக்கன்குள கிராம சேவையாளர் பிரிவு மக்களுக்கான மின்னிணைப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றது. இன்னும் மின்கம்பங்கள் நடப்படாது சுமார் ஒரு கிலோமீற்றருக்கும் அதிகமான பகுதிகள் உள்ளன. அப்பகுதிகளுக்கும் மின்னிணைப்புக்களை பெற்றுத்தருமாறும் மக்கள் கோருகின்றனர்.



பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியின் கீழ் பனிக்கன்குள புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது. இருப்பினும் உரிய முறையில் வேலைகளை பூரணமாக்கி மக்கள் பாவனைக்கு ஒப்படைக்கவில்லை எனவும் இவ்வாறான பல பிரச்சினைகளுடன் உள்ள இக் கிராம மக்களின் பிரச்சினைகளை தீர்க்க உரிய அதிகாரிகள் விரைந்து செயற்பட வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-281)

## முறிகண்டியில் விபத்து; குடும்பஸ்தர் காயம்

(முக்கொம்பன்)

ஏ-9 வீதி திருமுறிகண்டியில் மோட்டார் சைக்கிளும் பிக்கப் வாகனமும் மோதிய விபத்தில் குடும்பஸ்தர் தலையில் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இவ் விபத்து சம்பவம் நேற்று பிற்பகல் 3 மணியளவில் திருமுறிகண்டியில் நடைபெற்றுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த திருமுறிகண்டியைச் சேர்ந்த திருநாவுக்கரசு திருச்செல்வம் என்பவரே தலையில் படுகாயமடைந்தவராவார். இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கிளிநொச்சியிலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்த பிக்கப் வாகனம் முறிகண்டி உள்ளக வீதியிலிருந்து ஏ-9 வீதிக்கு ஏற முற்பட்ட மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளியதிலேயே இவ் விபத்து நேர்ந்துள்ளது.

இதேவேளை அவ் வீதியில் சுவருக்கு மை பூசும் பணியில் ஈடுபட்ட கிளிநொச்சி வீதி அபிவிருத்தி அதிகாரசபை தொழிலாளி ஒருவர் அப்பகுதி பொதுமக்களால் தாக்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வாகன சாரதியென தவறாக புரிந்து கொண்ட அப்பகுதி மக்கள் அவரைத் தாக்கியமையாலேயே அவர் காயம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2-283)




நல்லூர் றோட்டறிச் கழகத்தினால் முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியாவைச் சேர்ந்த நால்வருக்கு செவிப்புலன் கருவிகள் வழங்கப்பட்டன. காது, மூக்கு, தொண்டை வைத்திய நிபுணர் இந்திரநாத்தினால் சிபாரிசு செய்யப்பட்டவர்களுக்கே இவ்வுபகரணங்கள் வழங்கப்பட்டன. நல்லூர் றோட்டறிக்கழகத்தின் தலைவர் ரவீனதாஸ் அவர்களினால் இவ்வுபகரணங்கள் வழங்கி வைக்கப்படுவதைப் படத்தில் காணலாம். அருகில் பயனாளிகளுடன் றோட்டறிக்கழக அங்கத்தவர்களும் காணப்படுகின்றனர்.

## திருக்கேதீஸ்வரம் போக்குவரத்து வீதியை புனரமைப்பு செய்யுங்கள்

### வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் பணிப்பு

(மன்னார்)

திருக்கேதீஸ்வரம் செல்லும் அடியார்களின் போக்குவரத்து வசதியினைக் கருத்தில் கொண்டு திருக்கேதீஸ்வரம் செல்லும் வீதிகளைப் புனர்நிர்மாணம் செய்யுமாறு அதிகாரிகளுக்கு வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிப அமைச்சர் பா.டெனீஸ்வரன் பணிப்புரை விடுத்துள்ளார்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி நடைபெறவிருக்கும் மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு ஏ-32 பிரதான வீதியிலிருந்து திருக்கேதீஸ்வரம் செல்லும் வீதிகளை நேற்று முன்தினம் அமைச்சர் பா.டெனீஸ்வரன் நேரில் சென்று பார்வையிட்டார்.

அதன் பின் மன்னார் மாவட்ட வீதி அபிவிருத்தி திணைக்கள பிரதம பொறியியலாளர் எஸ்.ரகுநாத்னிடம் அவர் கூறியதாவது,

வருகின்ற பக்தர்களின் நன்மை கருதி வெகு விரைவாக வீதி புனர்நிர்மாண வேலைகளை ஆரம்பிக்குமாறு பணித்ததுடன் சென்ற ஆண்டு மனித எச்சங்கள் தோண்டியெடுக்கப்பட்ட வீதியையும் புனரமைக்கு மாறும் தெரிவித்தார்.

இவ்வேலைத்திட்டத்தின் மூலம் சிவராத்திரி நிகழ்வுக்கு வருகின்ற பக்தர்கள் எதுவித சிரமம் இன்றி எமது போக்குவரத்துகளை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ-2)




## பத்திரிகை விநியோகஸ்தர் படுகாயம்

(கிளிநொச்சி)

ஏ- 35 வீதியில் பயணித்துக் கொண்டிருந்த குடும்பஸ்தரை வாகனம் மோதித்தள்ளியதில் தலையில் படுகாயம் அடைந்த அவர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அதன்பின்னர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இவ்விபத்து சம்பவம் நேற்று காலை 6 மணியளவில் முள்ளியவளையில் இடம்பெற்றுள்ளது.

இதில் தினமுரசு பத்திரிகையில் விநியோகஸ்தராகக் கடமையாற்றும் கிளிநொச்சி உதயநகர் கிழக்கைச் சேர்ந்த அற்புதானந்தம் அருள்பிரகாசம்(வயது-35) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, தனது வீட்டிலிருந்து அதிகாலை 3.45 மணியளவில் முல்லைத்தீவு நோக்கி ஏ-35 வீதியூடாக பயணித்த பிரஸ்தாப நபர் முள்ளியவளை வீதியில் பயணித்துக் கொண்டிருந்த போது வாகனம் மோதித் தள்ளிவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

இதன்போது அவர் தலையில் படுகாயமுற்று மயங்கிய நிலையில் வீதியில் இருந்தபோது அவ்வழியால் பயணித்த பொதுமக்கள் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு தகவல் வழங்கினர். இதனையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த நோயாளர் காவுவண்டி அவரை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தது. (அ-2-27)

## மஹாகும்பாபிஷேகம்

(புலோப்பளை)

பச்சிலைப்பள்ளி, புலோப்பளை- அறத்தி அருள்மிகு திருவண்ணாமலை ஞானவேல் முருகன் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் கடந்த 18 ஆம் திகதி ஆரம்பமாகி நாளை வெள்ளிக்கிழமை வரை நடைபெறும்.

இதில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் நடைபெறும்.

நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மேல் ஸ்தூபி அபிஷேகமும் தொடர்ந்து மஹாகும்பாபிஷேகமும் நடைபெற்று முருகப்பெருமான் வீதியுலா வலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார். (அ-2)

## வயோதிபர் மீது இனந்தெரியாதோர் தக்குதல்

(கனகபுரம்)

வீட்டிலிருந்த வயோதிபர் வெளியே சென்ற வேளை இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்காகி தலையில் படுகாயம் அடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினமிரவு வட்டக்கச்சியில் இடம்பெற்றுள்ளது.

இதில் சிவபாதசுந்தரம் ஜெயராஜசிங்கம் (வயது-72) என்ற வயோதிபரே தலையில் படுகாயமடைந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

வீட்டிற்கு அருகில் கூக்குரல் ஒலி கேட்க பிரஸ்தாப நபர் வெளியே சென்றுள்ளார்.

இதன்போது அங்கே நின்ற குழுவினர் வெளிச்சம் பாய்ச்சி பார்த்துவிட்டு இம் முதியவரின் தலையில் உருளைக்கட்டையால் அடித்து காயப்படுத்தி விட்டு தப்பிச் சென்றனர்.

இதன்பின்னர் வீட்டாரின் உதவியுடன் அவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக நேற்றைய தினம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (அ-2-259)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமன் ஜனாதிபதி மாளிகை கிளர்ச்சியாளர்களின் வசம்

## புரட்சி ஏற்படும் அபாயம்



ஏமனில் கடந்த 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மக்கள் புரட்சி ஏற்பட்டது. அதை தொடர்ந்து சர்வாதிகாரியாக இருந்த அலி அப்துல்லா சலே பதவி விலகினார். அவரை தொடர்ந்து அப்தராபுக் மன்சூர் ஹாடி பதவி வகித்து வருகிறார்.

இந்த நிலையில், ஷியா பிரிவை சேர்ந்த 'ஹவுதீஸ்' என்ற கிளர்ச்சியாளர்கள் அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்தி போராடி வருகின்றனர். ஜனாதிபதி ஹாடியும் அவரது அமைச்சர்களும் ஊழலில் திளைத்து நாட்டை சுரண்டி வருவதாக குற்றம் சாட்டினர்.

எனவே, அவர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என வலியுறுத்தி வந்தனர். அதை தொடர்ந்து கிளர்ச்சியாளர்கள் கடந்த செப்டெம்பர் மாதம் முதல் தலைநகர் சனா உள்ளிட்ட முக்கிய 7 நகரங்களை பிடித்து தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இந்த நிலையில் சனாவில் நேற்று முன்தினம் ஜனாதிபதி ஹாடி மாளிகையில் பார்வையாளர்களை சந்தித்து கொண்டிருந்தார்.

அப்போது கிளர்ச்சியாளர்கள் திடீரென ஜனாதிபதி மாளிகை மீது வெடிகுண்டுகளை வீசி தாக்கினார்கள். இதனால் மாளிகைக்கு வெளியே கிளர்ச்சியாளர்களுக்கும், இராணுவத்துக்கும் இடையே கடும் சண்டை நடந்தது.

இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கொண்டு துப்பாக்கி ஏந்திய சிலர் ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்தனர். அங்கு துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். இதற்கிடையே ஜனாதிபதி மாளிகையின் 3 வாயில்களையும் கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றி தங்கள் வசப்படுத்தினர்.

தற்போது ஜனாதபதி மாளிகை கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ளது. இந்த தகவலை ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தலைவர் அப்துல் மாலிக் அல்ஹவுதி தொலைக்காட்சியல் தெரிவிததார். அப்போது ஏமனில் ஜனாதிபதி ஹாடி உள்ளிட்ட தலைவர்கள் ஊழலில் திளைத்துள்ளனர். நாடும் மிகவும் நலிவடைந்த நிலையில் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




# உலக அளவில் அதிகரிக்கும் தடுப்பு மருந்துகளின் விலை

சிறார்களுக்கான தடுப்பு மருந்துகளின் விலையை குறைக்குமாறும், அவை தயாரித்து விற்கப்படும் முறையில் மறுசீரமைப்புகளை செய்யுமாறு சர்வதேச மருத்துவ குழுவான எம்.எஸ்.எஃப் என்னும் எல்லைகளற்ற மருத்துவர்களின் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

பல பொதுவான சிறார்களுக்கான தடுப்பு மருந்துகளின் விலை 2001இல் இருந்ததை விட 68 மடங்கு அதிகமாகும் என்று அந்த அமைப்பின் அறிக்கை ஒன்று கூறுகின்றது.

அவற்றின் விலைகளில் வெளிப்படைத்தன்மை கிடையாது என்று விமர்சித்துள்ள அந்த அமைப்பு, உதாரணமாக பல வளரும் நாடுகள நிமோனியா தடுப்பு மருந்துக்கு பிரான்ஸை விட அதிகமான விலையை கொடுக்க நேர்வதாக குறிப்பிட்டுள்ளது. (இ-5)

# மாம்பழத்திற்கான தடை நீக்கம்

இந்தியாவிலிருந்து மாம்பழ இறக்குமதிக்கு ஐரோப்பிய ஒன்றியம் விதித்திருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து 200 கப்பல்களில் வந்த மாம்பழங்களில் பழத்தை மொய்க்கும் ஈக்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, இந்தத் தடை கடந்த ஆண்டு மே மாதம் விதிக்கப்பட்டது.

இதையடுத்து கடந்த செப்டெம்பர் மாதம் தமது ஆணையத்தின் உணவு மற்றும் கால்நடைத்துறை அலுவலகம் இந்தியாவில் நடத்திய சில ஆய்வுகளில் குறிப்பிடத்தகுந்த அளவுக்கு முன்னேற்றம் காணப்பட்டது என்று ஐரோப்பிய ஒன்றியம் கூறுகிறது.

இந்திய மாம்பழங்களுக்கான மிகப்பெரியச் சந்தையாக ஐரோப்பா இல்லாவிட்டாலும், இந்தத் தடையானது, உள்ளூர் விவசாயிகளின் வருமானத்தை பாதித்தது.

மேலும் இதன் காரணமாக உள்ளூர் சந்தையிலும் மாம்பழங் களின் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டது.

இந்தத் தடை இந்த ஆண்டு டிசெம்பர் மாதம் இறுதி வரை விதிக்கப்பட்டிருந்தாலும் அது விரைவாக விலக்கப்பட வேண்டும் என்று இந்தியா கோரிவந்தது.

எனினும் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் கத்தரிக்காய், பாகற்காய், புடோலங்காய், சேப்பங் கிழக்குச் செடியின் இலை ஆகியவற்றின் மீதான தடை தொடர்ந்து இருக்கும்.

இதுதவிர இரண்டு வகையான பழரசங்கள் மீதான தடைகளை இன்னும் ஐரோப்பிய ஒன்றியம் நீக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# 48 மணி நேரத்திற்குள் 17 பேருக்கு மரணதண்டனை



ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளால் 48 மணி நேர காலப்பகுதியில் 17 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாக தீவிரவாதிகளால் இஸ்லாமிய தேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிராந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

**முஜாஹித்தின் செய்தி** என்ற தலைப்பில் இந்த மரணதண்டனை நிறைவேற்றங்களை வெளிப்படுத்தும் வீடியோ காட்சி வெளியாகியுள்ளது. தன்னினச் சேர்க்கையில் ஈடுப்பட்டதாக குற்றச்சாட்டுக்கு உள்ளான இரு ஆண்களுக்கு உயரமான கட்டடமொன்றின் கூரையிலிருந்து கீழே தள்ளி மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

அவர்களுக்கு தன்னினச் சேர்க்கை நடவடிக்கைகளில் ஈடுப்பட்டதற்காக மத சட்டத்தின் கீழ் மரண தண்டனை நிறைவேற்றப்படுவதாக முகமூடியணிந்த தீவிரவாதி அறிவிப்பு செய்ததை தொடர்ந்தே தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில் கொள்ளையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான இருவருக்கு உலோக சிலுவையில் கட்டி வைக்கப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. அவர்கள் இருவரும் டிரக் வண்டிகளில் தண்டனை நிறைவேற்றப்படும் இடத்துக்கு அழைத்து வரப்படுகின்றனர்.

சாதாரண உடையில் காணப்பட்ட அவர்களுக்கு பின்னால் நின்ற இரு ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் இருவரையும் சுட்டுக் கொல்கின்றனர்.

இந்த மரண தண்டனை நிறைவேற்றத்தை பார்க்க கூடியிருந்த அனைவரும் ஆண்களாவர். மேற்படி மரண தண்டனைகள் ஈராக்கிய மொசூல் பிராந்தியத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அதேசமயம் ஈராக்கிய நினெவெஹ் பிராந்தியத்தில் பெண்ணொருவருக்கு தீவிரவாதிகள் கல்லால் எறிந்து மரண தண்டனை நிறைவேற்றியுள்ளனர். அந்த பெண் பின்னால் கைகள் கட்டப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்கு அழைத்து வரப்பட்ட பின் தண்டனை நிறைவேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# விபத்துக்குள்ளான ஏர் ஏசியா விமானம் திடீரென உயரத்தை அதிகரித்தது ஏன்?



கடந்த மாதம் நொறுங்கி விழுந்த ஏர் ஏசியா விமானம் அந்தப் பயணத்தின் கடைசி நிமிடங்களில் அசாதாரணமான வேகத்தில், தனது பறக்கும் உயரத்தை அதிகரித்தது என்பதை இந்தோனேசிய அரசு உறுதிப்படுத்தியுள்ளது.

நொறுங்கி விழுந்த விமானத்தின் கறுப்புப் பெட்டிகள் மீட்கப்பட்டு ஆய்வுகள் நடைபெறுகின்றன.

அந்த விமானத்தின் ராடார் தரவுக் குறிப்புகளை பார்க்கும் போது, விமானம் திடீரென மேலே உயர்ந்தது, ஸ்திரமாகி பின்னர் காணாமற்போனது தெரியவந்துள்ளது என்று போக்குவரத்து அமைச்சர் இக்னேசியஸ் ஜோஜன் தெரிவித்துள்ளார்.

அந்த விமான விபத்து ஏன் ஏற்பட்டது என்பது குறித்து, விமானப் பயணக் குறிப்புகளை பதிவு செய்யும் இரண்டு ஒலிப்பதிவு கருவிகளை புலனாய்வாளர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.

அந்த ஒலிப்பதிவு கருவிகள் அணமையில் கடல் படுகையிலிருந்து மீட்கப்பட்டன.

அந்த விமான விபத்துக்கு தீவிரவாதம் ஒரு காரணமாக இருக்கலாம் என்பதற்கான எந்த ஆதாரமுமஇதுவரை இல்லை என ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

இந்தோனேசியாவில் விமானப் பயணங்களின் பாதுகாப்பை எப்படி மேம்படுத்துவது என்பது குறித்த நாடாளுமன்ற விசாரணையில் கலந்து கொண்ட பிறகே அமைச்சரின் இந்தக் கருத்துக்கள் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தகது. (இ-5)

# தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட 24 பணயக்கைதிகளை மீட்டனர்

நைஜீரியாவில் நாசவேலைகளில் ஈடுபட்டு வரும் போகோ ஹராம் தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் அந்நாட்டு இராணுவத்துடன் அயல் நாடான நைஜர் மற்றும் கமரூன் நாடுகளும் ஈடுபட்டுள்ளன.

இதனால் தீவிரவாதிகள் இந்த நாடுகள் மீதும் தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு கமரூனின் வடக்கு பகுதியில் உள்ள மபாஸ் கிராமத்திற்குள் புகுந்த தீவிரவாதிகள் அங்கு இருந்த சிறுவர்கள் உள்ளிட்ட 80 பேரை பணயக்கைதிகளாக பிடித்துச்சென்றனர். அவர்களை மீட்கும் நடவடிக்கையில் கமரூன் நாட்டு இராணுவம் ஈடுபட்டது.

தற்போது பிடித்துச்செல்லப்பட்ட 80 பேரில் 24 பேரை பத்திரமாக மீட்டு விட்டதாக கமரூன் நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

இது குறித்து இராணுவ செய்தி தொடர்பாளர் கர்னல் டிடையர் பேட்ஜெக் கூறுகையில், தீவிரவாதிகளால் கடந்த ஞாயிற்றுக்கிழமை கடத்தப்பட்டவர்களில் 24 பேரை கமரூன் இராணுவம் மீட்டுள்ளது என்று தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துட்டனையும் தங்கத்தையும் பேரிகையையும் முரட்டுக் குதிரையும் நற்குண விருத்தி கருதி அடிக்க வேண்டும் ~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சர்வதேச விசாரணை எனில் ஒருநாடு உள்நாட்டு விசாரணை எனில் இருநாடு

இரு மொழி எனில் ஒரு நாடு. ஒரு மொழி எனில் இரு நாடு என்று கூறியவர் டாக்டர் கொல்வின் ஆர். டி.சில்வா. தனிச்சிங்கள மொழிச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது, மேற்போந்த கருத்தைக் கூறியவர் கொல்வின்.

சிங்கள மொழிபோல தமிழுக்கும் சம அந்தஸ்து கொடுக்கப்பட வேண்டும் என்பது அவரின் கருத்து. தனித்துச் சிங்களமே அரச கரும மொழி என்ற சட்டத்தை நீங்கள் கொண்டு வந்தால், தமிழர்கள் பிரிந்து செல்ல வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பர். எனவே நீங்கள் கொண்டு வந்த ஒரு மொழிச் சட்டம் இந்த நாட்டை இரண்டாக்கும். மாறாக சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளும் அரச கருமமொழி என்று சட்டம் வந்தால் இலங்கை ஒரு நாடாக இருக்கும் என்பது கொல்வின் ஆர். டி.சில்வாவின் கருத்தாக இருந்தது.

கொல்வினின் கருத்தை நினைக்கையில், தமிழ் அரசியல் தலைவர்கள் சிந்திக்காத விடயத்தை ஒரு சிங்களத் தலைவர் சிந்தித்தார் எனும்போது இதயம் நெகிழ்ந்து கொள்ளும்.

இப்போது இலங்கையின் ஒற்றை ஆட்சி என்பது பற்றியும் ஒற்றை ஆட்சிக்குள் இனப் பிரச்சினைக்கான தீர்வு காணப்பட வேண்டும் என்ற கருத்தியலிலும் ஒருமைப்பாடு ஏற்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

இதற்கு சாத்தியமான சூழலாக மைத்திரிபால சிறிசேன தலைமையில் புதிய ஆட்சி அமைந்துள்ளது. புதிய ஆட்சியை காப்பாற்றுவதில் தமிழ் அரசியல் தலைமைகளுக்கும் பெரும்பங்கு உண்டு. இருந்தும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, இந்திய தேசத்தின் ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியில், போர்க்குற்றம் தொடர்பில் உள்நாட்டு விசாரணை நடைபெறும் எனக் கூறியுள்ளார். அமைச்சர் மங்கள சமரவீரவின் கருத்து தமிழ் மக்களின் நம்பிக்கையை தகர்த்தி விடும் போல் உள்ளது.

அதாவது போர்க்குற்ற விசாரணை உள்நாட்டில் மேற்கொள்ளப்படும் போது அதன் நம்பகத்தன்மையை தமிழ் மக்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். எனவே போர்க்குற்ற விசாரணை என்பது சர்வதேசத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும். அப்போதுதான் உண்மைகள் கண்டறியப்படும். போர்க்குற்றம் எதுவும் நடக்கவில்லை என்றால் அதனை சர்வதேச விசாரணை மூலம் உறுதிப்படுத்துவதே நல்லது.

எனவே உள்ளக விசாரணை என்பதை விடுத்து சர்வதேச விசாரணைகளுக்கு புதிய ஆட்சியாளர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

சர்வதேசத்தால், போர்க்குற்ற விசாரணை நடத்தப்படுவதன் மூலம் படை அதிகாரிகளுக்கும் ஆட்சி நடத்தியவர்களுக்கும் பாதிப்பு ஏற்படும் என்று கருதி; சர்வதேச விசாரணைகளுக்கு புதிய அரசு மறுப்புத் தெரிவித்தால், சிறுபான்மைத் தமிழ் இனத்திற்கு நீதி கிடைக்காமல் போகும்.

எனவே தமிழ் மக்களுக்கு நடந்த மிக மோசமான கொடூரத்தனங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். அப்பாவித் தமிழ் மக்களை-அடைக்கலம் புகுந்தவர்களை ஈவிரக்கம் இன்றி கொன்று ஒழித்தவர்கள் தண்டனை பெற்றாக வேண்டும். அப்போதுதான் இந்த நாட்டில் சாந்தியும் சமாதானமும் ஏற்படும்.

எனவே புதிய அரசு சர்வதேச விசாரணைக்கு எந்தத் தடையும் செய்யக் கூடாது. தேவையாயின் கடந்த கால ஆட்சியாளர்கள் செய்த ஊழல் தொடர்பில் உள்ளக விசாரணை நடத்தப்படலாம்.

வேண்டுமாயின், போர்க்குற்றம் தொடர்பில் உள்ளக விசாரணை நடத்தப்படும் என்பதை எதிர்வரும் பொதுத் தேர்தல் முடியும் வரை புதிய அரசு உச்சரிப்பதற்கு எந்தத் தடையும் இல்லை. ஆனால் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் சர்வதேச விசாரணைக்கு பரிபூரண ஒத்துழைப்பை மைத்திரியின் அரசு வழங்க வேண்டும். இதைச் செய்யும் போது இலங்கை ஒரு நாடாக இருக்கும். மாறாக உள்நாட்டு விசாரணை என்றால், இலங்கை இரண்டு நாடாக வேண்டும் எனத் தமிழ்மக்கள் விரும்புவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

# டெங்கு நோய் விசேட செயற்திட்டம் 14 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

### யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் டெங்கு நோய் விசேட கட்டுப்பாட்டு செயற்றிட்டத்தின் முதலாம் நாளான நேற்று முன்தினம் 14 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் டெங்கு நோய் கட்டுப்பாட்டு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் டெங்கு நோய் கட்டுப்பாட்டு பிரிவினர் தெரிவிக்கையில்,

முதலமைச்சரின் தீர்மானத்திற்கமைய யாழ்.மாநகர சபைப் பகுதியில் விசேட டெங்குக் கட்டுப்பாட்டு செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 20.01.2015 அன்று குருநகர் 1, குருநகர் 2 பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் விசேடடெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அன்றைய தினம் மொத்தமாக 1090 குடியிருப்புகள் பார்வையிடப்பட்டன.

இவற்றில் நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவான சூழல் கொண்ட 215 இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் 35 இடங்களில் நுளம்புக் குடம்பிகளும் இனங்காணப்பட்டன. அன்றைய தினம் 53 குடியிருப்பாளர்களுக்கு எதிராக நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவான சூழலினைக் கொண்டிருந்தமையால் எச்சரிக்கை அறிவித்தல்கள் வழங்கப்பட்டதுடன், 14 குடியிருப்பாளர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (செ-4)

## தெவரப்பெரும விளக்கமறியலில்

(கொழும்பு)

மத்துகம, அகலவத்தை நகரில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதேச சபை உறுப்பினரை முழங்காலில் வைத்த சம்பவம் தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தெவரப்பெரும எதிர்வரும் 2-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தெவரப்பெரும நேற்று கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவில் வாக்கு மூலம் ஒன்றை வழங்கியிருந்ததுடன் பின்னர் கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (செ-11)

## தலைமைத்துவ பயிற்சி இரத்து செய்யப்படும்-ரஜீவ

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த தலைமைத்துவ பயிற்சிகளுக்கு சென்று பெற்ற பயிற்சிகளால் எந்த நன்மையும் ஏற்படவில்லை என உயர் கல்வி ராஜாங்க அமைச்சர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

உயர்கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு அவர்களுக்கு தேவையானது வழங்கப்பட வேண்டுமேயன்றி அரசாங்கத்திற்கு தேவையானதை அவர்களுக்கு வழங்கக் கூடாது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இனிவரும் காலங்களில் தலைமைத்துவப் பயிற்சி ரத்துச் செய்யப்பட்டு பல்கலைக்கழக மாணவர்களுக்காக பலன் தரும் நிகழ்ச்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும் எனவும் உயர்கல்வி ராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## 6 அமைச்சர்கள் சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரும் இராஜாங்க அமைச்சரும் பிரதியமைச்சர்கள் நால்வரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முன்னிலையில் நேற்று புதன்கிழமை சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக முஸ்லிம் விவகாரங்கள் மற்றும் தபால் அமைச்சிற்கு அப்துல் ஹலீம் மொஹமட் ஹசிம்,

சுகாதார இராஜாங்க அமைச்சராக மொஹமட் தம்பி ஹசன் அலி மற்றும் சமூக சேவைகள், நலன்புரி மற்றும் கால நடைகள் அபிவிருத்தி பிரதியமைச்சராக ரஞ்சன் ராமநாயக்க, மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பிரதியமைச்சராக வசந்த அலுவிஹார, வீடமைப்பு மற்றும் சமுர்த்தி பிரதியமைச்சராக அமீர் அலி சாஹாப்தீன், உள்ளக போக்கு வரத்து பிரதியமைச்சராக மொஹமட் ஷரீப் தௌபீ ஆகியோர் சத்தியபிரமாணம் செய்து கொண்டனர். (செ-11)

### சர்வதேச விமான நிலையங்களிலுள்ள

## வர்த்தக நிலையங்களின் அனுமதிப்பத்திரம் இரத்து

(கொழும்பு)

மத்தல மற்றும் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையங்களிலுள்ள அனைத்து வரியற்ற வர்த்தக நிலையங்களினதும் அனுமதிப பத்திரங்களை இரத்து செய்யுமாறு விமான போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் பைஸர் முஸ்தபா உத்தரவிட்டுள்ளார்.

அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் தலைவர்களுடன் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போதே, அவர் இதனை தெரிவித்துள்ளார்.

முன்னைய காலங்களில் நிர்வாகத்தினரால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்கள் அனைத்தும் தற்காலிகமாக வழங்கப்பட்டிருந்தன. தற்போது இவ்விரண்டு விமான நிலையங்களிலும் உள்ள வரியற்ற வர்த்தக நிலையங்களின் அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்வதற்கு தீர்மானித்துள்ளோம்.

மேலும், இதற்குரிய அதிகாரிகள் வரியற்ற வர்த்தக நிலையங்களை நடத்துவதற்கான, நடைமுறையிலுள்ள மற்றும் வெளிப்படைத்தன்மையுள்ள கேள்விப்பத்திரத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

பண்டாரநாயக்க சர்வ தேச விமான நிலையத்தில் வரியற்ற வர்த்தக நிலையங்கள் 56 உள்ளன. இதேவேளை மத்தல விமான நிலையத்தில் தனியொருவருக்கு மாத்திரம் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)



## சத்திய தரிசனம்

### நிமிர்ந்து நில் தொடர்ந்து செல்


❖ பொருள் தேடும் முயற்சியில் ஆயிரத்தில் ஒரு பங்கையாவது கடவுளுக்காக செலவிடுங்கள்.

❖ இதயம் என்னும் பலு?னில் எப்போதும் நம்பிக்கை என்னும் காற்றை மட்டுமே நிரப்புங்கள்.

❖ துன்பத்தில் சிக்கித் தவித்தாலும், மனதில் மகிழ்ச்சியை இழக்காதவன் கடவுளுக்கு நிகரானவன்.

❖ கடவுளைக் கட்டும் சக்தி பக்திக்கு மட்டுமே உண்டு. பணத்தால் அவரை யாரும் விலைக்கு வாங்க முடியாது.

❖ சத்தான உணவால் உடல் பலம் பெறுவது போல, நல்ல எண்ணத்தால் மனம் பலம் பெறுகிறது.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### ருத்ராட்சமும் அதன் பலன்களும்

ருத்ராட்சம் என்ற பெயர் சிவபெருமானின் மற்றொரு பெயரான "ருத்திரன்" என்ற பெயரிலிருந்து வந்ததாகும். சிவபெருமானின் மூன்று கண்களில் இருந்து விழுந்த ஆனந்தக் கண்ணீரில் இருந்து முப்பத்திரெட்டு விதமான ருத்ராட்சம் தோன்றியதாக புராண வரலாறுகள் தெரிவிக்கின்றன.


சிவனின் வலது கண்ணில் இருந்து மஞ்சள் நிற 12 விதமான ருத்ராட்சமும், இடது கண்ணில் இருந்து வெண்மை நிறத்துடன் 16 விதமான ருத்ரட்சமும், நெற்றிக் கண்ணில் இருந்து 10 விதமான கறுப்பு நிற ருத்ராட்சமும் தோன்றியதாக புராணங்கள் தெரிவிக்கின்றன.

ருத்ராட்சம் ஒரு முகம் முதல் பதினாறு முகங்கள் கொண்டதாக இருக்கும். அதன் மீது உள்ள கோடுகளைக் கொண்டுதான் எத்தனை முகங்கள் உள்ளது என்பதை தெரிந்து கொள்ளலாம்.

ருத்ராட்சத்தை சாணைக்கல்லில் உரைத்தால் அது மஞ்சள் நிறத்தில் தங்கம் போல் பிரகாசிக்கும். நல்ல வர்ணமுள்ள ருத்ராட்சத்தை அவற்றிற்கு என்று உள்ள இடங்களில் மட்டுமே தரிக்க வேண்டும். நீரில் போட்டால் மிதக்காமல் மூழ்கிவிடும், மேலும் இரண்டு செப்பு தகடுகளுக்கு இடையில் வைத்து சோதனை செய்தால் சுற்றக்கூடியதுமான ருத்ராட்சங்கள் மிகவும் விசேஷமானவையாக கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெஸ்ஸி ஹாட்ரிக் கோல் பார்சிலோனா அபார வெற்றி



லா லிகா காற்பந்து தொடரில், டிபோர்டிவோ அணிக்கு எதிரான போட்டியில் பார்சிலோனா அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஸ்பெயினில் உள்ள கிளப் அணிகளுக்கு இடையிலான ஸ்பானிஷ் லீக் தொடரின் நடைபெற்ற ஆட்டத்தில் பார்சிலோனாவும், டிபோர்டிவோ அணியும் மோதின.

போட்டியின் ஆரம்பத்தில் சில நிமிடத்திலேயே மெஸ்ஸிக்கு ஒரு கோல் அடிக்க வாய்ப்பு கிடைத்தது. அதை டிபோர்டிவோ அணியின் கோல் கீப்பர் பேப்ரிசியோ தடுத்தார். ஆனால், 11ஆவது நிமிடத்தில் இவான் ரேகிடிச் கொடுத்த கிராப்ஸ் அற்புதமாக தலையால் முட்டி கோல் அடித்தார் மெஸ்ஸி.

பின்னர், 33ஆவது நிமிடத்தில் சக வீரர் நெய்மர் பாஸ் கொடுக்க, நேர்த்தியாக கோல் கீப்பரை ஏமாற்றி மெஸ்ஸி கோல் அடிக்க, பார்சிலோனா முதல் பாதியில் 2-0 என முன்னிலை பெற்றது.

பிற்பாதியிலும் பார்சிலோனாவின் கை ஓங்கி இருந்தது. 62ஆவது நிமிடத்தில் தனது இடது காலின் மூலம் தனது பிரத்தியேக ஷாட் மூலம் மெஸ்ஸி கோல் அடிக்க, டிபோர்டிவோ நிலை குலைந்தது.

போட்டி முடிவதற்கு பத்து நிமிடங்கள் இருந்த போது டிபோர்டிவோ அணியின் பின்கள வீரர் சிட்னே "சேம் சைடு" கோல் அடித்தார். முடிவில் பார்சிலோனா 4-0 என வெற்றி பெற்றது.

மெஸ்ஸி இதுவரை பார்சிலோனா அணி சார்பில் 30 ஹாட்ரிக் கோல்கள் அடித்துள்ளார். அவரை அணியின் மேலாளர் லூயிஸ் என்ரிக் ஏகத்துக்கும் புகழ்ந்துள்ளார். சமீப காலமாக இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடு நிலவியது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, ரியல் மாட்ரிட் அணி கெடாஃபே அணியை 3-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. இந்த ஆட்டத்தில், உலகின் சிறந்த வீரர் விருதை வென்ற ரியல் மாட்ரிட் அணியின் நட்சத்திர வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ 2 கோல்கள் அடித்தார்.

புள்ளிகள் பட்டியலில் ரியல் மாட்ரிட் 45 புள்ளிகளுடன் முதலிடத்திலும், பார்சிலோனா 44 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், லா லிகா சாம்பியனான அட்லெ டிகோ மாட்ரிட் 41 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன. (க)

# மோசமான துடுப்பாட்டமே தோல்விக்கு காரணம் டோனி



முத்தரப்பு கிரிக்கெட்டில் இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் மோசமான தோல்வியை தழுவியது ஏன் என இந்திய அணித் தலைவர் டோனி விளக்கம் அளித்துள்ளார்.

இது குறித்து டோனி கருத்து வெளியிடுகையில்,

எங்களது துடுப்பாட்டம் சிறப்பாக இல்லை. அதுவும் முதலில் துடுப்பாட்டத்தை தேர்ந்தெடுத்த நிலையில் வீரர்கள் விளையாடிய விதம் ஏமாற்றம் அளிக்கிறது.

பந்து எழும்பிச் செல்வதும், திடீரென தாழ்ந்து வருவதும் என்று ஆடுகளத்தில் இரண்டு வித தன்மை காணப்பட்டது.

எங்களுக்கு வலுவான ஒரு இணைப்பாட்டம் தேவைப்பட்டது. ஆனால் அதுபோன்று நடக்கவிலலை. எப்போதுமே இதுபோனற நிலையில் நல்ல தொடக்கம் அமைய வேண்டியது முக்கியம்.

அதற்காக எந்த நேரமும் தொடக்க ஆட்டக்காரர்கள் ஓட்டங்களை குவித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று அர்த்தமல்ல.

தொடக்க விக்கெட்டுகள் விரைவில் சரிந்தால், அதன் பிறகு அடுத்து வரும் துடுப்பாட்ட வீரர் நிலைத்து நின்று இணைப்பாட்டம் கொடுத்து, 30ஆவது ஓவர் வரை ஓரளவு நல்ல ஆட்டத்தை நகர்த்த வேண்டியது முக்கியம்.

அதன் பிறகு ஓட்டங்கள் வேகத்தை தீவிரப்படுத்தலாம். இந்தப் போட்டியில் விக்கெட்டுகளை தக்க வைக்க முடியாமல் போனது பெருத்த பின்னடைவை ஏற்படுத்தியது.

இணைப்பாட்டத்தை ஏற்படுத்த முயற்சித்த சமயத்தில் அம்பத்தி ராயுடுவை இழந்தோம். அதன் பிறகு தடுப்பாட்டத்தில் கவனம் செலுத்தி பார்ட்னர்ஷிப்பை (டோனி-பின்னி) உருவாக்கினோம்.

ஆனால் ஓட்டங்கள் சேகரிப்பை வேகப்படுத்த முனைப்பு காட்டிய நேரத்தில் மறுபடியும் விக்கெட்டை இழந்ததால் அடுத்து வந்த வீரர்களால் ஓட்டங்கள் எடுக்க இயலவில்லை.

எப்போதுமே களத்தில் சோபிக்க தவறும் போது விமர்சனங்கள் வரத்தான் செய்யும். இது விளையாட்டின் ஒரு அங்கம். இதே துடுப்பாட்ட வரிசையை கொண்ட அணி தான் 2013ஆம் ஆண்டு இங்கிலாந்தில் சம்பியன் கிண்ணத்தை வென்றதுஎன்பதைமறந்துவிடக்கூடாது.

இதே வீரர்கள் அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடரில் கடுமையாக போராடினார்கள் என்பதையும் மறந்து விட வேண்டாம். உலகக் கிண்ணத்திற்கு முன்பாக கிடைக்கும் நேரத்தை பயனுள்ளதாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

வீட்டை விட்டு 4 1/2 மாதங்கள் பிரிந்து இருப்பது கடினமான விடயம் தான். ஆனால் தேவையான நேரத்தில் முழு கவனமுடன் வேகத்தை காட்ட வேண்டும் என டோனி தெரிவித்துள்ளார். (க)

# அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் ஷரபோவா 3வது சுற்றுக்கு தகுதி



கிராண்ட் சிலாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்பேர்ன் நகரில் நடைபெற்று வருகிறது.

அவுஸ்ரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் மகளிர் பிரிவின் 2 ஆவது சுற்று ஆட்டத்தில் டென்னிஸ் தரவரிசை பட்டியலில் 2ஆவது நிலையில் உள்ள ரஷ்யாவின் மரியா ஷரபோவா போராடி வெற்றி பெற்றார்.

தனது சக நாட்டவரான அலெக்சாண்ட்ரா பனோவாவை எதிர்த்து விளையாடிய ஷரபோவா, முதல் செட்டை 6-1 என்ற புள்ளிக்கணக்கில் கைப்பற்றினார். ஆனால் 2ஆவது செட்டை 4-6 என்ற புள்ளிக்கணக்கில் பறிகொடுத்தார். எனினும் 3ஆவது செட்டில் சுதாரித்து விளையாடிய அவர் அந்த செட்டை 7-5 என்ற புள்ளிக்கணக்கில் 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்ற ஆட்டங்களில் 10ஆம் நிலை வீராங்கனை மகரோவா (ரஷ்யா), 21ஆவது வரிசையில் இருக்கும் பெங் (சீனா), கரோலினா (செக்குடியரசு) ஆகியோர் வென்று 3ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றனர்.

6ஆம் நிலை வீரரான ஆண்டி முர்ரே (இங்கிலாந்து) இரண்டாம் சுற்றில் 6-1, 6-3, 6-2 என்ற நேர் செட் கணக்கில் அவுஸ்திரேலிய வீரர் மரின் கோவை வீழ்த்தினார்.

இதேபோல 7ஆம் நிலை வீரர் தாமஸ் பெர்டிச் (செக் குடியரசு) 7-6 (7-0), 6-2, 6-2 என்ற செட் கணக்கில் ஆஸ்திரியா வீரர் மெல்சரை வீழ்த்தினார்.

மற்ற ஆட்டங்களில் ரிச்சர்டு (பிரான்ஸ்), பகாதிஸ் (சைப்பிரஸ்), கெவின் ஆண்டர்சன் (தென்னாபிரிக்கா) ஆகியோர் வென்று 3ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றனர். (க)

SPORTS விளையாட்டுச் செய்திகள்

# டேவிட் வார்னருக்கு ஓய்வு



முத்தரப்பு கிரிக்கெட்டில் அவுஸ்திரேலிய அணி தனது அடுத்த ஆட்டத்தில் நாளை இங்கிலாந்தை எதிர்கொள்கிறது. இந்த போட்டிக்கான அவுஸ்திரேலிய அணியில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

மெதுவாக பந்து வீசிய புகாரில் சிக்கிய அவுஸ்திரேலிய கப்டன் ஜோர்ஜ் பெய்லிக்கு ஒரு ஆட்டத்தில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளதால், அவருக்கு பதிலாக ஸ்டீவன் சுமித் அணியை வழிநடத்துவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

லேசான தசைப்பிடிப்பு பிரச்சினையால் அவதிப்படும் டேவிட் வார்னருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு பதிலாக ஷான் மார்சும், கேமரூன் ஒயிட்டும் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். சொந்த விடயம் காரணமாக விலகியுள்ள வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஜோன்சன் இந்த ஆட்டத்திலும் இடம் பெறமாட்டார்.

அவுஸ்திரேலிய அணி வருமாறு:- ஆரோன் பிஞ்ச், ஷான் மார்ஷ், ஷேன் வாட்சன், ஸ்டீவன் சுமித் (கப்டன்), கேமரூன் ஒயிட், மேக்ஸ்வெல், பிராட் ஹேடின், ஜேம்ஸ் பவுல்க்னெர், மிட்செல் ஸ்டார்க், கம்மின்ஸ், குரிந்தர் சந்து, டோஹர்த்தி. (க)

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக



பொற்பதி விளையாட்டுக் கழகம் மென்பந்தாட்ட சுற்றுப்போட்டியொன்றை நடத்தவுள்ளது.

இம் மென்பந்து சுற்றுப்போட்டி அணிக்கு 6 பேர் 5 பந்துப்பரிமாற்றங்களை கொண்டதாக இடம்பெறும்.

வருடாந்தம் நடத்தப்படும் மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப் போட்டி இவ்வருடமும் பொற்பதி விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்படவுள்ளது. இச்சுற்றுப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் அணிகள் 23.01.2015 இற்கு முதல் 077 444 0128 ,077 237 0259 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் மட்டுப்படுத்தப்பட்ட அணிகளே போட்டிகளில் சேர்க்கப்படவுள்ளதாகவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி சுவீகரிப்பை....



காலை 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கூழாவடியில் உள்ள இராணுவ முகாம் அமைந்துள்ள காணி தனியார் காணியாகவுள்ள நிலையில் அதனை இராணுவம் சுவீகரிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்துள்ளது.

இவ் காணி சுவீகரிப்பு ஆயத்தங்கள் குறித்த காணி உரிமையாளர்களுக்கு தெரியப்படுத்தாமலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் காணி உரிமையாளர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையிலும் ஆர்ப்பாட்டத்தினைக் குழப்பும் வகையில் இராணுவம் மற்றும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் செயற்பட்டுள்ளனர் எனக் குற்றஞ் சாட்டியுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மக்களினைத் தொடர்ந்தும் தமது கட்டுப்பாட்டிற்கு கீழ் வைத்திருக்கவே இராணுவம் விரும்பி வருகின்றது. ஆர்ப்பாட்டம் செய்வதாக அறிவிக்கப்பட்ட பின்னர் ஜனாதிபதி குறித்த காணி சுவீகரிப்பு இடம்பெற மாட்டாது எனக் கூறியுள்ளார்.

வர்த்தமானி அறிவிப்பு வெளி வந்துள்ள நிலையில் காணிக்குள் உரிமையாளர்கள் செல்ல முடியாத நிலையும் காணி உரித்து பறிக்கப்பட்ட நிலையும் காணப்படுகின்றது. காணி சுவீகரிப்புத் தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மீளப் பெறப்பட்டு காணி உரிமையாளர்கள் காணிக்குள் செல்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

தற்போது சுவீகரிக்கப்பட மாட்டாது என அறிவித்து விட்டு பின்னர் அதனை அனைவரும் மறந்த பின்னர் சுவீகரிப்பதற்கு நடவடிக்கையில் ஈடுபடுவதனைத் தவிர்க்க வேண்டும்.

எமது ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள வந்தவர்களையும் இராணுவம் அச்சுறுத்தி திருப்பி அனுப்பி உள்ளது என்றார் அவர். இவ் ஆர்ப்பாட்டத்தில் வட மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன், வலி.வடக்கு பிரதேச சபையின் உப தலைவர் எஸ்.சஜீவன் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (செ-4)

## ஜெனரலானார்...

பதியாக இருந்த சரத் பொன்சேகா, போர் முடிந்த பின்னர், அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் முரண்பட்டு, 2010 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் எதிரணி வேட்பாளராக மகிந்தவுக்கு எதிராகப் போட்டியிட்டார்.

ஆனால் மகிந்த ராஜபக்ஷ அத்தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் பதவிக்கு வந்த பின்னர், பொன்சேகா கைது செய்யப்பட்டு, அவர் மீது ராணுவ நீதிமன்றம் விசாரணைகளை நடத்தி, அவரது இராணுவ அந்தஸ்து பறிக்கப்பட்டது.

இப்போது நடந்து முடிந்த தேர்தலில் சரத் பொன்சேகா எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளித்த நிலையில், அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தற்போது ரத்து செய்யப்பட்டிருக்கின்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் சரத் பொன்சேகாவின் பறிக்கப்பட்ட கௌரவங்கள் யாவும் வழங்கப்படும் என்று உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## கொடூர வாள்வெட்டு....

டுக் காயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

வாள் வீச்சுக்கு இலக்கான நிலையில் படுகாயம் அடைந்த இளம் குடும்பப் பெண்ணான சுஜந்தன் தனுசா (வயது 24) யாழ்.போதனா வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகிறார்.

மேற்படி வாள் வெட்டுச் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு இரவு 12 மணியளவில் அறிவித்ததாகவும் இருப்பினும் பொலிஸார் காலை 8.00 மணிக்கே வீட்டுக்கு வருகை தந்ததாகவும் உயிரிழந்த குடும்பத்தின் உறவினர்கள் தெரிவித்தனர்.

இச் சம்பவத்தில் உயிரிழந்த குடும்பஸ்தரின் மரணம் தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை வாள் வெட்டுக்கு இலக்கான குடும்பப் பெண் தன் மீதும் தனது கணவர் மீதும் வாள் வெட்டு மேற்கொண்ட நபர்களை அடையாளம் காட்டத் தயார் என கூறியுள்ளார் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் தாய் தந்தை மீது வாள்வெட்டு மேற்கொள்ளப்பட்ட போதும் அவர்களின் 4 வயதான இரட்டைக் குழந்தைகள் அதிர்ஷ்டவசமாக காயங்கள் ஏதும் இன்றித் தப்பித்துள்ளன. (செ-4,6)

## பட்டதாரிகள்...




இடம்பெற்றுள்ளது.

இப் பேராட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் கலந்து கொண்டிருந்ததோடு, எச்.என்.டி.ஏ உயர் தொழில்நுட்ப பட்டதாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

மாவட்டச் செயலகம் அருகாமையில் ஒன்றுகூடிய மாணவர்கள் தமக்கான வேலை வாய்ப்புக்களினை பொறுத்தருமாறு அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது வட மாகாண பட்டதாரிகள் சங்கம் ஒன்றினை அங்குரார்ப்பணம் செய்ததோடு அதற்கான நிர்வாகம் ஒன்றினையும் தெரிவு செய்திருந்தனர். பல்கலைக்கழகப் பட்டப் படிப்புகள் முடிவுற்று பட்டம் பெற்று பல வருடங்கள் ஆகின்ற நிலையிலும் எமக்கான உரிய வேலைவாய்ப்புகள் பெற்றுத் தரப்படவில்லை மாறாக ஒவ்வொரு அரசியல்வாதிகளும் எம்மைத் தமது சுயநலங்களுக்காக கடந்த காலங்களில் பயன்படுத்தி வந்தனர் என பட்டதாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் 2011-ம் ஆண்டிற்குப் பின்னரான எச். என்.டி.ஏ பட்டதாரிகளுக்கும் வேலை வாய்ப்புக்களை அரசு பெற்றுத் தரவேண்டும் எனவும் குறித்த ஆர்ப்பாட்டத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. ஆர்ப்பாட்டத்தின் முடிவில் வடக்கு மாகாண முதலமைச்சர், ஆளுநர், யாழ்.மாவட்ட அரச அதிபர் ஆகியோருக்கும் மகஜரும் கையளிக்கப்பட்டது. (செ-4)

# எமது நன்னீரை...



துடன் நடைபெற்ற இவ் போராட்டத்தில் பெருந்தொகை மாணவ, மாணவிகள் பங்கேற்றிருந்தனர்.

நேற்று பி.ப. 2.30 மணியளவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி முன்பாக ஆரம்பமாகிய இப் போராட்டம் சுமார் ஒரு மணித்தியாலம் வரை நீடித்திருந்தது. ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்த மாணவர்கள்,

உந்தன் எண்ணை இலாபத்திற்கு எங்கள் நன்னீர் பலிக்கடாவா? மாணவர், ஆசிரியர் வாய்களில் நச்சு நீரை ஊற்றாதே, பாட்டன் பூட்டன் வெட்டிய கிணற்றில் கம்பனி கழிவு எண்ணையை நிரப்பாதே ! நன்னரை நஞ்சாக்கி எங்கள் வாழ்வை பாழாக்காதே, பிரச்சினைக்கான மூலத்தை கணடறியுங்கள், உடனடித் தீர்வு தாருங்கள், கம்பனிக்கு இலாபம் பெருகுகின்றது. கிணறுகளில் எண்ணை ஊறுகின்றது, குழு என்றும் விசாரணையென்றும் காலத்தை கடத்தாதீர்கள் எனப் பல வாசகங்கள் அடங்கிய சுலோகங்களினையும் ஏந்தியிருந்தனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, மாக்கிச லெனினிசக் கட்சி ஆகியோரும் கலந்து கொண்டு எதிர்ப்பினை வெளியிட்டிருந்தனர்.

சுன்னாகம் நொதேர்ன் பவர் நிறுவனத்திற்குச் சொந்தமான மின்பிறப்பாக்கியிலிருந்து வெளியேறும் கழிவொயிலினால் சுன்னாகம் பிரதேசம் மிகமோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போது இக் கழிவெண்ணெய் தாக்கம் தீவிரமடைந்து பல கிலோ மீற்றர்களுக்கு அப்பால் உள்ள தாவடி, தெல்லிப்பழை மற்றும் அத னையண்டிய இடங்களிலும் எண்ணெய் கசிவு ஏற்பட்டுள்ளது.

இதனால் குடிநீர் உட்பட அனைத்து தேவைகளிற்கான நீர் கழிவு எண்ணெய் கலப்பிற் குள்ளாகி மாசடைந்துள்ளன.

இந் நிலைமை பாடசாலைகளிற்கும் தற்போது ஏற்படத் தொடங்கியுள்ளமையினால் இது தொடர்பில் உரிய நடவடிக்கை யெடுக்குமாறு மாணவர்கள் போர்க் கொடி தூக்கியுள்ளனர்.

கழிவொயில் பிரச்சினை விஸ்வரூபம் எடுத்துள்ள நிலையில் பல போராட்டங்கள் அதற்கெதிராக பொதுமக்களினாலும் பொது அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகளாலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான நிலையில் சுன்னாகம் கழிவு எண்ணெய் தொடர்பில் ஆய்வு மேற்கொள்வதற்கு என வடக்கு மாகாண சபையினால் நியமிக்கப்பட் 9 பேர் கொண்ட குழு நேற்று பிற்பகல் 1.15 மணியளவில் யூனியன் கல்லூரிக்குச் சென்று அங்குள்ள கிணற்று நீரைப் பரிசோதித்து பார்த்துவிட்டு இங்கு குறைந்தளவில் தான் எண்ணெய் பரவி உள்ளது எனக் கூறிவிட்டுச் சென்றுவிட்டார்கள் எனப் பாடசாலை மாணவர்கள் தெரிவித்ததோடு குழு என்றும் விசாரணை என்று காலத்தை இழுத்தடிப்புச் செய்தால் எமது [illegible] எச்சரித்துள்ளனர். [illegible]


# இலங்கைத்திறந்த பல்கலைக்கழகம்
## யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம்
## கல்வியாண்டு 2015/16

இலங்கைத்திறந்த பல்கலைக்கழகத்தினால் பின்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

| கற்கைநெறிகள் | அனுமதித்தகைமைகள் | மொழி | கற்கை நெறிக்கானகாலம் | விண்ணப்பிக்கும் காலம் |
|---|---|---|---|---|
| முகாமைத்துவ இளமாணிக் கற்கை நெறி (Bachelor of Management Studies Degree) | க.பொ.த உயர்தரத்தில் (பழைய பாடத்திட்டம்) நான்கு பாடங்களில் சித்தி அல்லது க.பொ.த உயர தரத்தில் (புதியபாடத்திட்டம்) மூன்று பாடங்களில் சித்தி அல்லது இலங்கைத்திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் யாதாயினும் அத்திபாரக் கற்கைநெறிச்சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும் (முதல் இரண்டுவருடக்கற்கை நெறியைப் பூர்த்திசெய்யும் பட்சத்தில் முகாமைத்துவ டிப்ளோமாச்சான்றிதழ் பெற்றுக் கொள்ளமுடியும்) | தமிழ்/ ஆங்கிலம் | 4 வருடங்கள் | 13.01.2015 - 13.02.2015 |
| தொழிலுரிமைத்துவமும் சிறுவணிக முகாமைத்துவமும் சான்றிதழ் கற்கைநெறி | க.பொ.த சாதாரணதரத்தில் கணிதம் மற்றும் தமிழ்மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் | தமிழ் | 1 வருடம் | 30.12.2014 - 28.01.2015 |
| முன்பள்ளிகல்விச் சான்றிதழ் கற்கைநெறி | க.பொ.த சாதாரணதரத்தில் கணிதம் மற்றும் தமிழ்மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் | தமிழ் | 1 வருடம் | 30.12.2014 - 30.01.2015 |

இக்கற்கைநெறிகளுக்கானவிண்ணப்பப்படிவங்கள் பின்வரும் கற்கை நிலையங்களில் தற்போது விநியோகிக்கப்படுகின்றது.

| நிலையம் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் | பிறவுண் வீதி,கொக்குவில், யாழ்ப்பாணம் | 0212223374 |
| வவுனியா கற்கை நிலையம் | இல.366, கண்டிவீதி, தேக்கவத்தை, வவுனியா | 0242222995 |
| கிளிநொச்சி கற்கை நிலையம் | 155ஆம் மைல்கல், கண்டி வீதி, கிளிநொச்சி | 0212283970 |
| முல்லைத்தீவு கற்கை நிலையம் | ஆதிபராசக்தி அறிவியல் கல லூரி, 4ஆம் வட்டாரம், இரணைப் பாலைவீதி, புதுக்குடியிருப்பு | 0766596615 |

பதிவாளர்,
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

(சி-9890)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பேதுருப்பிள்ளை பிபியானம்மா



மண்டைதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பேருதுப்பிள்ளை பிபியானம்மா நேற்று 21.01.2015 புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற அந்தோனிமுத்து பேதுருப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - அந்தோனியாப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அந்தோனிமுத்து - றோசம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சுவாம்பிள்ளை மற்றும் சூசைப்பிள்ளையின் அன்புச் சகோதரியும் Dr. அந்தோனிப்பிள்ளை (UK), சூசைதாஸ், ஸ்ரனிஸ்லஸ் (UK), மரியமற்றில்டா (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயும், எட்னாறோஸ் (UK), மேரிமாகிறெற் (கனடா), செல்வநேசம் (UK), கனிஸ்ரஸ் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும், Dr. அஜந்தன் (UK), Dr. றொமானா (UK), சுரேன், சுதாசன், சுகந்தன், சுலக்ஷனா (கனடா), சுலக்ஷன் (புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி), பியோஜன் (UK), சியோபின் (UK), அனிற்ரஸ் (நோர்வே), ஜெனிற்ரஸ் (நோர்வே), சியானா (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், லூக்கா, லாஸ், ஷிறோன், றொய்ஸ்ரன், றோஷன், சுவிஷ்கன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (23.01.2015) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து மண்டைதீவில் உள்ள அவரது இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 10.00 மணியளவில் புனித பேதுருவானவர் ஆலயத்தில் இறுதித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

44, கோவில் வீதி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (C-9892)

தகவல் :
பிள்ளைகள்

## அம்பலவாணர் கனகசுந்தரம்
## (இளைப்பாறிய தபால் அதிபர்)



காரைநகர் நடுத்தெருவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய தபாலதிபர் அம்பலவாணர் கனகசுந்தரம் நேற்று முன்தினம் (20.01.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோதிமணியின் அன்புக் கணவரும், அமரர் அம்பலவாணர் அன்னம்மா தம்பதிகளின் ஆசை மகனும், அமரர் நாகலிங்கம் அருளம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், அற்புதமலர் (கனடா), சிவமலர் (பிரான்ஸ்), அற்புதராசா (ஜேர்மனி), ஆனந்தராசா (காரைநகர்), சிவராசா (பிரான்ஸ்), அன்னமலர் (காரைநகர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அமரர் பாலச்சந்திரன் (பேபி - முன்னாள் ஆங்கில ஆசிரியர் யாழ்ற்ரன் கல்லூரி), அமரர் ஸ்ரீஸ்கந்தராசா, இராஜதுரை (கிராமசேவையாளர் காரைநகர் ஜே/43), தினமணி, கமலாதேவி, லோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், மீரா, ராகுல், கஜன், ரோஜினி, செந்தூரன், மயூரன், ஆர்த்திகன், அஜிதன், அருந்தா, அமிர்தா, அரிகரன், அரவிந்தன், மதுசன், மதுரா, மதுசங்கர், பவானந்தன், லக்சிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் காரைநகர் நடுத்தெருவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (22.01.2015) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள். (C-9895)

நடுத்தெரு, காரைநகர்.
தொ.பேசி இல. 021 320 9261

## இனப்பிரச்சினைக்கு தீர்வு...

இடதுசாரிகளான நாங்கள் ஜனாதிபதித தேர்தலை நடத்த வேண்டாம்என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கூறினோம்.

தேர்தலில் தோல்வியடைந்து தற்பொழுது ஆராயப்படும் தேர்தல் தோல்விக்கான காரணங்களை நான் மகிந்த ராஜபக்ஷவிடம் தேர்தலுக்கு முன்னரே சுமார் இரண்டு மணி நேரம் விளக்கி கூறினேன். இன்னும் இரண்டு வருடங்கள் இருக்கின்றன.

இரண்டு வரவு செலவுத்திட்டங்களை தாக்கல் செய்யலாம். மக்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகள உள்ளன.

இனப்பிரச்சினை, தேர்தல் முறை திருத்தம், அரசியல் அமைப்புத்திருத்தம் போன்ற தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளை தீர்த்துவிட்டு தேர்தலுக்கு செல்லலாம் என நான்கூறினேன். நாங்கள் கூறியதை அவர்கணக்கில் எடுத்துகொள்ளவில்லை.

அரசியல் முடிவுகளை எடுப்பது மகிந்த ராஜபக்ஷவிற்கு இருக்கும் உரிமை. அரசியல் மற்றும் சமூக சக்திகள் எப்படியான நிலைமையில் இருக்கின்றன என்பதை புரிந்து கொள்ளும் திறன் தேசிய தலைவர்களுக்கு இருக்க வேண்டும் என்பதற்காக இதனை நான் பதிவு செய்கிறேன்.

நாட்டின் அரசியல சூழ் நிலைகளை உணர்ந்து தேர்தலை நடத்துவதா இல்லையா என்பது குறித்து தீர்மானம் எடுக்க முடியாமல் போனது தொடர்பில் நான் கவலையடைகின்றேன்.

மகிந்த ராஜபக்ஷ வெற்றிபெற முடியாது என்பதற்கான காரணங்களை ஒவ்வொன்றாக அவருக்கு எடுத்து கூறினேன்.

சகலசாதக பாதகங்களை அடிப்படையாக கொண்டு அதனை அரசியல் ஆய்வாக நான் மேற்கொண்டேன் எனவும் டியூ. குணசேகர குறிப்பிட்டுள்ளார். (செ-11)

Spoken English
Veta Fluency Diploma
புதிய பிரிவுகள் ஆரம்பம்.
veta
Experts in English Training
சனி, ஞாயிறு காலை 10.00 மணிக்கு
(யாழ் நகர்)
அறிமுக முதல் வகுப்பு இலவசம்
பதிவுகளுக்கு
பெயர் மற்றும் விலாசத்தினை SMS செய்யுங்கள் 0777240707
மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி (C-9897)
Come, let's speak fluent English
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம்
No.113. கன்னாதிட்டி வீதி,
(சயன்ஸ் ஹோல் அருகாமை)
Tel.: 021-222 4403

2 மணித்தியாலத்தில்
கணினி திருத்தம்
உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள் திருத்தி தருகிறோம் அழையுங்கள்
0779086737 Computer Repair
GUNAA BEST PC 52, Hospital Road Jaffna.

வேலைவாய்ப்பு
யாழ்ப்பாணத்தில் சர்வதேச ரீதியில் இயங்கிக் கொண்டிருக்கும் Ds -Max நிறுவனத்துக்கு புதிய கிளைகளைஆரம்பிக்க பல்வேறுபட்ட பதவி வெற்றிடங்கள்
■ விற்பனைப் பிரதிநிதி ■ மேற்பார்வையாளர்
■ துணை முகாமையாளர்
இப்பதவிகளுக்கு வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய இடங்களில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. (C-9894)
தங்குமிடம் இலவசம் வயதெல்லை 18 - 28
தொடர்புகளுக்கு
0771363797, 0777981471, 0214545634

A/L அரசியல்
K.சுகாஷ்
2016 பிரிவு II
2015 இலங்கை அரசியல்
ஆரம்பம் - 24.01.2015
DAY CLASS & 2015
Paper Class
அலகு ரீதியான பட்டல்
கருத்தரங்குகள்
M.C.Q
குறுவினாக்கள்
கட்டுரை வினாக்கள்
மாதிரிப்பரீட்சைகள்
(9219)
DCM யாழ்.நகர்
SUBRA சித்தங்கேணி
DCM சுன்னாகம்
அஸ்மின் சண்டிலிப்பாய்

## ஜெனர...

இலங்கையின் முன்னாள் ராணுவ தளபதி சரத் பொன்சேகா மீது சுமத்தப்பட்ட அனைத்துக் குற்றச்சாட்டுக்களையும் ரத்து செய்து அவருக்கு முழு மன்னிப்பு வழங்கப்படுவதாக ஜனாதிபதி அலுவலகம் பகிரங்கமாக அறிவித்துள்ளது.

அரசியல் அமைப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் ஜனாதிபதி இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.

போரின் இறுதிக் காலத்தில் இலங்கை ராணுவத்துக்கு தள

23ஆம் பக்கம் பார்க்க....

A/L பொருளியல்
வினா - விடை
விடயத்தலைப்புகளுக்கேற்ப ஒழுங்குபடுத்தப்பட்டது.
உயர்சித்திபெற இலகு வழிகாட்டி
வே.கருணாகரன்
ஆசிரியர்
பொருளியற் கல்லூரி
(9216)
பூபாலசிங்கம் புத்தகசாலை / அன்னை புத்தகசாலை

B.B.A, Bcom (MEDIUM TAMIL)
இலங்கை தென்கிழக்கு
பல்கலைக்கழகம் (வெளிவாரி)
● மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
● A/L-ல் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.
● கற்கைநெறிக்கான கால எல்லை மூன்று ஆண்டுகளாகும்.
● பதிவு முடிவு திகதி 28.01.2015
● விரிவுரைகள் ஆரம்பம் :- 24.01.2015 காலை (8 மணி)
(C-9878)
விபரங்கட்கு
S.அருள்நங்கை (நிர்வாகி)
புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம். 021 222 8148

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.01.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.